தமிழ்நாடெங்கும் வெற்றி!

7-11-48 முதல்

மகத்தான 2-வது வாரம்

மோகினி

ஜூபிடரின் உன்னதச் சித்திரம்

எபிட்ரெக்ஸ்

கீழ்க்கண்ட உபாதைகளுக்கு
கைகண்ட மருந்து:

- ★ கக்குவான்
- ★ ஆஸ்துமா
- ★ மார்ச்சளிநோய்
- ★ நெஞ்சுக்கோளாறுகள்

ஆசுவாசப்படுத்துவது. சுவையுள்ளது
சாந்தப்படுத்துவது.

AL 656 TM

★ ★ இது ஒரு அலெம்பிக் தயாரிப்பு

பார்லிக் கஞ்சி தயாரிக்க சுலபமான முறை

இரண்டு [illegible] பார்லியை சிறிது ஜலத்தில் பசைபோல் கரைத்து. பின் இரண்டு டம்ளர் ஜலத்தில் போட்டு [illegible] நன்றாகக் கொதிக்கவைக்கவும். பின்னர் இறக்கி ருசிக்கு வேண்டிய உப்பு அல்லது சர்க்கரை சேர்த்துப் பருகவும். [illegible] [illegible] சிறந்த [illegible]. [illegible] [illegible] உணவு. பியூரிடி பார்லி [illegible] [illegible] [illegible] தகரடப்பாக்களில் அடைக்கப் பட்டிருக்கிறது. ஒரு பங்கு பியூரிடி பார்லி [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible].

பியூரிடி
இந்தியன் பார்லி

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிட், 20/1 செட்லா ரோடு, கல்கத்தா
தென்னிந்தியாவுக்கு ஏஜண்டுகள்:
மெஸர்ஸ். பாரி அண் கோ., லிமிடெட், த. பெ. நெ. 12. மதராஸ்.

LUX
LUX TOILET SOAP
பி. எஸ். ஸரோஜா
தனது மிருதுவான அழகிய
மேனியை லக்ஸ் டாய்லட் சோப்
பினால் காப்பாற்றிக்கொள்கிறார்.
லக்ஸ் டாய்லட் சோப்
LTS. 181-111 TM
★ சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப் ★


இருமலுக்கும்
ஜலதோஷ-
த்திற்கும்
ஸிரோலின்
"சீராச்"


வாழ்க்கையில்
புதிய ஒளி
பண்டிட் டி. கோபாலாசார்லுவின்
ஜீவாம்ருதம்
ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட் மதராஸ் 17

எங்களது ஆதரவாளரனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்!

20-11-48 வரை 12½ சதவீதம் விலையில் தள்ளுபடி செய்யப்படும்.

கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில் மட்டுமே





கெட்ட சதுர வளைவு மாடல் முன் பக்கம் க்ரோம பின் பாகம் ஸ்டீல்	ரூ.	38-8-0
.. பொருவு முழு ரோல்டுகோல்டு	ரூ.	51-0-0
.. .. முன் பக்கம் ரோல்டு கோல்டு	ரூ.	47-8-0
சதுரம் ஸ்டைக்ரோம் 15 ஜுவல், பின் பக்கம் ஸ்டீல்	ரூ.	48-0-0
.. முழு ரோல்டு கோல்டு 15 ஜுவல்	ரூ.	68-0-0
வட்டவடிவம் பிளேட் க்ரோம், ரேடியம் டயல்	ரூ.	25-0-0
.. இந்திய வைன் நம்பர் டயல்	ரூ.	35-0-0
வட்டவடிவம் 15 ஜுவல் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் வாட்டர்ப்ரூப் ரேடியம் டயல்	ரூ.	66-0-0
வேகன் ரோல்டுகோல்டு பின் பக்கம் ஸ்டீல் ஸ்ட்ராப்புடன்	ரூ.	62-0-0
லேடீஸ் ஸ்பெஷல் க்ரோம் ஸ்ட்ராப்புடன்	ரூ.	45-0-0
இங்கிலீஷ் உயர்தர அலாரம் டேபிள் கடிகாரம்	ரூ.	27-8-0
8 தினங்களுக்கு ஒரு முறை சாவிகொடுக்கும் அமெரிக்கன் டேபிள் கடிகாரம்	ரூ.	42-0-0

INDO-SWISS TRADERS.
49, SOUTH GOKHALE ROAD,
BOMBAY. 14.

PUT YOUR TRUST
in
Nirmal
GLASSES

உஷ்ணம், மழை அல்லது வெப்பம், மண் அல்லது எண்ணெய் இவற்றினால், ஏற்படும் கெடுதல்களிலிருந்து எந்த வஸ்துவையும் கண்ணாடி பாதுகாக்கும். நிர்மல் கண்ணாடிகள் உணவு பதார்த்தங்கள், மருந்து சாமான்கள் கெடாமல் பாதுகாக்கவும் என்ஜினியரிங் பாகங்களை சரியாக கண்டு பிடிக்கவும் மற்ற உபயோகங்களுக்கும் சிறந்தவை.

NIRMAL GLASS
WORKS LTD.
OLAVAKKOT MALABAR

மெஸர்ஸ்.
நிர்மல் கிளாஸ் ஒர்க்ஸ்
லிமிடெட்.
ஒலவக்காடு. தென் மலபார்

வருகிறது!

பாட்டு:
பாபநாசம் சிவன்

சங்கீதம்:
ஜி. ராமநாதன்

ஸினேரியோ:
எம்.எல். டாண்டன்

மாடர்ன் தியேட்டர்ஸ்

ஆதித்தன் கனவு

டைரக்ஷன்:-
T.R. சுந்தரம்
B.A. B.Sc. (LEEDS)

காதல், ஹாஸ்யம், சோகம்
வீரம் நிறைந்தது.

டி. ஆர். மகாலிங்கம் - அஞ்சலிதேவி
கே. கே. பெருமாள் - டி. ஆர். ரஜினி
கே. பி. கேசவன் - ஜயலெக்ஷ்மி
எம். ஜி. சக்ரபாணி - குமாரி சரஸ்வதி
காளி என். ரத்தினம், மாதவன், ஏழுமலை
நாட்டியம்: லலிதா, பத்மினி & தாரா சௌத்ரி

மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட் சேலம் & மதுரை.

கல்கி

பொருளடக்கம்

மலர் 8
இதழ் 15

நவம்பர் 7

சர்வதாரி ௵
ஐப்பசி 22

பம்பாயில் படேல்	சாஸ்திரி	...	8
என்ன சேதி?	...	...	9
நீரத்திலே படை வீரத்திலே......!	...	...	10
பேராசிரியர் மணிவிழா	...	...	13
அலை ஓசை	கல்கி	...	19
மாந்தருக்குள் ஒரு தெய்வம்	ரா. கி.	...	28
இந்தியப் போர்க் கப்பல்களுக்கு வரவேற்பு	ரஜனி	...	33
காலக்ஷேபம்	...	...	34
அங்கமுத்து	கமலா சுந்தரம்	...	36
வரப்பிரசாதம் (பாப்பா மலர்)	விஜயம்	...	40
விண் பயம்	கி. ரா. கோபாலன்	...	42
அம்பியின் ஆசை!	காட்டூர் கண்ணன்	...	48
காரணம் தெரிந்தது	எஸ். வி. சௌந்தரராஜன்	...	49
வட்ட மேஜை	...	...	50
எதிர்பாராத முடிவு	பி. வி. சுப்பிரமணியம்	...	54
இராவணன் எவன் தெரியுமா?	டி. கே. சி.	...	59

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

சென்ற நூற்றைம்பது வருஷகாலமாக இந்தியக் கடற்கரையைக் காக்கும் வேலையை பிரிட்டிஷ் கப்பற் படையே செய்துவந்தது. ஆனால், இப்போது நிலைமை மாறிவிட்டது. இந்தியா இப்போது ஒரு சுதந்திர தேசம். இந்தியாவைக் கடல் மூலம் காப்பாற்ற வேண்டியமாபெரும் பொறுப்பு நம்முடைய சுதந்திர இந்திய சர்க்காரைச் சேர்ந்ததாகும்.

புதுச்சேரி மக்களையும் மாஹி ஜனங்களையும் பயமுறுத்துவதற்காகப் பிரஞ்சு யுத்தக் கப்பல்கள் சென்ற வாரத்தில் நம் கடற்கரை ஓரம் வந்தன. இந்தச் சம்பவம் இந்தியாவுக்குக் கடற் படை எவ்வளவு அவசியம் என்பதை நன்கு உணர்த்துகின்றது.

அந்த அவசியத்தை உணர்ந்துதான் நம்முடைய இந்திய சர்க்கார் இந்தியக் கடற்படையைப் பெருக்குவதில் முனைந்துள்ளார்கள்.

இந்தியாவின் சுதந்திரத் தலைநகரின் பெயரைத் தாங்கிய இந்தியாவின் முதலாவது பெரிய யுத்தக் கப்பல் இதோ சென்னைத் துறைமுகத்துக்கு விஜயம் செய்திருக்கிறது.

சென்னை மக்களே! சென்று பாருங்கள்! ஞாலம் நடுங்க வரும் போர்க் கப்பல் எப்படியிருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

போர்க் கப்பலில் தொண்டு செய்யும் வீர மாலுமிகளுடன் அளவளாவி சிநேகம் செய்து கொள்ளுங்கள். இனி இந்தியா தேசத்தை அன்னியன் எவனும் எட்டிப் பார்ப்பதற்கும் அஞ்சும்படி செய்யப்போகும் வீரர்கள் அந்த மாலுமிகள். அவர்களை வாழ்த்துங்கள்! வரவேற்புச் சொல்லுங்கள்!

வெற்றி கூறுமின்! வெண்சங்கு ஊதுமின்!

போர்க் கப்பல் டில்லிக்கு வரவேற்புக் கூறுமின்!

கல்கி

மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிட்டடி பாப்பா —பாரதியார் | இதழ் 15

என்ன செய்தி?

ஒரு படலம் முடிந்தது

சென்ற எட்டு வருஷகாலமாக சீனாவில் நடந்து வந்த கோரமான உள்நாட்டுப் போரின் ஒரு படலம் சென்ற வாரத்தோடு முடிவடைந்து விட்டது. குறிப்பாக சீனாவின் பல மாகாணங்களடங்கிய மஞ்சூரியாப் பிரதேசத்தில் சென்ற மூன்று வருடங்களாக நடந்த பலப் பரீட்சை முற்றுப் பெற்றுவிட்டது. அதாவது ஜெனரல் சியாங் கை ஷேக்கைத் தலைவராகவும் பிரதம தளபதியாகவும் கொண்ட சீன தேசிய சர்க்கார் தோல்வியடைந்து, சீனப் பொதுவுடைமை வாதிகள் வெற்றி பெற்றனர்.

மஞ்சூரியா முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள பொதுவுடைமைவாதிகள் அத்துடன் நின்றுவிடுவார்கள் என்று எண்ணுவதற்கில்லை. எனவே தேசிய சர்க்காருக்கும் பொதுவுடைமைவாதிகளுக்கும் சமரசம் ஏற்பட்டாலன்றி சீனாவில் உள்நாட்டுப் போர் இந்த ஜன்மத்தில் முடிய ஹேது இல்லை. சென்ற எட்டு வருஷ காலமாக ஏற்படாத சமரசம் இனி ஏற்படுமா? அப்படியே ஏற்படுவதாயினும் சென்ற இருபது வருடங்களாகச் சீனாவின் இணையற்ற தலைவராக இருந்து வரும் ஜெனரல் சியாங் கை ஷேக் அப்பதவியில் நீடித்து நிற்க முடியுமா? இவை போன்ற கேள்விகளுக்குப் பதில் அளிப்பது எளிதல்ல.

வெற்றி யாருக்கு?

சீனாவில் தேசிய சர்க்கார் தோல்வியுற்றது துக்ககரமான விஷயமாகும். அவர்கள் தோல்வியடைந்து பொதுவுடைமைவாதிகள் வெற்றி பெற்றுள்ளனரெனினும், மேற்படி வெற்றி தோல்விக்கு உண்மையான பொறுப்பாளிகள் யார் என்பதைக் கவனிக்க வேண்டியது அவசியமாகும். தேசிய சர்க்காருக்கு பிரிட்டனும், முக்கியமாக அமெரிக்காவும் போர்த் தளவாடங்கள் கொடுத்து உதவி புரிந்து வந்திருப்பதும், சீனப் பொதுவுடைமைவாதிகளுக்கு ருஷ்யா பூரண உதவி அளித்து வந்திருப்பதும் பகிரங்க இரகசியமாகும். ருஷ்யாவின் உதவியின்றேல் சீனப் பொதுவுடைமைவாதிகள் ஒரு காலத்திலும் வெற்றி பெற்றிருக்க முடியாது. அதிலும் குறிப்பாக சென்ற சில மாதங்களில் சீனப் பொதுவுடைமை வாதிகளுக்கு ருஷ்யாவின் உதவி அதிகமாகியதே மேற்படி வெற்றிக்குக் காரணமாகும். ஒருவேளை ஐரோப்பாவில் தன் முழு கவனத்தையும் செலுத்திவரும் அமெரிக்காவுக்கு, ருஷ்யாவுக்குப் போட்டியாக சீன தேசிய சர்க்காருக்குப் பூரண உதவி புரிய வசதியோ அல்லது மனமோ இராமற் போயிருக்கலாம். அது எவ்விதமாயினும், மஞ்சூரியாவில் பொதுவுடைமைவாதிகள் அடைந்துள்ள மகத்தான வெற்றி ருஷ்யாவின் வெற்றியே என்பதில் மாத்திரம் சந்தேகமில்லை.

டிஸ்மிஸ் நாடகம்

பாகிஸ்தான் சர்க்காரின் ஆட்சியில் டிஸ்மிஸ் நாடகங்கள் மலிந்து விட்டன. பாகிஸ்தான் ஏற்பட்டதும் ஏற்படாததுமாக வடமேற்கு எல்லைப்புற மாகாண மந்திரிகள் டிஸ்மிஸ் செய்யப்பட்டனர். பின்னர் சிந்து பிரதமர் குர்ரோ டிஸ்மிஸ் செய்யப்பட்டார். அவர் மீது இப்போது கோர்ட்டில் வழக்கும் நடந்து வருகிறது. குர்ரோவுக்குப் பின் சிந்து பிரதமராக வந்த பீர் இலாஹி பக்ஷுக்கும் சீட்டுக் கிழித்துவிட வேண்டுமென ஐந்து கராச்சி பத்திரிகாசிரியர்கள் சேர்ந்து கூட்டாக ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறார்கள். இலாஹி பக்ஷை டிஸ்மிஸ் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தியுள்ள அவர்கள், ஜனங்களுக்குப் பொறுப்பான வேறு எவரையாவது நியமிக்க வேண்டும் என்று கூறவில்லை. ஆனால் நிர்வாகத்தை கவர்னர் ஏற்று நடத்த வேண்டும் என்று சிபார்சு செய்திருக்கிறார்கள்! இதிலிருந்து பாகிஸ்தான் பிரமுகர்களிடையே போட்டியும் பொறாமையும் எதேச்சாதிகார மனப்பான்மையும் எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கின்றன என்பது நன்கு தெரியவில்லையா?

தீரத்திலே படை வீரத்திலே...!

உலகத்தில் சாதாரணமான பொக்கிஷத்தைப் பாதுகாப்பதே கஷ்டமாக இருக்கிறது. திருடர்களும் தீவட்டிக் கொள்ளைக்காரர்களும் அதை லபக்கென்று வாரிக் கொண்டு போகாமல் இருப்பதற்காக போலீசும் இராணுவமும் தேவையாக இருக்கின்றன; கச்சேரிகளும் காராக்கிரகங்களும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

சாதாரணமான பொக்கிஷங்களுக்கே அவ்வளவு ஆபத்து எனில், பொக்கிஷங்களுக்கெல்லாம் பொக்கிஷமான மாமணியைப் பாதுகாப்பது அற்ப சொற்பமான காரியமா?

கண்ணினுமினிய வீர சுதந்திரமாகிய மாசிலா மணியையே குறிப்பிடுகிறோம்.

உடலையும் உயிரையும் பாதுகாப்பதற்காக மனிதர் பொருளைத் தியாகம் செய்வரே யல்லாது, பொருளைப் பாதுகாப்பதற்காக உடலையும் உயிரையும் தியாகம் செய்வோர் எவருமிலர்.

ஆனால் சுதந்திரத்தைப் பெறவோ அல்லது பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாக்கவோ, உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் தியாகம் செய்ய மனிதர் பின்தாங்குவ தில்லை.

எனவே ஒரு தேசத்தின் சுதந்திரத்தைக் காட்டிலும் அத்தேச மக்களுக்கு அரும் பெரும் பொக்கிஷம் வேறெதுவுமே யில்லை என்றாகிறது.

சென்ற வாரத்தோடு எழுபத்து நாலு வயது நிரம்பியுள்ள சர்தார் வல்லபாய் பட்டேல், மேற்படி ஜெயந்தி வைபவத்தை யொட்டி நடந்த கூட்டமொன்றில் என்ன சொல்லி யிருக்கிறார் என்பதைப் பாருங்கள்.

“நமது தேகத்தில் கடைசித் துளி இரத்தம் இருக்கும் வரையிலும், போராடி நமது தேசத்தின் சுதந்திரத்தைப் பாதுகாப்போம். நமது சுதந்திரத்தில் எவராவது தலையிடுவார்களாயின், அதனால் இந்தியாவே மறைவதாயினும், பாகிஸ்தானே அழிவதாயினும், உலகமே நாசமாவதாயினும், அத்தகைய தலையீட்டைச் சகித்துக் கொண்டிருக்க மாட்டோம்” என்று சர்தார் பட்டேல் கர்ஜித்திருக்கிறார்.

எனவே, என்ன நேர்ந்தாலும் பெற்ற சுதந்திரத்தைக் கைநழுவ விடுவது கூடவே கூடாது.

நவீன உலகில் ஒரு தேசத்தின் சுதந்திரத்துக்கு எந்த வழியாக ஆபத்து வரும் என்பதைச் சொல்ல முடியாது.

தரைப் பாதையாக வரலாம்; திரை கடல் வழியாக வரலாம்; ஆகாய மார்க்கமாகவும் வரலாம்; ஏன், பாதாளத்தைப் பிளந்து கொண்டும் வரலாம்!

அந்த ஆபத்து எந்த வழியாக வந்தாலும் அதை எதிர்த்து நின்று வெற்றி பெற இந்தியா வலிமை பெற்றிருக்க வேண்டும்.

* * *

தரைப் போரில் இந்தியரின் வீரதீர பராக்கிரமங்கள் சரித்திரப் பிரசித்தி வாய்ந்தவை.

மகா அலெக்ஸாண்டரின் மண்ணாசைக்கு முற்றுப் புள்ளி வைத்த இந்தியர்கள், அதற்கு முன்பும் பின்பும் எத்தனையோ சந்தர்ப்பங்களில் தங்களுடைய போர்த் திறமையைக் காட்டியிருக்கிறார்கள்.

அஞ்சா நெஞ்சமும் ஆச்சரியகரமான போர்த் திறமையும் உள்ள இந்திய சிப்பாய்களடங்கிய இராணுவம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கோட்டையின் அஸ்திவாரம் என்று லார்டு கர்ஸான் ஒரு சமயம் குறிப்பிட்டார்.

முதலாவது உலக மகா யுத்தத்தில் இந்தியாவின், இந்திய வீரர்களின் உதவி இராவிடில் பிரிட்டன் வெற்றி பெற்றிருக்க முடியாதென்று, அப்போது பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருந்த லாயிட் ஜார்ஜ் பகிரங்கமாக ஒப்புக் கொண்டார்.

இரண்டாவது உலக மகா யுத்தத்திலும் பிரிட்டிஷாரின் வெற்றிக்கு அடிகோலியவர்கள் இந்திய வீரர்களே யாவர்.

மத்திய தரைக் கடல் பிரதேசத்திலும் வட ஆப்பிரிக்காவிலும் பிரிட்டிஷார் தோல்வி மேல் தோல்வி யடைந்து

‘வெற்றிகரமாக’ப் பின்வாங்கி வந்தபோது, பிரிட்டிஷார் இழந்த இடங்களையெல்லாம் மீண்டும் கைப்பற்றிக் கொடுத்தவர்கள் இந்தியர்களே.

இந்தியாவின் பிரதம தளபதியாக இருந்த பீல்டு மார்ஷல் ஆர்ச்சிபால்டு வேவல் அவ்வமயம் மேற்படி உண்மையைப் பிரகடனம் செய்து இந்திய சிப்பாய்களைப் பெரிதும் பாராட்டினார்.

அவ்விஷயமாக லார்டு வேவல் கூறியதை அப்படியே இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறோம்:—

“1940 டிசம்பர் மாதத்தில் ஸிடி பாரானியிலே இரண்டே டிவிஷன்களடங்கிய இந்தியத் துருப்புகள், பொறுக்கியெடுக்கப்பட்ட ஐந்து டிவிஷன்களடங்கிய இத்தாலியத் துருப்புகளை ஹதம் செய்து வெற்றிபெற்றார்கள். பிரிட்டிஷார் இழந்த பர்பரா, பிரிட்டிஷ் ஸோமாலிலந்து இவற்றை மீண்டும் கைப்பற்றியவர்கள் தென்னிந்தியத் துருப்புகள்தான். பிரிட்டிஷார் ஸிரியாவை ஆக்கிரமித்துக் கொள்ள இந்தியத் துருப்புகள்தான் பேருதவி புரிந்தனர். இவ்வாறாக மத்தியதரைக் கடல் பிரதேசங்களைக் காப்பாற்ற உதவி புரிந்த இந்தியாவுக்கு பிரிட்டன் சார்பில் வந்தனம் அளிக்கிறேன்.”

சமீபகாலம் வரையில் இந்தியாவின் பிரதம தளபதியாக இருந்த ஜெனரல் ஆக்கின்லெக்கும் இந்தியத் துருப்புகளின் சாகஸங்களை வெகுவாகப் பாராட்டியிருக்கிறார்.

சென்ற மகா யுத்தத்தின்போது பஸிபிக் மகா சமுத்திரத்திலிருந்து அட்லாண்டிக் மகா சமுத்திரம் வரையிலுள்ள பல விடங்களிலும் போர் நடந்தது. அவற்றில் இந்திய வீரர்கள் கலந்து கொள்ளாத முக்கியப் போர் முனை எதுவுமே இல்லை.

இயற்கை எழிலிலும் செயற்கை அழகிலும் ஈடு இல்லாத காஷ்மீரப் பிரதேசத்தையும் ஸ்ரீநகரப் பட்டணத்தையும் கொள்ளைக்காரர்களிடமிருந்து காப்பாற்றி, ஸ்ரீநகருக்கு ஐந்து மைல்களுக்கு அருகில் வந்த கொள்ளைக் கூட்டத்தையும் அதற்குத் துணை புரிந்த பாகிஸ்தான் துருப்புகளையும் ஐம்பது மைல்களுக்கு அப்பால் விரட்டியடித்து வீரப்போர் புரிந்துவரும் இந்தியத் துருப்புகளின் தீரத்தை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும்.

மற்றும் அதர்மத்தை நிலை நிறுத்தக் கடைசித்துளி இரத்தத்தையும் சிந்திப் போராடுவோம் என்று வீறாப்பு பேசிய ரஸாக்கர்கள் வெறும் வெண்ணெய் வெட்டி சிப்பாய்கள் என்பதை நிருபித்து ஹைதராபாத் போரில் ஐந்தே நாளில் வெற்றி கண்ட இந்தியத் துருப்புகளின் அற்புத பராக்கிரமத்தை கண்ணெதிரில் கண்டோம்.

இவ்வாறாக இந்திய சேனா வீரர்கள் பூமியில் அன்றும் இன்றும் போர்த் திறமையைக் காட்டித் தங்களுடைய கீர்த்தியை நிலை நாட்டியிருக்கிறார்கள்.

* * *

ஆகாயப் போரில் நம்முடைய வீரர்களின் திறமை எப்படி என்பதைப் பார்க்கலாம்.

இந்தியாவில் சுதந்திரக் கிளர்ச்சி பலமடைந்து வருவதைக் கண்டு பீதியடைந்த பிரிட்டிஷார், விமானப் போரில் இந்தியர்கள் பயிற்சி பெற முடியாமல் வெகு காலம் வரையில் சூழ்ச்சி செய்து வந்தார்கள்.

ஆனால் பிரிட்டன் இருப்பதா அழிவதா என்பதை நிர்ணயிக்கும் யுத்தம் மூளலாம் என்ற நிலைமை ஏற்பட்ட பின்தான், பிரிட்டிஷார் அவசர அவசரமாக இந்தியர்கள் விமானப் போரில் பயிற்சி பெற வசதிகளைச் செய்தனர்.

1933-ம் வருஷம்தான் இந்தியர்களடங்கிய முதல் விமானப் படை உருவாகியது.

எனினும் ஆறே வருஷ காலத்தில்,— 1939-ம் வருஷம் ஐரோப்பாவில் யுத்தம் ஆரம்பமானபோது இந்திய விமானப் படையின் சாகஸங்கள் பிரிட்டனுக்கு உற்ற துணையாக அமைந்தன.

பல இந்திய விமானிகள் ஜெர்மனியிலுள்ள இராணுவ ஸ்தலங்களைக் குறி தவறாமல் தாக்கி வீரப் பதக்கங்கள் பெற்றனர். ராக்ஷஸ விமானங்களை அனாயாசமாக ஓட்டிச் செல்லும் ஆற்றல் படைத்தனர்.

ஜப்பானியரிடமிருந்து பர்மாவை மீண்டும் கைப்பற்றும் பொறுப்பை நூறு சத விகிதம் நிறைவேற்றியவர்கள் இந்திய விமானிகளே யாவர்.

* * *

இந்தியக் கடற்படையின் இன்றைய நிலைமை என்ன?

தரைப் போரிலும் ஆகாயப் போரிலும் பயிற்சி பெறுவதைக் காட்டிலும் கடல் போரில் பயிற்சி பெறுவது அதிக கஷ்டமாகும். பல வருஷங்கள் பயிற்சி

பெற்றவர்கள்தான் கடற் போரில் ஈடுபட முடியும்.

அப்படியிருந்தும், "1934-ம் வருஷம் உருவான இந்தியக் கடற்படையினர் சென்ற மகா யுத்தத்தில் காட்டிய திறமையைப் பார்க்க எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. மிகவும் சிக்கலான கடல் போரில் இந்தியர்கள் ஐந்தே வருஷங்களில் திறமை பெற்ற மர்மம் என்ன என்பதே எனக்கு விளங்கவில்லை!" என்று ராயல் இந்தியக் கடற்படைத் தளபதியான அந்தோணி கிம்பின்ஸ் பாராட்டியிருக்கிறார்.

* * *

இவ்வாறாகத் தரையிலும் ஆகாயத்திலும் கடலிலும் இந்திய வீரர்கள் தங்களுடைய இணையற்ற திறமையை நிரூபித்திருக்கிறார்களெனினும், தற்போதைய இந்திய தரை, ஆகாய, கடற்படைகளின் நிலைமையைக் கண்டு நாம் திருப்தியடைவதற்கில்லை.

ஏனெனில், அமெரிக்கா போன்ற நாடுகள் இராணுவத்துக்காக ஆயிரக்கணக்கான கோடி செலவு செய்து வருகையில், இந்தியா இராணுவத்துக்காக இரு நூறு கோடி ரூபாய்கூட செலவு செய்யவில்லை.

இதிலிருந்து இந்திய இராணுவம் எவ்வளவு சிறியது என்பதை எவரும் அறிந்து கொள்ளலாம்.

நிலப் பரப்பில் பிரம்மாண்டமான இந்தியாவின் இராணுவமும் பிரம்மாண்டமானதாக இருக்க வேண்டும்.

செலவு அதிகமாகும் என்பதற்காக இராணுவத்தின் அளவைக் குறைப்பது நவீன உலகில் பைத்தியக்காரத்தனமாக முடியும்.

எனவே, இந்திய இராணுவத்தைப் பிரமாதமாகப் பெருக்கி முதல்தரமாக இருக்கும்படி செய்வதில் இந்திய மகா ஜனங்கள் பூரண சிரத்தை காட்ட வேண்டும். அதற்காகும் செலவை மனமுவந்து கொடுக்க வேண்டும்.

இந்தியாவின் சுதந்திரத்தைக் காட்டிலும் மேற்படி செலவு பெரிதல்ல.

ஏற்கெனவே, இந்திய இராணுவச் செலவு மிகவும் அதிகம் என்று நமது தலைவர்கள் கூறி வந்தது உண்மையே.

ஆனால், அன்றைய இராணுவத்துக்கும் இன்றைய இராணுவத்துக்கும் வேற்றுமை அதிகம்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை நிலைநிறுத்துவதற்காக இராணுவத்துக்கு ஒரு தம்பிடி செலவழிப்பதும் குற்றமாகும். ஆனால், இந்தியாவின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக ஆயிரம் கோடி செலவு செய்வதும் தவறாகாது.

தவிர, இந்தியாவின் கடற்கரையோரம் சுமார் இரண்டாயிரம் மைல்களிருப்பதால் இந்தியாவின் கடற்படையின் வலிமையும் மகத்தானதாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

இந்த அவசியத்தை நன்குணர்ந்தே இந்திய சர்க்கார் நவீன யுத்தக் கப்பல்களை வாங்கவும் இந்தியாவிலேயே நிர்மாணிக்கவும் திட்டம் போட்டிருக்கிறார்கள்.

வாங்கியுள்ள சில கப்பல்களும் இந்தியாவுக்கு வந்து கொண்டிருக்கின்றன.

அவைகளில் முதன்மையானதும், சென்ற மகா யுத்தத்தின் போது "கிராப்ஸ் ரீ" என்ற பிரபல ஜெர்மன் கப்பலை முடமாக்கி மூழ்கடித்ததுமான "அகில்லிஸ்" என்ற போர்க்கப்பலின் பெயரே டில்லி என்று மாற்றப்பட்டு பம்பாய், கொழும்பு முதலிய இடங்களுக்குப் பவனி சென்று இப்போது சென்னைக்கு விஜயம் செய்திருக்கிறது.

கம்பீரமாகப் பறக்கும் சுதந்திர இந்தியாவின் மணிக்கொடியுடன் இந்தியக் கடற்படைக்குச் சிகரமாக விளங்கும் டில்லியை சென்னை மகாஜனங்களின் சார்பில் மனப்பூர்வமாக வரவேற்கிறோம்.

பிரம்மாண்டமான இந்தியக் கடற்படைக்கு அங்குரார்ப்பணம் செய்துள்ள டில்லி, இந்தியாவின் படைவலிமையை எழு கடலிலும் எட்டுத் திசையிலும் பரப்பி வீரப் பிரதாபத்துடன் விளங்குமாக!



பழந் தமிழ் நாட்டு மக்கள் தமிழ்க் கவிகளையும் பெரியோர்களையும் போற்றுவதில் இணையற்றவர்களா யிருந்தார்கள்.

அதிகமான் என்று ஒரு ராஜா இருந்தான். இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்னால். அவனுக்கு நவ யௌவனத்துடனும் தேக ஆரோக்யத்துடனும் நெடுங்காலம் வாழ வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. சித்த புருஷர் ஒருவரிடம் யோசனை கேட்டான். அவர் சொன்னார்:- "உன்னுடைய நாட்டின் எல்லைப்புறத்தில் ஒரு மலை இருக்கிறது. அதன் உச்சியில் ஒரு கருநெல்லி மரம் இருக்கிறது. அந்தக் கருநெல்லி மரத்தில் பன்னிரண்டு வருஷத்துக்கு ஒரு தடவை ஒரு நெல்லிக் கனி உண்டாகும். பட்சிகள் முதலியவற்றால் அதற்கு எவ்வளவோ ஆபத்துக்கள் வரும். ஆபத்து நேராமல் பாதுகாத்து அதுவாகப் பழுத்துக் கீழே விழும்போது தரையிலே விழாமல் ஏந்தி எடுத்துக் கொண்டு வந்து வழிபடும் கடவுளுக்கு நிவேதனம் செய்துவிட்டு அருந்தினால் உன் விருப்பம் பூர்த்தியாகும்!" என்றார் சித்தர்.

அதிகமான் அந்தக் கருநெல்லி மரத்தைக் கண்டு பிடித்துப் பன்னிரண்டு வருஷம் காவல் போட்டுப் பழுக்கும் சமயத்தில் தானே சென்று பூமியில் விழாமல் ஏந்தி அரண்மனைக்குக் கொண்டு வந்தான். இறைவனுக்கு நிவேதனம் செய்துவிட்டுச் சாப்பிடலா மென்றிருந்தான். அந்தச் சமயம் பார்த்து அரண்மனைக்கு ஔவைப் பாட்டி வந்து சேர்ந்தாள். "தொலை தூரம் வழி நடந்து வந்தேன். மிக்க களைப்பா யிருக்கிறது" என்றாள்.

அதைக் கேட்ட அதிகமான், "நாம் இந்தக் கருநெல்லிக் கனியைச் சாப்பிட்டு என்ன பயன்! நாம் நெடுங்காலம் உயிரோடிருந்தால் என்ன? சீக்கிரத்தில் செத்துப் போனால் என்ன? ஔவைப் பிராட்டியார் நெடுங்காலம் வாழ்ந்தால் எத்தனையோ அருமையான பாடல்கள் பாடுவார்கள். தேசம் நலம் அடையும்" என்று எண்ணினான். உடனே கனியை ஔவைப் பிராட்டியிடம் கொடுத்து, "இதை அருந்துங்கள்; களைப்புத்தீரும்" என்றான். ஒரு நொடியில் ஔவையாரின் களைப்புத் தீர்ந்தது. "இது என்ன அதிசயமான கனி?" என்று ஔவை கேட்டாள். அதிகமான் விவரம் கூறினான். "நீ யல்லவா வள்ளல்!" என்று கூறி ஔவை அவனைப் பாராட்டினாள்.

அந்தக் கருநெல்லிக் கனியை அருந்தியதனால்தானோ என்னவோ, வள்ளுவர் வாழ்ந்த காலத்தி லிருந்து குலோத்துங்க சோழன் காலம் வரையில் ஔவையார் ஆயிரம் வருஷம் வாழ்ந்து தமிழ்நாடெங்கும் நடந்து பல அருமையான பாடல்களையும்

பாடியதாகக் கர்ண பரம்பரைக் கதைகள் சொல்லுகின்றன.

பழந் தமிழ் மக்களின் உயரிய பண்பாட்டைச் சிறப்பாக எடுத்துக் காட்டும் மேற்கூறிய நிகழ்ச்சியை, ஸ்ரீ டி. கே. எஸ். சகோதரர்கள் நடத்தும் "ஒளவையார்" என்னும் அர்புதமான நாடகத்தில் நன்கு சித்திரித்திருக்கிறார்கள்.

அந்த நாடகத்தில் வராத இன்னொரு ஒளவையார் வாழ்க்கைச் சம்பவம், பழந் தமிழ் நாட்டுப் பண்பாட்டின் இன்னொரு மேலான அம்சத்தை எடுத்துக் காட்டுகிறது. மன்னர்கள் மட்டுமேயன்றி ஏழைத் தமிழ் மக்கள் பலரும் அந்த நாளில் நல்ல கவிதா ரஸிகர்களாயிருந்தார்கள். அவர்களிலே புல்வேளூர்ப் பூதன் என்பவன் ஒருவன். அவனுடைய வீட்டுக்கு ஒருநாள் ஒளவை மூதாட்டி வந்து சேர்ந்தாள்.

வந்த மூதாட்டியைத் தக்கபடி உபசரிப்பதற்கு வேண்டிய சௌகரியம் அப்போது பூதன் வீட்டில் இல்லை. உணவு தானியங்களில் மிகவும் கீழான வரகரிசி தான் வீட்டில் இருந்தது. மர நிழலிலே காய்ந்துச் சுவையின்றிச் சப்புச் சவுக்கென்று இருக்கும் வழுதுணங்காய் இருந்தது. அப்புறம் மொர மொர வென்று புளித்து நுரைத்த பழைய மோர் இருந்தது. இத்தகைய உணவை ஒளவையாருக்குப் புல்வேளூர்ப் பூதன் பரிமாறினான். சும்மா பரிமாறினானா? இல்லை. "ஆகா! அம்மையே! எவ்வளவு அருமையான பாடல்கள் பாடியிருக்கிறீர்கள்? அந்தப் பாடல்களில் எவ்வளவு உண்மை பொதிந்து கிடக்கிறது? இந்தப் பாடலில் என்ன உலக ஞானம்? இன்னொரு பாட்டில் எவ்வளவு உணர்ச்சி? இப்பேர்ப்பட்ட சிரஞ்சீவிப் பாடல்களைப் பாடியிருக்கும் தங்களுக்கு நான் கேவலம் வரகரிசிச் சோறு போடுகிறேனே? தேவாமிர்தத்தை யல்லவா தங்களுக்குப் பரிமாற வேண்டும்?" என்றெல்லாம் புகழ்ந்து பரிந்து பேசிக்கொண்டே உணவு அளித்தான். உணவருந்திய பிறகு ஒளவையார் ஒரு பாடல் அருளினார். அது வருமாறு :—

"வரகரிசிச்சோறும் வழுதுணங்காய் வாட்டும்
மோரமோரெனவே புளித்தமோரும்
—உரிமையுடன்
புல்வேளூர்ப்பூதன் புகழ்ந்துபரிந்து
அளித்த அது......"

புல்வேளூர்ப் பூதன் விருந்தை ஒளவையார் எப்படி மதிப்பிடுகிறார்? 'ஆயிரம் பொன் பெறும்; கோடிப்பொன் பெறும்' என்றெல்லாம் சொன்னாரா? வேறு இரண்டாந்தரப் புலவர்களாயிருந்தால், அப்படியெல்லாம் எடை போட்டிருப்பார்கள். ஆனால் ஒளவையார் என்ன சொன்னார்? எப்படிப் பாட்டை முடித்தார்?

"புல்வேளூர்ப் பூதன் புகழ்ந்துபரிந்து
—அளித்த அது
எல்லா உலகும் பெறும்!"

வரகரிசிச் சோற்றுக்கு எல்லா உலகத்தையும் இணையாக்கினார் தமிழ் மூதாட்டி. ஏனெனில் அந்த வரகரிசிச் சோற்றோடு புல்வேளூர்ப் பூதனுடைய உள்ளம் நிறைந்த அன்பும் கலந்திருந்தது என்பதை அம் மூதாட்டி உணர்ந்திருந்தார்.

இதுதான் தமிழ் மக்களின் பழைய பண்பாட்டின் சிகரம்.

புலவர் பெருமான்களுக்கும் கவியரசர்களுக்கும் எதை வேணுமானாலும் கொடுக்கத் தயாராயிருந்த அதிகமானைப் போன்ற மன்னர்களும் அந்த நாளில் இருந்தார்கள். அன்புடன் கலந்த வரகரிசிச் சோற்றை எல்லா உலகத்துக்கும் ஒப்பிட மனங் கொள்ளும் பெரியோர்களும் புலவர்களும் கவிகளும் இருந்தார்கள். வாழ்க தமிழகம்!

• • •

இடையில் சிலகாலம், முக்கியமாக நமக்கு முந்தைய தலைமுறையில், தமிழகம் தன்னுடைய பழைய பண்பாட்டை இழந்து விட்டதோ என்று நினைக்கும்படி யிருந்தது. கவியரசர் பாரதியாரை அவருடைய ஜீவிய காலத்தில் தமிழர்கள் தக்கபடி கவனித்துக் கொள்ளவில்லை என்றும் மகாகவிக்கு உரிய மரியாதை செய்யவில்லை என்றும் அவச்சொல் ஏற்பட்டது. தமிழும் தமிழர்களும் தமிழகமும் செழிக்கப் பாடிய மகாகவியைத் தமிழ் மக்கள் புறக்கணித்து விட்டார்கள் என்று அபகீர்த்தி ஏற்பட்டது. "பாரதியைப் பட்டினி போட்டுக் கொன்றார்கள்!" என்று தமிழர்கள்மீது சிலர் பச்சையாகக் குற்றம் சாட்டினார்கள்.

நல்ல வேளையாக அந்த அவச்சொல் இப்போது பழைய கதையாகப் போய் விட்டது. இன்று தமிழ்நாட்டுக் கவிகளையும் புலவர்களையும் பெரியோர்களையும் தமிழ்நாடு பெரிதும் பாராட்டிப் போற்றும் வழக்கத்தைக் கைக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். ஏதோ கொஞ்ச நஞ்சம் பாக்கியிருந்த அபகீர்த்தியும் பேராசிரியர் வ. ரா. அவர்களுடைய மணிவிழாவுடனே போய்

விட்டது, போயேபோய் விட்டது.-என்று தமிழ் நாட்டினர் குதூகலம் அடையலாம்.

• • •

மகாகவி பாரதியின் பிரதம சீடரும் நவயுக எழுத்தாளருக்கு வழி காட்டியுமான பேராசிரியர் வ.ரா. அவர்களின் அறுபதாவது பிறந்த தினக் கொண்டாட்டம் சென்ற அக்டோபர் 31ந் தேதி மாலை ராஜாஜி மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடை பெற்றது. சென்னையில் உள்ள பெரும் பாலான பத்திரிகாசிரியர்களும், எழுத்தாளரும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். தமிழ் ரஸிகர்களும் பெருந்திரளாக வந்திருந்து பிரசங்கங்களை நன்கு அனுபவித்து விழாவை சிறக்கும்படி செய்தார்கள்.

மணிவிழாக் கமிட்டியின் சார்பாகவும் பம்பாய்த் தமிழ்ச்சங்கத்தின் சார்பாகவும் பேராசிரியருக்கு வாழ்த்துப் பத்திரங்கள் படித்து அளிக்கப்பட்டன.

ஸ்ரீ கெ. ஆர். சீனிவாசன் முதலிய பிரபல பத்திரிகாசிரியர்களும், கனம் பக்தவத்ஸலம், வெகீப் ஹுஸைன் ஷாபி முகம்மது முதலிய பிரமுகர்களும் ஸ்ரீ வ. ரா. வுக்கு வாழ்த்துரை கூறினார்கள்.

ஆந்திர சகோதரரும் "சுதந்திரா" ஆசிரியருமான ஸ்ரீ காலா சுப்பராவ் தமிழ் எழுத்தாளரின் மணிவிழாவுக்கு வந்திருந்து ஸ்ரீ வ. ரா. வை அழகாகப் பாராட்டிப் பேசியதைக் குறிப்பிடவேண்டும்.

கைச்சுவை மன்னன் ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணன் வழக்கம் போலச் சிரிக்கச் சிரிக்கப் பேசிச் சபையோரை மகிழ்ச்சிப் பிரவாகத்தில் மூழ்கும்படி செய்தார்.

ரூ. 18,375—0—0 கொண்ட நிதி முடிப்பு பேராசிரியருக்கு அளிக்கப்பட்டது.

முப்பது வருஷகாலம் இடைவிடாமல் தமிழுக்கும் தமிழகத்துக்கும் தமிழ் எழுத்தாளர் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டு வந்திருக்கும் எழுத்தாளர் தலைவருக்கு பதினெட்டாயிரம் ரூபாய் நிதி அளித்தது ஒரு பெரிய காரியமில்லை. போதவே போதாது. வருங்காலத்தில் பேராசிரியர் வாழ்க்கையை நிம்மதியாக நடத்துவதற்குக் கூடப் போதாது என்றே சொல்ல வேண்டும்.

ஆயினும் பெரிய மனம் படைத்த பேராசிரியர் மேற்படி தொகையை உள்ளம் நிறைந்த மகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்டு தமிழ் மக்களுக்கு நன்றியும் கூறினார்.

• • •

பதினெட்டாயிரத் துச் சொச்ச ரூபாய் பேராசிரியரின் பெருமைக்குக் குறைந்த தொகையானாலும், காலநிலையை முன்னிட்டுச் சந்தோஷப்பட வேண்டிய தொகைதான். அகவிலை அளவில்லாமல் ஏறிப் போயிருக்கிறது. மாதச் சம்பளம் வாங்குகிறவர்கள் எல்லாரும் வரவுக்கும் செலவுக்கும் சரிக்கட்ட முடியாமல் திண்டாடுகிறார்கள். 'பிளாக் மார்க்கெட்' வியாபாரிகள் ஒளித்து வைத்த பணத்தை வெளியில் காட்டமுடியாமல் அவஸ்தைப்படுகிறார்கள். ஏதேனும் ஒரு நல்ல காரியத்துக்குத் தினம் ஒரு புதிய நிதி ஆரம்பிக்கப்பட்டுப் பணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இத்தகைய நிலைமையில் பதினெட்டாயிரம் ரூபாயாவது சேர்ந்ததே என்று திருப்தியடைய வேண்டியதாயிருக்கிறது.

மணிவிழா நடந்து விட்டபடியால் இனிமேல் நிதி கொடுக்கக் கூடாது என்பது இல்லை யாது. ஏதோ அசௌகரியத்தினால் இது வரையில் பணம் அனுப்ப முடியாதவர்கள் இனியும் அனுப்பிவைத்துத் தங்கள் கடமையை நிறைவேற்றலாம். பேராசிரியர் அவர்களின் விலாசம்:—ஸ்ரீ வ. ராமஸ்வாமி, 2, வித்வான் சுந்தரேச முதலித் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை.

நிதி வசூலும் விழாவும் இவ்வளவு திருப்திகரமாகவும் சிறப்பாகவும் நடந்ததற்கு முக்கிய காரணமாயிருந்தவர்கள் மூவர். இவர்கள் "தினசரி" ஆசிரியர் ஸ்ரீ டி. எஸ். சொக்கலிங்கம், "சுதேசமித்திரன்" ஆசிரியர் ஸ்ரீ கெ. ஆர். சீனிவாசன், "பாரத தேவி" நிர்வாக ஆசிரியர் ஸ்ரீ எஸ். வி. ஸ்வாமி ஆகியவர்கள். இவர்களுடைய இடைவிடா ஊக்கமும் உற்சாகமுமே எடுத்த காரியம் இவ்வளவு வெற்றிகரமாக முடிந்ததற்கும் பெரிதும் காரணமாயிருந்தது.

சென்னையின் முக்கியமான தினசரி, வார, மாதப் பத்திரிகைகள் ஒவ்வொன்றும் ரூ 500 நன்கொடை தந்தன. "தினத் தந்தி" ஆசிரியர் ஸ்ரீ எஸ். பி. ஆதித்யன் மோட்டார் விபத்தில் தோள் எலும்பு முறிந்து சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த சமயத்திலும் வ. ரா. மணி விழாவை மறந்துவிடாமல் ரூ 500 நன்கொடை அனுப்பியதை மிகவும் பாராட்டவேண்டும்.

தமிழ் நாட்டில் எந்த நல்ல காரியம் தொடங்கினாலும் உற்சாகத்துடன் அதில் பங்கு எடுத்துக் கொள்கிறவர்கள் பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தார். வ. ரா. மணி விழாவில் அவர்கள் தங்களுடைய கைங்கரியத்தை நன்கு செய்தார்கள்.

நிதி வசூலிலும் விழா நடத்துவதிலும் பெரும்பங்கு எடுத்துக் கொண்ட இன்னொரு மனிதர் ஒரு 'பைத்தியக்காரர்'. அவருடைய இயற்கைப் பெயர் சகஸ்ரநாமம். முதலில் 'பைத்தியக்காரன்' என்னும் நாடகத்திலும் பிறகு அதே பெயர் கொண்ட சினிமாவிலும் 'பைத்தியக்காரன்' வேடம் பூண்டு புகழ்பெற நடித்தவர். பேராசிரியரிடம் ஸ்ரீ சகஸ்ரநாமம் அபார அன்பு பூண்டு அல்லும் பகலும் உழைத்தார். அதிக மானைப் போன்ற ராஜாக்கள் இல்லாத இந்தக் காலத்தில் ஸ்ரீ சகஸ்ரநாமத்தைப் போன்ற அன்பர்களாவது இருந்தால், தமிழ் எழுத்தாளர்கள் கவலைப்பட வேண்டிய அவசியமே யில்லை.

வ. ரா. மணிவிழா மலரைக் காலத்தில் அச்சிட்டுக் கொண்டு வந்த பெருமைக்கு உரியவர் "சக்தி" ஆசிரியர் ஸ்ரீ வை. கோவிந்தன். மணி மலரில் ஸ்ரீ வ. ரா.வைப் பற்றிப் பல ஆசிரியர்களும் அன்பர்களும் எழுதிய ரஸமான கட்டுரைகளும், ஸ்ரீ வ. ரா. வின் படங்களும், அவருடைய குடும்பத்தார் சிநேகிதர்களின் படங்களும் நிரம்பியிருக்கின்றன. மேலட்டை வெள்ளி மயமாக ஜொலிக்கிறது. விலை ரூ. 1-8-0 தான். அன்பர்கள் ஸ்ரீ வை. கோவிந்தன், "சக்தி" காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை என்ற விலாசத்துக்கு எழுதி மணி மலர் தருவித்துக் கொள்வார்களாக.

பேராசிரியர் வ. ரா. மணிவிழா நிதி

	ரூ.	அ.	பை.
டி. கே. எஸ். பிரதர்ஸ், ஔவையார், நாடக வசூல்	1183	0	6
பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தார் மூலம் வசூல்	450	0	0
ஸ்ரீ எஸ். என். என். சங்கரலிங்கய்யர், இன்டோ-கமர்ஷியல் பாங்க், சென்னை	250	0	0
ஸ்ரீ டி. எஸ். துரைசாமி, டி. வி. எஸ். அண்டு ஸன்ஸ், சென்னை	250	0	0
தியாகராய நகர் கல்யாண் ஸ்டோர்ஸ் மூலம் வசூல்	112	0	0
ஸ்ரீ வை. கோவிந்தன், சக்தி காரியாலயம், சென்னை	101	0	0
திருநெல்வேலி முனிஸிபல் சேர்மன் ஸ்ரீ ப. ராமசாமி மூலம் வசூல்	101	0	0
ஸ்ரீ என். ஏ. பி. அழகிரி ராஜா, ராஜபாளையம்	75	0	0
ஸ்ரீ கொத்தமங்கலம் சுப்பு, சென்னை	52	0	0
ஸ்ரீமதி எம். வி. ராஜம்மா, சினிமா நடிகை, சென்னை	51	0	0
மதுரை ஸ்ரீ மணி அய்யர், சங்கீத வித்வான், சென்னை	51	0	0
ஸ்ரீ ஏ. எஸ். நடராஜன் செட்டியார், புதுமை பதிப்பகம், காரைக்குடி	51	0	0
ஸ்ரீ சு. ஆர். கோவிந்தன், ஆசிரியர், ப்ரீ-இண்டியா, சென்னை.	50	0	0
ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார், குற்றாலம்	50	0	0
ஸ்ரீ எஸ். எஸ். அய்யய ராஜா, ராஜபாளையம்	50	0	0
ஸ்ரீ பி. எஸ். குப்பராஜா, ராஜபாளையம்	50	0	0
ஸ்ரீ எஸ். ஆர். நாராயண ராஜா, ராஜபாளையம்	50	0	0
கனம் எம். பக்தவத்ஸலம், பொது மராமத்து இலாகா மந்திரி	50	0	0
ஸ்ரீ ஆர். தனுஷ்கோடி ராஜா, கல்கி ஏஜண்ட், ராஜபாளையம் (செப்டம்பர் மாத 'கல்கி' விற்பனை கமிஷன்)	41	4	0
ஸ்ரீ கே. கோபாலன், மதுரை	25	0	0
ஸ்ரீ டி. என். குமாரசாமி, நன்னைடயார் பேட்டை.	25	0	0
ஸ்ரீ கே. திருவேங்கட முதலியார், கோட்டூர்	25	0	0
ஸ்ரீ சுசாமி, சென்னை	20	0	0
ஸ்ரீ ஏ. குருசாமி, கொழும்பு	18	0	0
ஸ்ரீ ஆர். எம். சாத்தப்பன், சென்னை	15	0	0
ஸ்ரீ வி. சாமி அய்யங்கார், ஸ்ரீ ராகவம், மாயவரம்	15	0	0
ராணிப்பேட்டை அன்பர்கள்	12	4	0
ஸ்ரீ ரா. நாராயணய்யங்கார், ஆசிரியர், தமிழ்நாடு, சென்னை	10	0	0
ஸ்ரீ கே. சடகோபன், தமிழ்நாடு, சென்னை	10	0	0
ஸ்ரீ பாலன், தமிழ்நாடு, சென்னை	10	0	0
ஸ்ரீ நாராயணசாமி, தமிழ்நாடு, சென்னை	10	0	0
இதர வசூல்	18	0	0
ஆக ரூ.	3,281	8	6
ஏற்கனவே வசூல் ரூ.	15082	0	0
ஆகமொத்தம் ரூ.	18,363	8	6

ஜெனரல் அஷ்யூரன்ஸ் சொஸைட்டி லிட்.

ஸ்தாபிதம்: 1907

மதராஸ் டிவிஷனல் ஆபீஸ்:

304, தம்புச் செட்டி தெரு, மதராஸ் 1.

முற்றிலும் தேசீய ஸ்தாபனம்:

அமுலில் உள்ள வியாபாரம்	சுமார் ரூ.	20,00,00,000
ஆயுள் நிதி	,, ரூ.	2,00,00,000
மொத்த ஆஸ்திகள்	,, ரூ.	2,20,00 000
கொடுக்கப்பட்ட க்ளெயிம் தொகை	,, ரூ.	1,00,00,000

சேர்மன்: ஸ்ரீ B. N. ஜாலன், (கூராஜ்மல் நகர்மல் கம்பெனி), கல்கத்தா

தென்னிந்தியாவில் கிளைகள்: மதராஸ், மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயமுத்தூர், கொழும்பு, பெங்களூர், பெல்லாரி, பெஜவாடா

எல்லா முக்ய நகரங்களிலும் இன்ஸ்பெக்டர் ஆபீசுகள் உள்ளன.

திருவல்லிக்கேணி நேஷனல் (பெண்கள்) ஹைஸ்கூல்

கட்டிட நிதிக்காக

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

உதவும் சங்கீதக் கச்சேரி

★

ஆஸ்தான வித்வான்

மைசூர் செளடய்யா	...	பிடில்
கன்யாகுமரி ராமநாதன்	...	மிருதங்கம்
ஆலங்குடி ராமச்சந்திரன்	...	கடம்

★

மேன்மை தங்கிய சென்னை கவர்னர்

பவநகர் மகாராஜா அவர்கள்

தலைமை வகிக்கிறார்கள்

5-12-48 ஞாயிறு மாலை 6 மணிக்கு திருவல்லிக்கேணி டாக்டர் பெஸண்டு ரஸ்தாவில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ள பந்தலில்

டிக்கட்டுகள்: ரூ. 250/- ரூ. 100/- ரூ. 50/- ரூ. 25/- ரூ. 10/- & ரூ. 5/-

ஒலிபெருக்கி: திருச்சி ரேடியோ சேல்ஸ் அண் சர்வீஸ்



இது
ஒரு
ஸோப்
அன்றி

மாயமல்லா?

உள்ளதை உள்ளபடி சொல்லுகிறோம். இவ்விளம்பரத்தின் மூலம் நாங்கள் விற்க விரும்புவ தெல்லாம் எளியோர் பணக்காரர் யாவருக்கும் கிட்டக்கூடிய ஓர் உயர்தரஸ்தான ஸோப். காந்தி ஸோப் உங்களுக்கு அழகு சிருங்காரம் முதலிய வற்றை உண்டாக்கு மென்று நாங்கள் வாக்குறுதி கொடுக்க வில்லை.

ஆனால் காந்தி ஸோப் பரிமளம் பொருந்தியவை என்றும் மிருதுவான சருமத் துக்கு கெடுதலை உண்டாக்காது என்றும் உறுதி சொல்லுவோம்.

இதர உயர்தர ஸ்வஸ்திக் தயாரிப்புகள், சிக்காய்ஸோப், பரிமள ஆமணக்கெண்ணெ, ஸ்வஸ்திக் கூவர ஸோப், சலவை ஸோப்புகள், கோனைன் ப்ராண்ட் வனஸ்பதி முதலியன.



காந்தி ஸோப்

குணத்துக்கு நிகரற்றது.

Sem. 10—Tamil

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட் பம்பாய்.

மதராஸ் ஸேல்ஸ் டிப்போ: No. 14, G. ஸ்டிரிங்கர் தெரு, (சௌகார் ஸ்கோயர்) மதராஸ்.
பெங்களூர் ஸேல்ஸ் டிப்போ: ஆற்காடு ஸ்ரீனிவாஸாச்சார் தெரு, பெங்களூர் ஸிட்டி.
கொச்சின் ஸேல்ஸ் டிப்போ: பஜார் ரோடு, மட்டாஞ்சேரி, கொச்சின்.

அலை ஓசை

கல்கி

இருபத்து நாலாம் அத்தியாயம்

நல்ல மாமியார்

திடீரென்று ஒருநாள் தாமாவும் பாமாவும் சீதாவின் வீட்டுக்கு வந்தார்கள். அவர்களுடைய வரவு சீதாவுக்கு மிக்க குதூகலம் அளித்தது. பேச்சும் சிரிப்பும் பரிகாசமுமாக வீடு ஒரே கலகலப்பாயிற்று.

யோக க்ஷேமங்களை விசாரித்துக் குழந்தை வஸந்தியை எடுத்து வைத்துக்கொண்டு கொஞ்சிய பிறகு, "மிஸ்டர் ராகவன் எங்கே? அவரைக் 'கன்க்ராசுலேட்' பண்ணத்தான் முக்கியமாக இன்றைக்கு நாங்கள் வந்தோம்!" என்றாள் பாமா.

"என் மாமியார் இன்றைக்கு ஊரிலிருந்து வருகிறார். அவரை அழைத்து வருவதற்கு இவர் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போயிருக்கிறார்!" என்று சொன்னாள் சீதா.

"ஐயோ! மாமியார் வருகிறாளா? எனக்குப் பயமாயிருக்கிறதே!" என்றாள் பாமா.

"உனக்குத் தெரியுமா, சீதா? கலியாணம் பண்ணிக் கொண்டால் மாமியார் வந்து சேர்வாளே என்ற பயத்தினால்தான் நாங்கள் இரண்டு பேரும் கலியாணமே செய்துகொள்ளவில்லை!" என்று தாமா சொல்லிவிட்டு 'ஹஹ்ஹஹ்ஹா!' என்று சிரித்தாள். பாமாவும்கூடச் சிரித்தாள்.

சீதாவும் கொஞ்சம் சிரித்துவிட்டு, "ஆனால் எனக்கு வந்திருக்கும் மாமியார் அப்படிப்பட்டவர் இல்லை! ரொம்ப நல்ல மனுஷி. அவரிடம் எனக்குப் பயமில்லை!" என்றாள்.

"உன்னைக் கண்டு உன்னுடைய மாமியார்தான் பயப்படுகிற வழக்கமோ?" என்று பாமா சொல்லிவிட்டு 'ஹிஹ்ஹிஹ்ஹி' என்று நகைத்தாள்.

"அதுவும் கிடையாது!" என்று சீதா சொல்லிவிட்டு, "ஏன், பாமா! இங்கிலீஷ்காரர்களுக்குள்ளே நாட்டுப் பெண்கள் மாமியாருக்குப் பயப்படமாட்டார்களாமே? மாப்பிள்ளைகள்தான் மாமியார்களைக் கண்டு பயப்படுகிற வழக்கமாமே?" என்று கேட்டாள்.

"அதெல்லாம் ஹாஸ்ய ஆசிரியர்கள் பரிகாசமாக எழுதுகிற விஷயம். நகைச்சுவை இல்லாத நம்முடைய ஊர்க்காரர்கள் அதை உண்மை என்று எண்ணிக் கொண்டு இங்கிலீஷ் நாகரிகத்தைக் கண்டிக்க ஆரம்பித்து விடுவார்கள்!" என்றாள் தாமா.

"இவரைக் 'கன்க்ராசுலேட்' பண்ண வேண்டும் என்றீர்களே? எதற்காக?" என்று சீதா கேட்டாள்.

"ராகவன் சீமைக்குப் போய்விட்டு வந்தவரானபடியால்தான் அவருக்கு அப்பேர்ப்பட்ட தைரியம் வந்தது. நம் ஊர்க்காரர்களாயிருந்தால், தெருவிலே யாராவது விழுந்து கிடந்தால் 'நமக்கென்னத்திற்கு வம்பு?' என்று ஒதுங்கிப்போய் விடுவார்கள். ராகவன் சீமைக்குப் போனவரானபடியால் சாலையில் குத்துப் பட்டுக் கிடந்தவனை உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போய்ப் போலீஸிலும் தெரியப்படுத்தினார். இந்த மாதிரி கடமை உணர்ச்சியுடன் உன் கணவர் காரியம் செய்தது பற்றி எங்கள் தகப்பனார் ரொம்பப் பாராட்டினார், சீதா! இதை உன்னுடைய கணவரிடம் சொல்லிவிட்டுப்

போகத்தான் முக்கியமாக நாங்கள் வந்தோம்!" என்றாள் பாமா.

அன்றிரவு உண்மையில் நடந்தது என்ன என்பது சீதாவுக்கு நன்றாக நினைவில் இருந்தது. சீமைக்குப் போய் வந்த தன் கணவர் "நமக்கென்னத்திற்கு வம்பு? வண்டியை ஒதுக்கி விட்டுக்கொண்டு போய்விடலாம்!" என்று சொன்னார். சூரியாவும் தாரிணியுந்தான் குத்துப் பட்ட உடலைக் காரில் தூக்கிப் போட்டுக் கொண்டு போக வேண்டும் என்றார்கள். அவர்கள் இருவரையும் பார்த்து ராகவன், "உங்களுடைய பிடிவாதத்தினாலேதான் இந்தத் தொந்திரவெல்லாம் வந்தது!" என்று இரண்டு மூன்று தடவை சொன்னது சீதாவுக்கு நன்றாக ஞாபகம் இருந்தது. ஆனாலும் சீதா அந்த விஷயத்தை இப்போது உடைத்துச் சொல்ல விரும்பவில்லை. தன் கணவனுக்குத் தாமாவும் பாமாவும் அளித்த கௌரவத்தைத் தான் ஏன் மறுக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டு சும்மா இருந்தாள்.

பிறகு ஏதோ நினைவு வந்து கேட்பவளைப்போல், "பாவம்! செத்துப் போனவன் உங்கள் ஊர்க்காரனாமே? வாஸ்தவமா?" என்றாள்.

"ஆமாம்; அவன் எங்கள் ஊர்க்காரன்தான். எங்களூர் என்றால் ரஜனிபூர். ஆனால் அவனுக்காகப் 'பாவம்' என்று இரக்கப்பட வேண்டியதில்லை. ரொம்பப் பொல்லாத மனிதன். பழைய ராஜா இருந்த போது இவனுடைய அக்கிரமங்களைச் சகிக்க முடியாதாம். எங்கள் அப்பா திவானாக வந்த பிறகு கொஞ்சம் பயந்து கொண்டு சும்மாயிருந்தான். முக்கால்வாசி டில்லியிலேதான் இருப்பான். இங்கே என்ன வத்தி வைத்துக் கொண்டிருக்கிறானோ, யார் குடியைக் கெடுக்கச் சூழ்ச்சி செய்கிறானோ என்று அப்பாவுக்குக் கூடக் கவலையாகத்தான் இருந்தது. அவன் செத்துப் போனது உலகத்துக்குப் பெரிய நஷ்டமில்லைதான். ஆனாலும் சட்டம் சட்டமல்லவா? அவனைக் கொன்றவனைக் கண்டு பிடிக்கும் விஷயத்தில் அப்பா ரொம்பப் பிரயத்தனம் செய்து இந்த ஊர்ப் போலீஸ்காரர்களை முடுக்கி விட்டுக் கொண்டிருக்கிறார். டில்லியில் போலீஸ் சுத்த ஊழல் என்று உனக்குத் தெரியுமோ இல்லையோ?"

சீதாவுக்கு ரஜனிபூர் திவான் மீது கோபமாய் வந்தது. அவர் எதற்காக இந்த விஷயத்தில் சிரத்தை எடுக்க வேண்டும் என்று தோன்றியது.

"அப்படியானால் குற்றவாளியை இன்னும் கண்டு பிடிக்கவில்லையா?" என்று கேட்டாள்.

"எங்கே கண்டு பிடிக்கப் போகிறார்கள்? மூன்று வருஷம் தேடி விட்டுக் கடைசியில் 'கொலையே நடைபெறவில்லை' என்று சொல்லி விடுவார்கள்! இந்தப் புதுடில்லிப் போலீஸாரின் இலட்சணம் அப்படி!" என்றாள் தாமா.

சீதா தன் மனதிற்குள் 'அப்படியே நடந்து விட்டால் நல்லது' என்று நினைத்துக் கொண்டாள். ஒரு கொலைகாரி தப்பித்துக் கொள்ள வேண்டும் என்பதில் தனக்கு ஏற்பட்டிருக்கும் சிரத்தையை நினைக்க அவளுக்கே வியப்பாயிருந்தது. அவ்வளவு தூரம் அந்த ஸ்திரீ தன்னுடைய அபிமானத்தைக் கவர்ந்து விட்டது என்ன ஆச்சரியமான விஷயம்!

"ஒருவர் பேரிலும் சந்தேகங்கூட இல்லையா?" என்றாள் சீதா.

"யாரோ 'ரஜனிபூர் பைத்தியம்' என்று ஒரு ஸ்திரீ அந்த மதோங்கரைச் சில நாளாகத் தொடர்ந்து கொண்டிருந்தாளாம். அவளாக இருக்கலாம் என்று போலீஸார் சந்தேகிக்கிறார்கள். ஆனால் அப்படியிராது என்று எனக்குத் தோன்றுகிறது. பெண்ணாய்ப் பிறந்தவள் ஒருத்தி அவ்வளவு துணிச்சலான குற்றத்தைச் செய்ய முடியுமா?" என்றாள் பாமா.

இதற்குத் தாமா, "ஏன் முடியாது? ஏன் துணிச்சல் வராது? ஸ்திரீகளுக்குள்ளே எத்தனையோ ராட்சஸிகள் இருக்கிறார்கள். இராமாயணத்திலேயே சொல்லியிருக்கிறதே? மேலும் இந்த மதோங்கர் என்கிறவன் என்ன அக்கிரமம் பண்ணினானோ, அவன் பேரில் இவளுக்கு என்ன கோபமோ, யாருக்குத் தெரியும்?" என்றாள்.

இந்தச் சமயத்தில் டெலிபோன் மணி கிணுகிணு வென்று அடித்தது. சீதா ரிஸீவரை எடுத்துக் காதில் வைத்து "யார்?" என்று கேட்டாள். பேசியது சூரியா. தானும் தாரிணியும் சீதா

வின் வீட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருப்பதாகச் சொன்னாள்.

"சந்தோஷம்! உன்னைப் பார்த்து ரொம்ப நாளாயிற்று. உடனே புறப்பட்டு வா!" என்றாள் சீதா.

பிறகு, வரப்போவது யார் என்பதைத் தாமா — பாமாவிடம் சொன்னாள். அவர்கள் சந்தோஷம் அடைந்தார்கள். "உன் அகத்துக்காரரைத்தான் பார்க்க முடியவில்லை. தாரிணியையாவது பார்த்துவிட்டுப் போகிறோம்!" என்றார்கள் பாமாவும் தாமாவும்.

"அவரும் வருகிற சமயந்தான்; அரை மணிக்குள்ளே வந்து விடுவார். இருந்து அவரையும் பார்த்துவிட்டுப் போகலாம்!" என்றாள் சீதா.

• • •

சீதாவுக்குச் சூரியாவைப் பார்க்க விருப்பமாயிருந்தது; தாரிணியைப் பார்க்கவும் ஆசையாயிருந்தது. ஆனால் அவர்கள் இருவரும் சேர்ந்து கொண்டு வருவது அவளுக்குப் பிடிக்கவில்லை.

இது விஷயமாக ராகவன் புகார் கூறியது சீதாவின் மனதில் பதிந்திருந்தது. "சூரியாவும் தாரிணியும் அடிக்கடி ஒன்றாய்ச் சேர்ந்து போகிறார்களாம்; பகிரங்கமாக ஊர் சுற்றுகிறார்களாம். கொஞ்சங்கூட நன்றாயில்லை. சூரியாவுக்கு ஏன் இப்படிப் புத்தி போகவேண்டும்? அவன் தாயார், தகப்பனருக்குத் தெரிந்தால் எவ்வளவு கஷ்டப்படுவார்கள்?" என்று ராகவன் சொல்லியிருந்தான்.

அது பிசகான காரியம் என்றுதான் சீதாவுக்கும் தோன்றியது. ஆனால் ராகவன் சூரியாவின்பேரில் பழியைப் போட்டான். சீதாவோ தன் மனதிற்குள், தாரிணியைக் குறை கூறினாள். 'சூரியா கிராமத்திலிருந்து வந்த அறியாப் பையன்; அவனை உலக அநுபவமுள்ள தாரிணிதான் கெடுத்துக் கொண்டிருக்கிறாள்' என்று எண்ணினாள். சூரியாவைத் தனியாகச் சந்திக்கும்போது 'தாரிணியின் வலையில் விழ வேண்டாம்!' என்று எச்சரிக்கை செய்யவும் உத்தேசித்திருந்தாள்.

தாரிணியின் விஷயத்திலோ சீதாவின் மனோபாவம் இரண்டுவிதமாக இருந்தது. அவளை நேருக்கு நேர் சந்திக்கும் போதெல்லாம் தன்னை மீறிய அன்பும் அபிமானமும் அவள்பேரில் ஏற்பட்டது. அவள் தன்னுடைய தமக்கை — அதாவது மாற்றாந்தாயின் மகள் — என்பதாக ஏற்பட்டிருந்தால் அவளுக்குச் சந்தோஷமாகவே இருந்திருக்கும். அவ்விதம் இல்லாமற் போயிற்றே" என்று சீதாவுக்கு ஏமாற்றமாயிருந்தது.

ஆனால் தாரிணி இல்லாத சமயத்திலோ அவள்பேரில் அகாரணமாகக் கோபம் வந்தது. குழந்தை வயதில் தன்னுடைய வீட்டில் குடி கொண்டிருந்த வறுமைக்கும் தன்னுடைய தாயாரின் துயரத்துக்கும் அகால மரணத்துக்கும்கூட அவளே காரணம் என்று தோன்றியது. அப்புறம் தன்னுடைய கணவரை ஏற்கெனவே தெரிந்தவளாயும் அவருடன் கூச்சமின்றிப் பழகக்கூடியவளாயும் இருக்கிறாள். இப்போதோ, சூரியாவை அடியோடு பைத்தியமாக அடித்திருக்கிறாள். இந்தியப் பெண் குலத்தின் பண்புக்குத் தகுந்த நடவடிக்கைகளா இவை? தாரிணியை நினைக்கும்போது, தாமாவும் பாமாவும் எவ்வளவு நல்லவர்கள்? அவர்கள் கொஞ்சம் அதிகமாகவே ஐரோப்பிய நாகரிகத்தில் மூழ்கியிருந்தாலும், அதனால் என்ன? அவர்களுடைய நடத்தை எவ்வளவு மேலானது? ஒரு கொள்கையை உத்தேசித்து அவர்கள் இன்னும் கலியாணம் செய்து கொள்ளாமல் இருக்கிறார்களே? அது எவ்வளவு மேலான காரியம்? — நமக்குப் பிடிக்கிறதோ, இல்லையோ, இந்தச் சகோதரிகளின் நடை உடை பாவனைகள்தான் அவருக்குப் பிடித்திருக்கிறது. ஆகையால் இவர்களுடன் நன்றாக சிநேகம் செய்து கொண்டு அதிகமாகப் பழகி இவர்களுடைய நடை உடை பாவனைகளைக் கற்றுக் கொள்ள வேண்டியதுதான். வைஸ்ராய் மாளிகைத் தோட்டத்தில் நடந்த 'பார்ட்டி'யில் இவர்கள் எவ்வளவு சகஜமாக எல்லாருடனும் பேசிப் பழகினார்கள்? அப்படிப் பழகுவதற்குத் தானும் பழகிக் கொள்ள வேண்டும். தனக்கு என்னமோ இதெல்லாம் அவ்வளவாகப் பிடிக்கவில்லைதான். ஆனால் கணவருக்குப் பிடிக்கிற காரியங்களைத் தனக்கும் பிடிக்குமாறு செய்துகொள்ள வேண்டும் அல்லவா? இப்படித்தானே தன் மாமியார்கூட

அடிக்கடி போதனை செய்துகொண்டு வருகிறார்?—தாமாவும் பாமாவும் இந்த ஊரிலேயே தங்கி விட்டால் மிகவும் சௌகரியமாயிருக்கும்......

இத்தகைய மனோ நிலையை அடைந்திருந்த சீதா, தாமாவையும் பாமாவையும் பார்த்து, "நீங்கள் இந்த ஊரிலேயே தங்கிவிட்டால் எனக்கு எவ்வளவோ சந்தோஷமாயிருக்கும். எனக்கு இங்கே சிநேகிதமேயில்லை. பொழுது போவது கஷ்டமாயிருக்கிறது!" என்று சொன்னாள்.

"ஒருவேளை சீக்கிரம் இந்த ஊருக்கு வந்தாலும் வந்துவிடுவோம், சீதா! அப்பாவுக்கு இந்திய சர்க்காரில் பெரிய உத்தியோகம் ஆகும்போலிருக்கிறது! அழைப்பு வந்துவிட்டது. அப்பாதான் ஒப்புக் கொள்ளத் தயங்கிக் கொண்டிருக்கிறார்!" என்றாள் பாமா.

"உனக்குச் சிநேகிதத்துக்கு என்ன குறைவு, சீதா! தாரிணிதான் இருக்கிறாளே!" என்றாள் தாமா.

"தாரிணி சிநேகமாயிருப்பதும் ஒன்றுதான்; சிநேகிதம் இல்லாமலிருப்பதும் ஒன்றுதான். அவள் வந்தால் ஏதாவது சோஷலிஸம், காங்கிரஸ், புரட்சி என்று சொல்லிக்கொண்டிருக்கிறாள். எனக்கு அதெல்லாம் பிடிப்பதேயில்லை......" என்றாள் சீதா.

"அப்படியா சொல்கிறாய்? உனக்கும் கொஞ்சம் அந்தமாதிரி விஷயத்தில் கிறுக்கு உண்டு என்றல்லவா நினைத்தேன்?" என்றாள் பாமா.

"கிடையவே கிடையாது. எனக்குக் காந்தி மகாத்மாவிடம் கொஞ்சம் பக்தி உண்டு. அவரை யாராவது குறை சொன்னால் எனக்குப் பிடிக்காது. என் அகத்துக்காரர் காந்தியைப் பற்றிக் குறை சொன்னால்கூட அவருடன் சண்டை பிடிப்பேன்!" என்றாள் சீதா.

"காந்தி பெரிய மகான்தான்; சந்தேகமேயில்லை. ஆனால் அவருடைய பொருளாதாரக் கொள்கைகள் சுத்த மோசம். அவர் சொல்லுகிறபடி எல்லாரும் கேட்டால் இந்தியா இரண்டாயிரம் வருஷம் பின்னால் போய்விடும்!" என்றாள் தாமா.

"ரயில், மோட்டார், எலெக்டிரிக் விளக்கு — இதெல்லாம் இல்லாமல் இனிமேல் நம்மால் வாழ்க்கை நடத்த முடியுமா!" என்றாள் பாமா.

"அடாடா! அன்றைக்கு வைஸ்ராய்த் தோட்டப் பார்ட்டிக்கு என்னை அழைத்துக் கொண்டு போனீர்களே! அங்கே செடிகளுக்குள்ளே விளக்குப் போட்டிருந்தது எவ்வளவு அழகாயிருந்தது! 'இதுதான் கந்தர்வ லோகமோ' என்று எனக்குத் தோன்றிவிட்டது!" என்றாள் சீதா.

"நீ பார்த்த பார்ட்டி என்ன பிரமாதம், சீதா! அடாடா! வில்லிங்டன் வைஸ்ராயாக இருந்தபோது நீ பார்த்திருக்க வேண்டும். அப்போது வைஸ்ராய் மாளிகையில் பார்ட்டி என்றால், 'கந்தர்வ லோகமோ?' என்று சந்தேகப்பட வேண்டியிராது! நிஜமான கந்தர்வ லோகமாகவே இருக்கும். இந்தக் காளை மாட்டு வைஸ்ராய் வந்த பிறகு, முன்மாதிரி அவ்வளவு ஜோர் இல்லை. பார்ட்டிகளும் அடிக்கடி நடப்பதில்லை. லார்ட் லின்லித்கோவுக்குக் 'காளைமாட்டு வைஸ்ராய்' என்பதாகப் பெயர் ஏற்பட்டிருப்பது உனக்குத் தெரியுமோ, இல்லையோ?" என்று தாமா கேட்டாள்.

"தெரியாமல் என்ன? எல்லாருந்தான் அதைப்பற்றிப் பரிகாசம் செய்கிறார்களே?" என்றாள் சீதா.

"வர வரக் காலம் கெட்டுப் போய்விட்டது. சீமையில் காளை மாடு வளர்க்கிறவர்கள், பன்றி மந்தை வளர்க்கிறவர்கள், எல்லாரையும் பிடித்து இந்தியாவுக்குக் கவர்னர்களாகவும் வைஸ்ராய்களாகவும் அனுப்பி விடுகிறார்கள்!......" என்று பாமா சொல்வதற்குள், தாமா குறுக்கிட்டு, "இப்போதாவது இந்த மட்டில் இருக்கிறது. இங்கிலாந்தில் லேபர் கவர்ன்மெண்ட் வந்து விட்டால், ரயில்வே போர்ட்டர்களையும் தபால் பியூன்களையும் பிடித்துக் கவர்னர்களாக அனுப்பி விடுவார்கள். அவர்களுக்கு நம்முடைய தேசத்து மகாராஜாக்களும் நவாபுகளும் சலாம் போட்டுக் கொண்டிருக்க வேண்டியதுதான்!" என்றாள்.

அதற்குப் பாமா, "சீமையிலிருந்து போர்ட்டர்களும் தபால் பியூன்களும் வருவது என்ன? நம் தேசத்துக் காங்கிரஸ்காரர்களும் சோஷலிஸ்டுகளும் சொல்லுகிறபடி நடந்தால், நம் ஊர் ரயில்வே போர்ட்டர்களும் தபால் பியூன்களுமே கவர்னர்களாக வந்து

விடுவார்கள் ! ஏது உனக்குத் தேவலே, சீதா!" என்று கேட்டான்.

சீதாவுக்கு ராஜம் பேட்டைக் கிராமமும், ராஜம் பேட்டைத் தபால் சாவடியும் நினைவுக்கு வந்தன. தபால்காரன் பாலகிருஷ்ணன் கவர்னர் வேலைக்கு வந்தால் எவ்வளவு அழகாயிருக்கும் என்று தனக்குள் நினைத்துப் பார்த்துக் கொண்டு சிரித்தாள். இந்தியா தேசத்தில் சர்க்காரும், சர்க்கார் உத்தியோகங்களும் இப்போது நடக்கிறபடியே நடப்பது தான் நல்லது என்று தோன்றியது.

இந்தச் சமயத்தில் சூரியாவும் தாரிணியும் உள்ளே வந்தார்கள். தாமா பாமாவும் "ஹலோ! மை டியர்!" என்று தாரிணியைக் கட்டிக்கொண்டும் கையைப் பிடித்துக் குலுக்கியும் முகமன் கூறினார்கள். அந்த கலாட்டாவுக்கு இடையில் சீதா சூரியாவைக் கொஞ்சம் தனியாக அழைத்துப் போய், "அம்மாஞ்சி! உன்னிடம் ஒன்று சொல்லவேண்டுமென்று நினைத்தேன். நீ கோபித்துக் கொள்ளாதே! தாரிணி தேவியிடம் உனக்கு என்ன இவ்வளவு சிநேகம்? உன் அப்பா, அம்மா கேள்விப்பட்டால் என்ன நினைப்பார்கள்? — வீணைப் பேரைக் கெடுத்துக் கொள்ளாதே! நான் பார்த்து உனக்கு நல்ல பெண்ணைக் கூடிய சீக்கிரம் கல்யாணம் செய்துவைக்கிறேன்!" என்றாள்.

சூரியா புன்னகையுடன் "நல்ல பெண் எங்கே பார்த்து வைத்திருக்கிறாய்! இவர்கள் இரண்டு பேரில் ஒருவரையா?" என்று கேட்டு, பாமா தாமா இருந்த பக்கம் பார்த்தான்.

"சீச்சீ! இவர்கள் இரண்டு பேருக்கும் உன்னைவிட அதிக வயதிருக்கும். இவர்களுடைய நவ நாகரிகத்துக்கும் உன் அம்மாவின் கர்நாடகத்துக்கும் ஒரு நிமிஷங்கூடப் பொருந்தாது. வேறு நல்ல இடம் பார்க்கலாம். நீ மட்டும் தாரிணியின் வலையில் விழாமல் இரு!" என்றாள் சீதா.

"அத்தங்கா! இந்த மாதிரி யெல்லாம் பேச யாரிடம் கற்றுக் கொண்டாய்? தாரிணியைப் பற்றி உன் மனதில் களங்கம் எதுவும் வேண்டாம்! நான்தான் முன்னமே சொன்னேனே? நாங்கள் இரண்டு பேரும் சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள். அதனால் அடிக்கடி சந்தித்துப் பேச வேண்டியிருக்கிறது. இரண்டு பேரும் சீக்கிரத்தில் லாகூருக்குப் போவதாகக் கூட உத்தேசித்திருக்கிறோம்......"

இதற்குள் தாமா, "சீதா! அம்மாஞ்சியுடன் என்ன இரகசியம் பேசுகிறாய்? எங்களுக்கு அவரை 'இன்ட்ரட்யூஸ்' பண்ணக் கூடாது என்று என்ன மா! நாங்கள் அவரைக் கடித்து விழுங்கிவிட மாட்டோம். இங்கே அழைத்துக் கொண்டு வா!" என்று கீச்சுக்குரலில் கத்தினாள்.

இதைக் கேட்ட சீதாவும் சூரியாவும் மற்றவர்கள் இருக்கும் இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

இருபத்தைந்தாம் அத்தியாயம்

"சுட்டுவிடுவேன்!"

சூரியாவைத் தாமாவுக்கும் பாமாவுக்கும் அறிமுகம் செய்து வைத்தவுடனே, "நாங்கள் வந்த போது ஏதோ மகாராஜாக்களையும் கவர்னர்களையும் போர்ட்டர்களையும் பியூன்களையும் பற்றிப் பேச்சு நடந்துகொண்டிருந்ததே! அது என்ன விஷயம்?" என்று சூரியா கேட்டான்.

சீதா விஷயத்தைச் சொன்னாள்.

"அப்படியெல்லாம் ஒரு நாள் வரத்தான் போகிறது. ரயில்வே போர்ட்டர் கவர்னர் ஆவார்; தொழிற்சாலை மேஸ்திரி கவர்னர் ஜெனரல் ஆவார். தபால்காரர் பிரதம மந்திரி யாவார். இதற்கெல்லாம் நாம் தயாராயிருக்க வேண்டும். இங்கிலீஷ் படித்தவர்களும் பெரிய மனிதர்களுமே எப்போதும் பெரிய உத்தியோகங்களில் இருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள். இன்று ஜெர்மனியைக் கண்டு உலகமே நடுங்கும்படி செய்திருக்கும் ஹிட்லர் யார்? சுவருக்குச் சுண்ணாம்பு வர்ணம் பூசிக்கொண்டிருந்தவன். ஜெர்மனியில் ஆயிரம் வருஷமாக அரசு புரிந்து வந்த ஆளும் இனத்தார் இருந்த இடம் தெரியாமல் போய் விட்



டார்கள். ருஷியா தேசத்தின் விஷயம் என்ன?......" என்று சூரியா பேசிக் கொண்டே போனான்.

"அடே அப்பா! இவர் என்ன நெருப்புக் கக்கும் சோஷலிஸ்ட் போல் இருக்கிறதே!" என்றான் பாமா.

"ஆமாம்; அம்மாஞ்சி பெரிய தீவிர வாதி. கிராமத்திலுள்ள நில விஷயத்தில் குடியானவர்கள் கட்சி பேசி, அப்பாவுடனும் அண்ணாவுடனும் சண்டை போட்டுக் கொண்டு வந்து விட்டான்! பொதுக் கூட்டங்களில் பிரமாத ஆவேசத்துடன் பேசுவானும்! ஆனால் நான் இதுவரையில் கேட்டதில்லை!" என்றாள் சீதா.

"என்னை நெருப்பைக் கக்கும் சோஷலிஸ்ட் என்றுதானே சொன்னீர்கள்? அது உண்மைதான். எங்கள் கட்சி மூட்டும் நெருப்பு இந்தியா தேசத்திலுள்ள மகாராஜாக்கள், திவான்கள், ஜமீன்தார்கள், ஜாகீர்தார்கள், ஏழைப் பாட்டாளிகளைப் பிழிந்தெடுத்துக் கொள்ளை லாபம் அடிக்கும் முதலாளிகள் எல்லோரையும் கொளுத்திப் பொசுக்கிக் கூண்டோடு கைலாசம் அனுப்பி வைக்கப் போகிறது. கொஞ்ச நாளில் பாருங்கள்!" என்றான் சூரியா.

"மகாராஜாக்களும் ஜமீன்தார்களும் போனால் போகட்டும்! பாவம், ஏழைத் திவான்களைச் சும்மா விட்டுவிடுங்கள்; பிழைத்துப் போகட்டும்!" என்று பரிகாசக் குரலில் கூறினான் பாமா.

"இவ்வளவெல்லாம் பேசுகிறீர்களே? உங்களுடைய எரிமலை கக்கும் நெருப்பினால் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அரசாங்கம் கூட எரிந்து போய் விடுமா?" என்று பாமா கேட்டான்.

"பிரிட்டிஷ் அரசாங்கமும் ஒரு நாள் அழியத்தான் போகிறது. இப்போதைக்கு இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் 'அஸ்பெஸ்டாஸ்' கவசம் போட்டுத் தப்பித்துக்கொண்டு வருகிறது. ஆனால் இது வெகு காலம் நிற்காது. கூடிய சீக்கிரத்தில் இந்திய அதிகார வர்க்கத்துக்கும் காலம் வரும்!" என்றான் சூரியா.

"அது என்ன 'அஸ்பெஸ்டாஸ்' கவசம்? இதுவரையில் நான் கேட்டதில்லையே?" என்றாள் சீதா.

"அஸ்பெஸ்டாஸ் என்று ஒரு புதிய செயற்கைப் பொருளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதை நெருப்பு எரிக்காது. நெருப்பே பிடிக்காது. பிரிட்டிஷார் அத்தகைய அஸ்பெஸ்டாஸ் கவசம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது என்ன தெரியுமா? அது தான் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் உள்ள வேற்றுமை. ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் பிரித்து வைத்துத் தான் பிரிட்டிஷார் இந்தியாவை ஆளுகிறார்கள்!"

"அந்தப் பிளவு எப்படி நீங்கும்?" என்று தாமா கேட்டான்.

"பிளவு நீங்குவதற்கு வழி பொருளாதாரப் புரட்சி தான். ஏழைகளில் ஹிந்து ஏழை என்றும் முஸ்லிம் ஏழை என்றும் இடையாது. பாட்டாளிகளிலும் அப்படியே. இந்த விஷயத்தை இரண்டு சமூகங்களையும் சேர்ந்த ஏழைகளுக்கும் பாட்டாளிகளுக்கும் தெரியப்படுத்தி விட்டால், அவர்கள் விழித்துக் கொண்டு விடுவார்கள். பதவிப் பித்துக் கொண்ட அரசியல் வாதிகளும் பிரிட்டிஷ் இராஜதந்திரிகளும் தங்களை உபயோகித்துக் கொள்ள இடங்கொடுக்க மாட்டார்கள்" என்றான் சூரியா.

இந்த சமயத்தில் வாசலில் மோட்டார்க் குழலின் சத்தம் 'பாம்' 'பாம்' என்று கேட்டது.

பெரியவர்களுடைய பேச்சை யெல்லாம் விஷயம் புரியாவிட்டாலும் ஆவலோடு கேட்டுக் கொண்டிருந்த வஸந்தி, "அப்பா வந்துத்தா! அப்பா வந்துத்தா! பாத்திவை அச்சிண்டு வந்துத்தா!" என்று சொல்லிக் குதித்துக்கொண்டே வாசற்பக்கம் ஓடினாள்.

சீதா, "ஆமாம்; இவர்தான் வந்து விட்டார் போலிருக்கிறது. நீங்கள் சற்றுப் பேசிக் கொண்டிருங்கள். நான் போய் அழைத்துக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு வாசற் பக்கம் விரைந்து சென்றாள். குழந்தையைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு வீட்டின் முகப்புத் தாழ்வாரத்தில் நின்றாள்.

வண்டி வந்து வீட்டு வாசலில் நின்றது. தாயார் இறங்குவதற்கு முன்னாலேயே ராகவன் அவசரமாக இறங்கி வந்தான். முகப்புத் தாழ்வா

ரத்தில் நின்ற சீதாவை நெருங்கி, "சீதா! ஊருக்கு எதற்காக நீ அப்படிக் கடிதம் எழுதினாய்? ஒரு நாளைக்கு உன்னை நன்றாய் அறைந்துவிடப் போகிறேன். திமிர் அதிகமாகி விட்டது! தடிக் கழுதை!" என்று சீறும் குரலில் கூறினான்.

"ஐயோ! இது என்ன? நான் ஒன்றும் எழுதவில்லையே?" என்றாள் சீதா. பொங்கி வந்த அழுகையையும் ஆத்திரத்தையும் அடக்கிக் கொண்டாள். இவ்வளவு கோபமாகவும் ஆபாசமாகவும் ராகவன் சீதாவைத் திட்டியது இதுதான் முதல் தடவை.

"நீ எழுதவில்லையா? பொய் சொல்லாதே! ரஜனிபூர் ஏரியில் உன்னை நான் படகிலிருந்து பிடித்துத் தள்ளி விட்டதாகக் கடிதம் எழுதவில்லையா உன் சிநேகிதி லலிதாவுக்கு?......"

சீதாவுக்கு உண்மை புலனாயிற்று. சூரியா லலிதாவுக்கு எழுதிய விஷயம் இப்படி இவர் காதுக்கு எட்டியிருக்கிறது. யாரோ தன் மாமியாரிடம் ஊரில் பிரஸ்தாபித்திருக்கிறார்கள். ரயிலிலிருந்து இறங்கியதும் இறங்காததுமாக மாமியார் அதை இவரிடம் சொல்லியிருக்கிறாள்!—முதல்முதலாக, சீதாவுக்கு அப்போது தன் மாமியார் மீது கோபம் உண்டாயிற்று.

"ஏன் பதில் சொல்லாமல் விழித்துக் கொண்டு நிற்கிறாய்? எழுதினாயா? இல்லையா?" என்றான் ராகவன்.

ஒரு கணநேரம் சீதா யோசனை செய்தாள். தான் எழுதவில்லை என்றும் தாரிணி கூறியதைக் கேட்டுச் சூரியா எழுதினான் என்றும் சொல்லலாம். அப்படிச் சொன்னால் சூரியா மீது இவருக்கு அசாத்தியக் கோபம் வரும். அதைக் காட்டிலும், தான் குற்றத்தை ஒப்புக்கொண்டு விடுவதே நல்லது!

"நான் அப்படியெல்லாம் ஒன்றும் எழுதவில்லை......" என்று சமாதானம் சொல்ல ஆரம்பித்தாள்.

"அப்படி எழுதவில்லை, — இப்படி எழுதினாயாக்கும்! உன்னுடைய துஷ்டத்தனம் இப்போதுதான் எனக்குத் தெரிகிறது. ஒரு நாளைக்கு உன்னை நிஜமாகவே ஏரியில் பிடித்துத்தள்ளிக் கொன்று விடுகிறேன், பார்!"

"வேண்டாம்! வேண்டாம்! இரைந்து பேசாதீர்கள்! உங்களுக்குப் புண்ணியமாகப் போகட்டும். குழந்தை என்னமோ ஏதோவென்று திக்பிரமை அடைந்திருக்கிறாள். உள்ளே யார் யாரோ வந்திருக்கிறார்கள்!" என்றாள் சீதா.

ராகவனுக்குச் சட்டென்று புத்தி தெளிந்தது. "உள்ளே யார் வந்திருக்கிறது?" என்று கேட்டான்.

"தாரிணி வந்திருக்கிறாள்......"

"ஓஹோ!" என்றான் ராகவன். உடனே அவன் முகத்தில் மாறுதல் காணப்பட்டது.

"தாமாவும் பாமாவும் வந்திருக்கிறார்கள்..."

"அந்தச் சனியன்களும் வந்திருக்கிறார்களா? அதுதான் இவ்வளவு கொம்மாளம் போலிருக்கிறது!"

"ஐயோ! அவர்களுடைய காதில் விழப்போகிறதே! கொஞ்சம் மெதுவாகப் பேசுங்கள்!" என்றாள் சீதா.

"வந்திருப்பவர்கள் அவ்வளவு தானா? இன்னும் யாராவது உண்டா?" என்று ராகவன் கேட்டான்.

"சூரியாவும் வந்திருக்கிறான்......"

"அந்த ராஸ்கல் இங்கு எதற்காக வந்தான்? ஒருநாளைக்கு அவனை ரிவால்வரால் சுட்டுக் கொன்றுவிடப் போகிறேன்!" என்று முணு முணுத்தான் ராகவன்.

சீதா அடைந்த மன வேதனைக்கு அளவேயில்லை. திடீரென்று இந்த வைய ராட்சஸ சுபாவம் இவருக்கு எங்கேயிருந்து வந்தது என்று திகைத்தாள். இந்தச் சமயத்தில், காரிலிருந்து சாவகாசமாக இறங்கி வேலைக்காரன் சாமான்களையெல்லாம் எடுத்து விட்டானா என்று பார்த்த பிறகு, வீட்டுப்படி ஏறிவந்த காமாட்சி அம்மாள், "ராகவா! இது என்ன, நான் வந்ததும் வராததுமாய் நீங்கள் சண்டை பிடிக்க ஆரம்பித்து விட்டீர்கள்? உங்களுடைய சண்டையைப் பார்த்து விட்டு நான் திரும்பிப் போய் விடவேண்டுமென்ற எண்ணமா? அதெல்லாம் நான் போகமாட்டேன்,—என் பேத்தியை விட்டு விட்டு. வஸந்தி! இங்கே வா, அம்மா!" என்றாள்.

அப்பா-அம்மா சண்டையைப் பார்த்துத் திகைத்துப் போயிருந்த வஸந்தி பாட்டியிடம் தாவிச்சென்றாள்.



52. "ஹே ராம்!"

தம்பி! இந்த வருஷம் ஜனவரி மாதம் 30-ந் தேதி டில்லியில் நடந்த மகா பாதகச் செயலின் விவரங்களை நீ மறந்திருக்க மாட்டாய். கொலைபாதகன் ஒருவன் காந்தி மகாத்மாவுக்கு அஞ்சலி செய்ய வந்தவனைப் போல நடித்து அவர்மீது மூன்று குண்டுகளைச் சுட்டான். முதல் குண்டு பட்டதும் மகாத்மா "ஹே ராம்!" என்று சொல்லிக் கொண்டு தரையில் விழுந்தார். இதெல்லாம் உனக்கு நினைவிருக்கிறதல்லவா?

தென்னாப்பிரிக்காவில் 1908-ம் வருஷத்தில் ஒருமுறை காந்தி மகாத்மா "ஹே ராம்!" என்று சொல்லிக் கொண்டு தரையில் விழும்படி நேர்ந்தது. முரட்டுப் பட்டாணியன் ஒருவன் அவரைத் தடியினால் மண்டையில் அடித்ததினால் அவ்விதம் அவர் விழும்படி ஆயிற்று. உலகத்தின் பாக்கிய வசத்தினால் அம்முறை காந்தி மகானின் உயிருக்கு ஆபத்து நேரவில்லை. மூர்ச்சையடையும்படியாக மட்டும் ஏற்பட்டது. அந்த அற்புத சம்பவத்தைப் பற்றி இப்போது நீ தெரிந்துகொள்ளப் போகிறாய்.

பிரிடோரியாவில் ரயில் ஏறிய காந்திஜி இரவு ஒன்பது மணிக்கு ஜோஹன்னிஸ்பர்க் வந்துசேர்ந்தார். சத்தியாக்கிரஹ சபையின் தலைவரான சேத் எஸ்ஸப் மியான் என்பவரின் வீட்டுக்கு நேரே போனார். ராஜிப்பேச்சைப் பற்றி எஸ்ஸப் மியானும் மற்ற இந்திய நண்பர்களும் அறிந்திருந்த போதிலும் இவ்வளவு விரைவில் காந்திஜி விடுதலையடைந்து போலீஸ் பாராவும் இறை வார்டரும் இல்லாமல் வந்து சேர்வார் என்று நினைக்கவில்லை. எல்லாரும் அதிசயமும் மகிழ்ச்சியும் அடைந்தார்கள். அன்று இரவு பன்னிரண்டு மணிக்குப் பொதுக் கூட்டம் கூட்டுவதென்று தீர்மானிக்கப் பட்டது. இதற்கிடையில் இந்தியப் பிரமுகர்களும் நேசிதர்களும் வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்கு ராஜி நிபந்தனைகளைப் பற்றிக் காந்திஜி விவரமாக எடுத்துக் கூறினார். பெரும்பாலோர் திருப்தி அடைந்தார்கள். இரண்டொருவர் ராஜியை எதிர்த்துப் பேசித் தங்கள் சந்தேகங்களை வெளியிட்டார்கள். "சட்டத்தின்படி பதிவு செய்து கொள்வதற்கும் தாமாகப் பதிவு செய்து கொள்வதற்கும் அப்படி என்ன வித்தியாசம்? மேலும் கறுப்புச் சட்டத்தை எடுத்த பிறகு தாமாகப் பதிவு செய்து கொண்டாலும் அர்த்தம் உண்டு. நாம் பதிவுசெய்து கொண்ட பிறகு கறுப்புச் சட்டம் ரத்து செய்யப்படும் என்பது என்ன நிச்சயம்? ஸ்மட்ஸ் வாக்குறுதி பிறழ்ந்து விட்டால் நாம் என்ன செய்யமுடியும்?" என்று கேட்டார்கள். அவர்களுக்குச் சந்தேகம் தீர்ந்து ராஜியை ஒப்புக்கொள்ளுமாறு காந்திஜி பதில் சொன்னார். அதன் விவரம் பின்வருமாறு:—

"இத்தகைய ஆட்சேபத்தைக் கிளப்புவது நியாயந்தான். கறுப்புச் சட்டத்தை ரத்து செய்த பிறகு நாம் வலியச் சென்று பதிவு செய்து கொள்வது என்று ஏற்பாடாகியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால் ராஜி என்று ஏற்படும் போது இரண்டு கட்சியாரும் கொஞ்சம்

விட்டுக் கொடுத்தே தீரவேண்டும். கொள்கை பற்றிய விஷயங்களில் விட்டுக் கொடுக்கக் கூடாதே தவிர மற்ற அம்சங்களில் விட்டுக் கொடுத்தால்தான் அது ராஜியாகும். 'கறுப்புச் சட்டத்துக்கு உட்படக் கூடாது' என்பது நம்முடைய அடிப்படையான கொள்கை. வேறுவிதத்தில் ஆட்சேபமில்லாத காரியங்களைக்கூடச் சட்டத்தின் பலவந்தத்துக்காக நாம் செய்யத் தயாராயில்லை. சர்க்காரின் அடிப்படையான கொள்கையோ, 'புதிய இந்தியர்கள் சட்ட விரோதமாக டிரான்ஸ்வாலுக்குள் நுழையக் கூடாது; இதைத் தடுக்க வேண்டுமானால் ஏற்கெனவேயுள்ள இந்தியர்கள் சர்க்காரிடம் சர்டிபிகேட் வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும்' என்பது. ஒருவருடைய சர்டிபிகேட்டை இன்னொருவர் சட்ட விரோதமாக உபயோகிக்க இடமில்லாதபடி சர்டிபிகேட்டில் தகுந்த அடையாளங்கள் இருக்க வேண்டும் என்றும் அவர்கள் கேட்கிறார்கள். சர்க்காருடைய இந்தக் கொள்கையை நாம் ஒப்புக்கொண்டு அதற்கு அநுகுணமாக நடந்து வருவதாகச் சொல்லியிருக்கிறோம். சட்டம் இயற்றுவதைத்தான் ஆட்சேபித்திருக்கிறோம். ஓர் உதாரணம் சொல்கிறேன். யாராவது ஒருவரை நாம் சந்தித்தவுடனே 'நமஸ்காரம்' என்று சொல்லி வணங்குகிறோம். இது நாமாகச் செய்வது. ஆனால், 'என்னைக் கண்டதும் நீ வணங்கி நமஸ்காரம் செய்ய வேண்டும்' என்று பலவந்தம் செய்தால், அதற்கு இணங்க நாம் உட்படுவோமா? 'மாட்டோம்' என்றுதான் சொல்லுவோம். இதுபோலவே கறுப்புச் சட்டத்துக்கு உட்பட மறுத்ததற்கும் இப்போது நாமாகப் பதிவு செய்து கொள்வதற்கும் வித்தியாசம் உண்டு. தளபதி ஸ்மட்ஸ் வாக்குறுதி பிறழ்ந்து விட்டால் என்ன செய்வது என்பது இன்னொரு கேள்வி. தன்னுடைய கட்சியின் நியாயத்தில் நம்பிக்கையுள்ள சத்தியாக்கிரஹிக்கு இத்தகைய சந்தேகம் உதவாது. எதிராளி சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பான் என்றே நாம் நம்ப வேண்டும். அப்படி எதிராளி வாக்குறுதி மீறும் பட்சத்தில் நம்மிடமுள்ள சத்தியாக்கிரஹ ஆயுதம் எங்கே போகிறது? மறுபடியும் அதே ஆயுதத்தைக் கையாண்டு வெற்றி பெறுவோம்."

காந்திஜி இவ்வாறு விளக்கிச் சொன்ன பிற்பாடு முதலில் சந்தேகப் பட்டவர்களும் ராஜியை ஒப்புக் கொண்டார்கள்.

ஆனால் இரவு பன்னிரண்டு மணிக்கு நடந்த பொதுக் கூட்டத்தில் இவ்வளவு சுலபமாகக் காரியம் நடக்கவில்லை. சுமார் ஆயிரம் இந்தியர்கள் பொதுக் கூட்டத்துக்கு வந்திருந்தார்கள். இவர்களில் பட்டாணி முஸ்லிம்கள் சிலரும் இருந்தார்கள்.

நண்பர்களிடம் கூறிய விஷயத்தையெல்லாம் பொதுக் கூட்டத்திலும் காந்திஜி எடுத்துக் கூறினார். அவருடைய பேச்சு முடிந்ததும் கூட்டத்தில் ஒரு பட்டாணி முஸ்லிம் எழுந்து நின்றார்.

"உங்களுடைய ராஜி ஒப்பந்தப்படி பதிவு செய்து கொள்வோர் பத்து விரல் அடையாளம் கொடுக்க வேண்டுமா? வேண்டாமா?" என்று கேட்டார்.

"கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய சொந்த அபிப்பிராயம். ஆனால் அப்படிக் கொடுப்பது தன்மதிப்புக்கு விரோதம் என்று எண்ணுகிறவர்கள் கொடுக்க வேண்டியதில்லை" என்று காந்திஜி பதில் கூறினார்.

"நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? பத்து விரல் அடையாளம் கொடுப்பீர்களா? மாட்டீர்களா?" என்று அந்தப் பட்டாணியர் மீண்டும் கேட்டார்.

"நான் கொடுக்கத்தான் போகிறேன்" என்றார் காந்திஜி.

"அது எப்படி? பத்து விரல் அடையாளம் கொடுப்பது அவமானம் என்றும், குற்றவாளிகளிடந்தான் அப்படி விரல் அடையாளம் வாங்குவது வழக்கம் என்றும் நீங்கள் தானே சொன்னீர்கள்? இப்போது நீங்களே பத்துவிரல் அடையாளம் கொடுப்பது எப்படிச் சரியாகும்?" என்று கேட்டார் பட்டாணியர்.

இதற்குப் பதிலாகக் காந்திஜி, கட்டாயத்தின் பேரில் ஒன்றைச் சொல்வதற்கும் சொந்தமாகச் செய்வதற்கும் உள்ள வித்தியாசத்தை விளக்கிக் கூறினார். ஆனால் அவர் கூறியது அந்தப் பட்டாணியருடைய காதில் ஏறவேயில்லை.

"நீங்கள் சொல்வது ஒன்றும் சரியில்லை. தளபதி ஸ்மட்ஸிடம் பதினையாயிரம் பவுன் லஞ்சம் வாங்கிக் கொண்டு இந்திய சமூகத்தை நீங்கள் காட்டிக் கொடுத்து விட்டதாகக் கேள்விப்படுகிறோம். இதைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை. ஆனால் நாங்கள் ஒருநாளும் விரல் அடையாளம் கொடுக்கப் போவதில்லை. யார் ஒருவன் முதன் முத

அவர் வருத்தம்!

மனைவி :—என்ன இது. நீங்கள் இறந்து விட்டதாகப் பேப்பரில் போட்டு இருக்கிறானே !

கணவன் :—என்ன அக்கிரமம் பார்த்தாயா? இன்னும் ஒரு பயலேனும் அநுதாபக் கடிதமே எழுதவில்லை! எத்தனைபேர் நமக்குப் பிராண சிநேகிதம் என்று வேஷம் போட்டார்கள்? அவ்வளவும் பொய்! தலை மறைந்தால் அவ்வளவுதான்!

வில் விரல் அடையாளம் கொடுப்பதற்குப் போகிறானே அவனை நான் கொன்று போட்டு விடப் போகிறேன். அல்லாமீது ஆணையாகச் சொல்கிறேன். ஜாக்கிரதை!''

பட்டாணியர் இவ்விதம் கூறியதைக் கேட்டதும் கூட்டத்திலிருந்தவர்கள் கலங்கிப் போனார்கள். ஆனால் காந்திஜி மட்டும் எவ்விதக் கலக்கமும் அடையவில்லை. அவர் அமைதியாகக் கூறியதாவது;—

"பட்டாணிய நண்பர் ஆத்திரங்கொண்டு பேசினார். அவருடைய ஆத்திரத்துக்குக் காரணமிருக்கிறது. ஆனால் பணத்துக்காக இந்திய சமூகத்தை நான் காட்டிக் கொடுத்து விட்டேன் என்பதை யாரும் நம்ப மாட்டார்கள் என்று நம்புகிறேன். பத்து விரல் அடையாளம் கொடுப்பது சுய மதிப்புக்குப் பங்கம் என்று கருதுகிறவர்கள் அவ்விதம் கொடுக்க வேண்டிய இல்லை என்று முன்னமே சொன்னேன். அவர்கள் விஷயத்தில் பத்து விரல் அடையாளம் இல்லாமலே சர்டிபிகேட் வாங்கிக் கொடுக்கும் பொறுப்பு என்னுடையது. ஆனால் விரல் அடையாளம் கொடுப்பவரைக் கொன்றுவிடுவதாக அவர் பயமுறுத்தியது பெருந்தவறு. அதிலும் ஆண்டவன் பெயரைச் சொல்லி யாரையும் கொல்லப் போவதாகச் சபதம் செய்யக் கூடாது. ஏதோ ஆத்திரப்பட்டு அவ்விதம் அவர் சொன்னார் என்றே கருதுகிறேன். அவர் தாம் பயமுறுத்தியபடி காரியத்தில் செய்வதாயிருந்தாலும் நான் என்னுடைய கொள்கையிலிருந்து பிறழ முடியாது. இதுவரை இயக்கத்தை நடத்தி வந்தவனாகிய நான்தான் இப்போது முதலில் சென்று விரல் அடையாளம் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கத்தான் போகிறேன். உலகத்தில் பிறந்தவர்கள் எல்லாருக்கும் மரணம் உண்டு. வியாதியினாலோ முதுமையினாலோ இறப்பதைக் காட்டிலும் சகோதரன் ஒருவனுடைய கையினால் கொல்லப்பட்டு இறப்பது மேலானது. அதற்காக வருத்தப்பட வேண்டியதில்லை. அப்படி என்னைக் கொல்லவரும் சகோதரனிடத்திலும் கோபமோ துவேஷமோ இல்லாமல் நான் இறந்தேனானால், அதுவே நான் பெறக்கூடிய பெரும் பேறாகும். அதுதான் என் ஆத்மாவுக்கு நற்கதி அளிக்கும். என்னைக் கொல்லும் பொருட்டுத் தாக்கிய சகோதரனும் பிற்காலத்தில் கட்டாயம் நான் குற்றமற்றவன் என்பதை உணர்ந்து கொள்வான்.''

தம்பி! இவ்விதம் காந்திஜி தென்னாப்பிரிக்காவில் ஜோகானிஸ்பர்க்கில் 1908-ம் வருஷம் ஜனவரி 30உ இரவு கூறினார். அப்படிக் கூறிய விவரத்தை அவரே 1924-ம் வருஷம் எரவாடா சிறையில் எழுதிய "தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹம்" என்னும் நூலில் எழுதியிருக்கிறார்.

'காந்தி மகாத்மாவின் வாக்கு இனிக்கவும் பயங்கரமாயிருக்கும் முறையில் நாற்பது வருஷத்துக்குப் பிறகு பலித்துவிட்டது! அவருடைய மனோரதம் நிறைவேறிவிட்டது. சரியாக நாற்பது வருஷத்துக்குப் பிறகு 1948-ம் வருஷம் ஜனவரி 30உ மாலை காந்தி மகான் அவருடைய 'சகோதரன்' ஒருவனுடைய கையினால் இறக்கும் பெரும் பாக்கியத்தை அடைந்தார். 'சகோதரன்' என்று குறிப்பிடுவதற்கு எனக்குக் கை கூசுகிறது. 'சண்டாளப் பாதகன்' என்று எழுதத் தோன்றுகிறது. ஆனால் காந்தி மகாத்மாவின் வாக்கின்படி அந்தப் பாதகனும் தன்னுடைய தவறை உணர்ந்து வருந்துவானா?—ஆண்டவனுக்குத்தான் தெரியும்!

• • •

பிறகு நிகழ்ந்ததைச் சொல்லுவதற்கு முன்னால் அந்தப் பட்டாணியன் அவ்விதம்

ஆத்திரங்கொண்டு பேசியதன் காரணத்தை உனக்குக் கூறவேண்டும். டிரான்ஸ்வாலில் அப்போது சுமார் 50 பட்டாணியர்கள் இருந்தார்கள். பட்டாணியர்களின் இயல்பைப் பற்றிக் கொஞ்சம் உனக்குத் தெரியுமல்லவா? இந்தியாவின் வடமேற்கு எல்லையில் வசிக்கும் சாதியார் பட்டாணியர். முரட்டுத்தனத்துக்கும் பலாத்காரச் செயல்களுக்கும் பெயர் போனவர்கள். கொல்லுவதும் கொலையுண்பதும் அவர்களுக்குச் சர்வ சாதாரணம். இரத்தம் என்பது அவர்களுக்குத் தண்ணீர் பட்டபாடு. அதிக முன்கோபம் உடையவர்கள். அடிக்கடி தங்களுக்குள்ளேயே சண்டை போட்டுக் கொள்வார்கள். சண்டை என்றால் அநேகமாகக் கொலையிலேதான் முடியும்.

'எல்லைப்புற காந்தி' என்று பெயர் பெற்ற கான் அப்துல் கபூர்கான் ஒரு பட்டாணியர்தான். தம்முடைய சாதியாரை முரட்டுத்தனத்தையும் பலாத்காரத்தையும் விட்டு அஹிம்சாவாதிகளாக்க அவர் எவ்வளவோ பாடுபட்டார். சிலகாலம் ஏதோ பலித்திருப்பதாகத் தோன்றியது. ஆனால் நிரந்தரமாக நிற்க வில்லை. காஷ்மீரில் கொள்ளை யடிக்கலாம் என்று கேள்விப்பட்டதும் எல்லைப்புறப் பட்டாணியர் அந்த அழகிய தேசத்தில் புகுந்து அட்டூழியங்கள் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். தற்சமயம் 'எல்லைப்புற காந்தி'யாகிய கான் அப்துல் கபூர்கானும் அவருடைய சகோதரரும் சிறையிலே இருக்கின்றனர்.

இதனால் பட்டாணியர்களிடம் நல்ல குணங்களே இல்லையென்று நினைத்துவிடக் கூடாது. எவ்வளவோ நல்ல குணங்கள் அவர்களிடம் இருக்கின்றன. ஆனால் முரட்டுத்தனமும் பலாத்காரப் பற்றும் அவர்களிடமுள்ள பல நல்ல குணங்களை மறைத்து வருகின்றன.

அதோடு சூது வாது அதிகம் இல்லாத சாதியாரானகையால் அவர்களை ஏமாற்றுவது மிகவும் சுலபம். தென்னாப்பிரிக்காவிலிருந்த பட்டாணியர்கள் அந்த மாதிரிதான் ஏமாற்றப்பட்டிருந்தார்கள்.

அவர்களை ஏமாற்றி காந்திஜியின் மேல் குரோதம் மூளும்படி செய்தவர்கள் யார் என்று இப்போது பார்க்கலாம். சில இந்தியர்கள் அனுமதிச் சீட்டு இல்லாமல் சட்டத்துக்குப் புறம்பாக டிரான்ஸ்வாலுக்குள் நுழைந்திருந்தார்கள்.

இவ்விதம் அனுமதிச் சீட்டு இல்லாமலோ பொய் அனுமதிச் சீட்டுடனோ இந்தியர்களை டிரான்ஸ்வாலுக்குள் கொண்டு வருவதற்காகவே ஒரு கோஷ்டி வேலை செய்து கொண்டிருந்தது. இந்த வேலையின் மூலம் மேற்படி கோஷ்டி லாபம் சம்பாதித்துக் கொண்டிருந்தது. இந்த கோஷ்டியாருக்குச் சத்தியத்திலோ அஹிம்சையிலோ நம்பிக்கை கிடையாது. காந்திஜி ஆரம்பித்த சத்தியாக்கிரக இயக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு தங்களுடைய முறை தவறிய காரியங்களைச் செய்து கொண்டு போகலாம் என்று எண்ணியிருந்தார்கள். இயக்கம் நடந்து கொண்டிருக்கும் வரையில் யாரும் எந்த விதமான அனுமதிச் சீட்டும் காட்ட வேண்டியதில்லை யல்லவா? ஆகையால் இயக்கம் நடக்கும்வரையில் இவர்களுக்குச் சௌகரியம்; இயக்கம் நின்றுவிட்டால் இவர்கள் தங்கள் தொழிலை நடத்த முடியாது. இந்தக் கோஷ்டியார்தான் "காந்திஜி ஸ்மட்ஸிடம் லஞ்சம் வாங்கிக் கொண்டார்" என்ற கதையைக் கட்டிவிட்டு, பட்டாணியருக்கும் தூபம் போட்டு விட்டிருந்தார்கள்.

பொதுக் கூட்டத்தில் பட்டாணியரின் கேள்விகளையும் காந்திஜியின் பதில்களையும் ஜனங்கள் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள். பிறகு பொதுக் கூட்டத்தின் தலைவரும் ராஜி ஏற்பாட்டை ஆதரித்துத் தமது அபிப்பிராயத்தைச் சொல்லிவிட்டு, கூட்டத்தின் கருத்தைக் கேட்டார். கூட்டத்திலிருந்த சுமார்

டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகம்
தீபாவளி முதல் தினசரி

10 - 11 - 1948 புதன் மாலை 6 மணிக்கு
கல்கி ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்
தலைமையில் நடைபெறும்

"அந்தமான் கைதி"
(கு. சா. கிருஷ்ணமூர்த்தி எழுதியது)
சென்னை ஒற்றைவாடை தியேட்டரில்

ஆயிரம் இந்தியர்களில் பட்டாணியர் இரண்டு பேரைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் ராஜி ஏற்பாட்டை ஒப்புக்கொண்டு கையைத் தூக்கித் தங்கள் மனப்பூர்வமான சம்மதத்தைத் தெரிவித்தார்கள்.

இரவு மூன்று மணிக்குக் காந்திஜி வீடு போய்ச் சேர்ந்தார். அப்புறமும் தூக்கம் வரவில்லை. மறுநாள் உதயத்தில் மற்ற சத்தியாக்கிரஹக் கைதிகளை வரவேற்பதற்காகச் சிறைச்சாலை வாசலில் அவர் போய்க் காத்திருக்க வேண்டு மல்லவா?

சிறைச்சாலைத் தலைவருக்கு முதல் நாள் இரவே உத்தரவு வந்து விட்டது. காலை ஏழு மணிக்குக் காந்திஜி சிறை வாசலுக்கு வந்து சேர்ந்ததும் சிறைக்குள்ளிருந்த சத்தியாக்கிரகக் கைதிகள் வெளியேற ஆரம்பித்தனர். ஒரு மணி நேரத்துக்குள் எல்லோரும் விடுதலை செய்யப் பட்டார்கள்.

அப்புறம் இரண்டுநாள், விடுதலையடைந்த சத்தியாக்கிரகிகளுக்கு வரவேற்பும் விருந்தும் கொண்டாட்டமுமாக இருந்தது.

ராஜி ஏற்பாட்டின் ஷரத்துக்கள் இந்தியர்களுக்கு நன்றாக எடுத்துச் சொல்லப் பட்டன. ஆயினும் ஏற்கெனவே அதிருப்தியடைந்திருந்தவர்களைத் திருப்தி செய்ய முடியவில்லை. அவர்கள் தங்கள் துவேஷப் பிரசாரத்தை விடாமல் செய்து வந்தார்கள். பொதுவாகப் பெரும்பாலான இந்தியர்கள் விஷயத்தில் அவர்களுடைய பிரசாரம் பலன் தரவில்லை. ஆனால் பட்டாணியர்களின் ஆத்திரம் மட்டும் வளர்ந்து கொண்டு வந்தது.

இந்தியர்கள் தாங்களாகவே சென்று பதிவு செய்வதற்குரிய பாரங்களை சர்க்கார் அதிகாரிகள் இந்தியத் தலைவர்களைக் கலந்து கொண்டு தயாரித்தார்கள்.

* * *

பிப்ரவரி 10உ இந்திய சமூகத்தின் தலைவர்கள் முதன் முதலாகச் சென்று பதிவு செய்து கொள்ளவேண்டும் என்று தீர்மானமாயிற்று. தலைவர்கள் வழிகாட்டினால்தான் மற்றவர்கள் சங்கோசமில்லாமல் சென்று பதிவு செய்து கொள்ள முடியும். அதோடு சர்க்கார் அதிகாரிகள் பதிவு செய்து கொள்ள வருகிறவர்களை மரியாதையாக நடத்துகிறார்களா என்று கவனித்துக் கொள்ளுதலும் சாத்தியமாகும்.

பிப்ரவரி 10உ காலையில் காந்திஜி வீட்டைவிட்டுக் கிளம்பித் தம் காரியாலயத்துக்குச் சென்றார். அவருடைய காரியாலயத்திலேயேதான் சத்தியாக்கிரஹ காரியாலயமும் இருந்தது. காரியாலயத்தின் வாசலில் மீர்ஆலம் என்னும் பட்டாணியரும் அவருடைய தோழர்கள் சிலரும் நின்று கொண்டிருந்தார்கள். மீர்ஆலம் ஏற்கெனவே காந்திஜியிடம் தொழில் முறையில் ஆலோசனை கேட்கப் பலதடவை வந்திருக்கும் கட்சிக்காரர். ஆறு அடி உயரமும் திடகாத்திர தேகமும் படைத்தவர். காந்திஜியைச் சந்தித்தவுடனே சலாம் செய்து முகமன் கூறுவது அவருடைய வழக்கம். ஆனால் இன்றைக்கு அவர் சலாம் செய்யவில்லை. அவருடைய முகத்தில் வழக்கமான புன்னகையும் இல்லை. காந்திஜி "என்ன சேதி? சௌக்யமா?" என்று கேட்டதற்கு அவர் சரியாய் பதில் சொல்லவும் இல்லை. அவருடைய கண்களில் கோபம் கொதித்ததைக் காந்திஜி' கவனித்துக் கொண்டார். ஏதோ ஒரு விபரீத சம்பவம் இன்றைக்கு நடக்கப்போகிறது என்று அவருடைய உள்ளுணர்வு கூறியது.

காரியாலயத்துக்குக் காந்திஜி வந்து சேர்ந்த சில நிமிஷங்களுக்கெல்லாம் சத்தியாக்கிரஹக் கமிட்டித் தலைவர் ஈஸப் மியாவும் மற்றப் பிரமுகர்களும் வந்து சேர்ந்தார்கள். எல்லாரும் பதிவு செய்யும் ஆபீஸுக்குப் புறப்பட்டார்கள்.

காந்திஜியின் காரியாலயத்திலிருந்து மேற்படி ஆபீஸ் ஏறக்குறைய முக்கால் மைல் தூரத்தில் இருந்தது. எல்லாரும் நடந்தே சென்றார்கள். அவர்களை மீர் ஆலமும் அவருடைய பட்டாணியத் தோழர்களும் பின் தொடர்ந்தார்கள்.

பதிவு செய்யும் சர்க்கார் ஆபீசுக்குச் சில கெஜ தூரத்தில் அர்னட், கிப்ஸன் என்னும் அட்டர்னிகளின் ஆபீஸ் இருந்தது. அந்தக் கட்டடத்தின் வாசலில் மீர் ஆலம் காந்திஜியின் அருகில் நெருங்கி வந்து "எங்கே போகிறீர்?" என்று கேட்டார்.

"என் பெயரைப் பதிவு செய்து அநுமதிப் பத்திரம் பெறுவதற்காகப் போகிறேன். பத்து விரல் அடையாளமும் கொடுக்கப் போகிறேன்!" என்று காந்திஜி சொன்னார்.

அவ்வளவுதான்; பின் புறத்திலிருந்து ஒரு பெரிய குண்டாந்தடி காந்திஜியின் தலையில் விழுந்தது. "ஹே ராம்!" என்று சொல்லிக் கொண்டே காந்தி மகாத்மா தரையில் சாய்ந்து மூர்ச்சை யடைந்தார்.

EWI
LTD.
SYMBOL OF QUALITY

present



Peace!
Happiness!
Health!
Prosperity!

ALL UNDER THE COOLING

PHŒNIX
Fans
MODEL - 1948

assert

Messrs. RM. S. & CO., Limited

DISTRIBUTORS OF PHOENIX FANS FOR SOUTH INDIA
INCLUDING MADRAS CITY AND NATIVE STATES

WHO OFFER

THEIR HEARTFELT

DEEPAVALI GREETINGS

TO ALL THEIR DEALERS, CUSTOMERS
FRIENDS AND WELL-WISHERS

இந்தியப் போர்க் கப்பல்களுக்கு வரவேற்பு

ரஜனி

கொழும்பு, அக்டோபர் 25.

“சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்” என்றார் அமரகவி பாரதியார். பாலம் அமைக்காவிட்டாலும் சுதேசிக் கப்பலினாலாவது இணைப்போமென்று தூத்துக்குடிக்கும் கொழும்பிற்குமிடையில் ஒரு தேசியக் கப்பலை விட்டார் வீரத் தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளை. ஆனால் அன்னிய ஆட்சி அன்று இரு நாடுகளிலும் அதிகாரம் செலுத்தி வந்தது. கப்பலோட்டிய தமிழரின் முயற்சியை ஒடுக்கப் பல மாதிரியான சங்கடங்கள் சிருஷ்டி செய்யப் பட்டன. சுதேசிக் கப்பலுக்குப் போட்டியாக ஓடிய பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியின் கப்பலுக்கு அரசாங்கம் சகல வசதிகளையும் செய்து கொடுத்தது. சுதேசிக் கப்பலுக்கு அரசாங்க ஆதரவு இல்லாததோடு இடைஞ்சலும் அதிகமாயிருந்தபடியால், சுதேசிக் கப்பல் போக்குவரத்தும் நின்று போய்விட்டது.

சுதேசிக் கப்பலுடன் போட்டியிட்ட பிரிட்டிஷ் கம்பெனியார் கப்பல் போக்குவரத்து நடத்துவதை இவ்வருடம் டிசம்பர் 31-ம் தேதியுடன் நிறுத்திக் கொள்ளப் போகிறார்கள். இதற்குக் காரணம் கொழும்பு—தூத்துக்குடி கப்பல் போக்குவரத்து பெருத்த நஷ்டத்தில் வேலை செய்வதுதான். ஜனவரி முதல் தேதியிலிருந்து இந்தக் கடல் பாதையில் விந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி என்ற சுதேசிக் கப்பல் கம்பெனி கலாந்தி என்ற கப்பலைக் கொண்டு கப்பல் போக்குவரத்து நடத்தப் போகின்றது. நஷ்டத்தில் வேலை செய்வதாயிருந்தாலும் கடலோரக் கப்பல் போக்குவரத்தை அன்னியரிடமிருந்து கைப்பற்றுவது மிக மிக முக்கியமானஒன்றாகும். இலங்கையும் இந்தியாவும் சுதந்திரமடைந்து விட்டபடியால் இரு நாடுகளுக்குமிடையில் சுதேசிக் கபபல் ஓடுவதுதான் கௌரவமானதென்றும் விந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியின் கொழும்பு ஏஜண்டுகள் பெருமையோடு சொல்லுகிறார்கள். அவர்கள் பெருமை படைவது முற்றிலும் நியாயமானது. இந்தப் பெருமையில் பங்கு கொள்ளக் கப்பலோட்டிய தமிழர் நம்மிடையில் இல்லாததுதான் வருத்தத்தைக் கொடுக்கிறது. கலாந்தி ஓடுவதைப் பார்த்து அவருடைய ஆன்மாவாவது சாந்தியடையட்டும்!

இந்திய யுத்தக் கப்பல்களுக்கு வரவேற்பு

பிரிட்டனில் விசேஷக் கடற்படைப் பயிற்சி பெறுவதற்காகப் போயிருந்த 47 இந்தியக் கடற்படை வீரர்கள் பிரிட்டிஷ் கப்பலொன்றில் கொழும்புக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களை அழைத்துக் கொண்டு போவதற்காக இந்தியப் படைக் கப்பல் “கிருஷ்ணா” இந்திய தேசியக் கொடியைப் பறக்க விட்டுக் கொண்டு கொழும்பு துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தது. இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் இந்தியக் கடற்படையைச் சேர்ந்த ஒரு கப்பல் இந்தியக் கொடியுடன் இங்கு வந்தது இதுவே முதல் முறையாதலால் பொதுஜனங்கள் மிகுந்த உற்சாகத்தோடு கப்பலை வரவேற்றார்கள். பொது ஜனங்கள் கப்பலில் ஏறிப் போய்ப் பார்க்க ஸ்ரீ கிரியின் காரியதரிசி ஸ்ரீ இராகவாச்சாரி சிறப்பாக ஏற்பாடு செய்து கொடுத்திருந்தது மிகவும் பாராட்டப் படுகிறது.

இம்மாதம் 28-ந் தேதி சுதந்திர இந்தியாவின் குரூய்ஸர் கப்பலான “டில்லி”யும் துணைக் கப்பல் “காவேரி”யும் திரிகோணமலை கடற்படைத் தளத்துக்கும் கொழும்பு துறைமுகத்துக்கும் வருகின்றன. அந்தக் கப்பல்களுக்கு ஆடம்பரமான வரவேற்பளிக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

பணமனுப்பப் புதிய நிபந்தனைகள்

இலங்கையிலிருக்கும் இந்தியர்கள் இந்தியாவிலுள்ள குடும்பங்களின் சம்ரட்சணைக்குப் பணமனுப்ப ஒரு புதிய நிபந்தனையை இப்பொழுது போட்டிருக்கிறார்கள். இது வரையில் ஒவ்வொருவரும் தங்களுடைய வருமானத்தை ருசுப்படுத்தினால் அதில் மூன்றிலொரு பங்கை இந்தியாவிலுள்ள குடும்பங்களுக்கு அனுப்பலாமென்றார்கள். இனி இந்தியாவில் குடும்பமிருப்பதை ருசுப் படுத்த கிராம முனிசீப், டிஸ்ட்ரிக்ட் முனிசீப், தாசில்தார் முதலான யாராவது ஒரு

கெஜெட்டட் ஆபீஸரிடமிருந்து சர்டிபிகேட் வாங்கியனுப்பி, அந்த சர்டிபிகேட்டை இலங்கையிலுள்ளவர்கள் இங்கு காண்பித்தே பணம் அனுப்ப பர்மிட் வாங்க வேண்டும். இது ஏழை எளிய குடும்பங்களைக் கடுமையாகப் பாதிப்பதாயிருக்கும். இந்தியாவிலுள்ள கெஜட்டட் ஆபீசர்கள் இவ்வித சர்டிபிகேட்டுக்காக எளிய ஜனங்கள் வரும்பொழுது அவர்களிடம் தங்களுடைய அதிகாரத்தைக் காண்பியாமல் ஜீவகாருண்யத்துடனும் மனிதத் தன்மையுடனும் நடந்து கொள்ளுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

வர்த்தகப் புதிர்கள்!

இலங்கை ரப்பர் முழுவதையும் ஒரேயடியாக விலைக்கு வாங்கிக்கொண்டு விடத் தயாரென்று சோவியத் அரசாங்கம் சொல்லி விருப்பது வர்த்தகத் துறையில் சில புதிய புதிர்களைக் கிளப்பி விட்டிருக்கிறது. ரஷ்யாவின் யோசனையை அங்கீகரித்தால் புதிய ரப்பர் தோட்டங்களை ஆரம்பிக்கலாமென்றும் இலங்கையின் வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவு நீங்குமென்றும் இங்குள்ள கம்யூனிஸ்டுகள் பிரசாரம் செய்ய ஆரம்பித்திருக்கின்றனர்.

ஆயினும் சோவியத் வர்த்தக உறவை ஸ்ரீ சேனநாயகா ஒருகாலும் விரும்ப மாட்டார் என்பது வெளிப்படை. ஒரு சமயம் அவரை மற்ற மந்திரிகள் இணங்கச் செய்து விடுவார்களோ என்ற அச்சம் காரணமாக இலங்கை ரப்பர் முழுவதையும் விலைக்கு வாங்கிக்கொண்டுவிட அமெரிக்கா முன்வரக் கூடுமென்று இங்கே பேசிக் கொள்ளப்படுகிறது.

கா ல க்ஷே ப ம்

போதாது!

உபாத்தியாயர் (வழக்கமாக நேரஞ் சென்று வரும் மாணவனைப் பார்த்து):— என் அப்பா! உனக்கு எத்தனை தடவை சொல்லுவது, நேரஞ்சென்று வரக்கூடாது என்று? தினம் இதையே வழக்கமாக வைத்துக் கொண்டிருக்கிறாயே!

மாணவன்:— இல்லை, ஸார்! பத்துக் குடித்தனம் இருக்கும் வீட்டில் நாங்கள் குடியிருக்கிறோம். ஒன்பது பேர் வீட்டில்தான் அலாரம் கடிகாரம் இருக்கிறது; எங்கள் வீட்டில் இல்லை!

✱

கணக்குப்படி!

ஒரு விருந்தாளி தம் நண்பர் ஒருவர் வீட்டிற்கு வந்து ஒரு மாதத்துக்கு மேல் ஆகியும் கிளம்பும் யோசனையே இல்லாமல் இருந்தார். ஒருநாள் அவர் தமது ஊருக்குப் போகப் போவதாகச் சொன்னார்.

விருந்தாளி:— நாளைக்கு நான் ஏறப்போகிற வண்டி எத்தனை மணிக்குக் கிளம்புகிறது?

நண்பர்:— இப்பொழுதி லிருந்து கணக்குப் பார்த்தால் 23 மணி 57½ நிமிஷம் இருக்கிறது!

✱

தெரிந்த லட்சணம்

தந்தை:— நீ எப்பொழுதும் பலாத்காரத்தை உபயோகிக்கக் கூடாது. உன்னை எந்தப் பையனாவது ஒரு கன்னத்தில் அடித்தால் அவனுக்கு இன்னொரு கன்னத்தையும் காண்பிக்க வேண்டும். தெரிந்ததா?

பையன்:— தெரிகிறது, அப்பா! அந்தப் பையன் என்னைவிடச் சின்னவனாயிருந்தால்?

சபாஷ்!

அம்மா:— மங்களம், பால் எப்பொழுது பொங்குகிறது என்று பார்த்து என்னிடம் வந்து சொல்லும்படி சொன்னேனே, ஏன் சொல்லவில்லை?

மங்களம்:— ஐயோ, சொல்ல மறந்து போய் விட்டேனே! சரியாக எட்டு அடித்துப் பத்து நிமிஷத்துக்குப் பொங்கிற்று!

★

எப்படி?

"மோட்டார் விபத்தில் உனக்குக் கை ஒடிந்துபோய் விட்டதாகக் கேள்விப்பட்டேன். அது சம்பந்தமாக நீ தொடுத்த வழக்கு என்னவாயிற்று?"

"ஐயாயிரம் ரூபாய் நஷ்ட ஈடு கொடுத்தார்களே!"

"அப்படியா? அந்தப் பணத்தைக் கொண்டு என்ன செய்யப் போகிறாய்?"

"ஒரு மோட்டார் வாங்கப் போகிறேன்!"

★

போன இடம்!

"நீ ஓயாமல் படிக்கிறாயே, இத்தனையும் மறந்து போகாமலிருக்க வேண்டுமானால் உனக்கு நல்ல ஞாபகசக்தி இருக்க வேண்டுமே!"

"ஆமாம், ஒருதரம் என் மூளையில் புகுந்து விட்டால் பிறகு நான் மறக்கமாட்டேன்."

"நான் பத்து ரூபாய் கடன் கொடுத்ததை மறந்துவிட்டாய் போலிருக்கிறதே!"

"ஓ, ஞாபகம்! அது என் மூளையிலா போயிற்று? இல்லையே! சட்டைப் பைக்குள் அல்லவா போட்டுக் கொண்டேன்?"

அங்கமுத்து

கமலா சுந்தரம்

" அம்மா, அம்மா! எனக்குப் பணியாரம் கொடு, அம்மா!"

"ஏண்டா, பெரியம்மாதான் அப்பவே கொடுத்தாளே!"

"ஊம்!...இன்னும் கொஞ்சம் வேணும், அம்மா!"

"உன் தொல்லையே பெரிசா யிருக்கிறதே!" என்று அலுத்துக் கொண்டாள் ராக்கம்மா.

பெரிதாக ராகம் வைத்து அழுது கொண்டே அம்மாவின் சேலைத் தலைப்பை இன்னும் பலமாக இழுக்க ஆரம்பித்தான் கண்ணன். வேறு வழியில்லாமல் அவன் கேட்டதைக் கொடுத்துவிட்டு, மறுபடியும் தன் வேலையைக் கவனிக்கச் சென்றாள் ராக்கம்மா.

மெதுவாக அசை போட்டுக் கொண்டே கையிலிருந்ததைத் தின்றுவிட்ட கண்ணனின் பார்வை, விஷமம் செய்வதற்கு அங்கு ஏதாகிலும் அகப்படுமா வென்று அலைந்தது. அவசரத்தில் ராக்கம்மா அலமாரியைத் தாளிட மறந்து போய் விட்டது அவன் கண்ணில் பட்டது. கண்ணன் சுற்று முற்றும் பார்த்தான். ஒருவரும் கண்ணில் தென்படாமற் போகவே சற்றுத் தைரியமடைந்து மெல்ல அலமாரியைத் திறந்துவிட்டான். அவன் கண்ணில் முதலில் தென்பட்டது பணியாரம் வைத்திருந்த சம்புடந்தான். யாராவது வந்து விட்டால் என்ன செய்வது என்ற பயத்தால் தயக்கத்துடன் அதனருகில் சிறிது நேரம் நின்றான். ஆனால் பணியாரத்தை அப்படியே விட்டுச் செல்ல அவனுக்கு மனமில்லை. கொஞ்சம் கொஞ்சமாக எல்லாவற்றையும் தீர்த்துக் கட்டிவிட்டு, காலியான பாத்திரத்தை முன்போல் மூடி வைத்தான். ஓசைப்படாமல் அங்கிருந்து நழுவி, நல்ல பிள்ளைபோல் மற்றக் குழந்தைகளுடன் விளையாடத் தொடங்கினான்.

வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த அவன் தாயார், தன் ஓரகத்தி துணிகளைத் துவைத்து எடுத்துக்கொண்டு வருவதைக் கண்டு வெளியே வந்தாள். இடுப்பில் வைத்திருந்த பெரிய அலுக் கூடையை "உஸ்......அப்பாடி!" என்றபடி இறக்கி வைத்த முருகம்மா, சிரமபரிகாரம் செய்து கொள்ள அங்கிருந்த ஒரு மேடைமேல் அமர்ந்தாள். கூடையிலிருந்த துணிகளை ஒவ்வொன்றாக எடுத்து உதறி உலர்த்த ஆரம்பித்த ராக்கம்மா, "இத்தனை துணியையும் ஒண்டியாகச் சென்று துவைப்பானேன்? என்னைக் கூப்பிட்டிருந்தால் வரமாட்டேனா?" என்றாள்.

"நீ மாத்திரம் சும்மாவா இருந்தே? நாம்தான் தோய்த்தால் போகிறது என்று போனேன்!" என்ற முருகம்மா பேச்சை மாற்றிக்கொண்டு, "அது கிடக்கு, விடு! இதைக் கேட்டாயா? தெத்துவாய் நங்கனுக்குப் பெண் கட்டப் போறாங்களாமே!" என்று ஆற்றங் கரையில் கேட்ட வம்பை ஓரகத்திக்கு எடுத்துக் கூற ஆரம்பித்தாள்.

"சித்தி! ரொம்பப் பசிக்கிறது! ஏதாவது இருந்தால் கொடேன்!" என்றபடியே பள்ளியிலிருந்து வந்த சுந்தன், சிலேட்டும் புத்தகங்களும் திணிக்கப்பட்டிருந்த தன் பையை ஒரு பக்கமாக வீசி எறிந்துவிட்டு, ஓடி வந்த வேகத்தில் மூச்சு வாங்க நின்றான்.

"அவனை ஏண்டா தொந்தரவு செய்கிறாய்! நான் தருகிறேன், வா!" என்று சொல்லிக் கொண்டே அந்த இடத்தை விட்டு எழுந்தாள் ராக்கம்மா.

2

"ராக்கி! இங்கே வா!"

ஓரகத்தி உரத்த குரலில் தன்னைக் கூப்பிட்டதைக் கேட்ட ராக்கி உள்ளே ஓடோடியும் சென்று "அக்கா! என்னத்துக்குக் கூப்பிட்டீங்க?" என்று கேட்டாள்.

"எதுக்கா? இதோ, பாரு!"

"முருகம்மாளின் கையில் பணியாரச் சம்புடம் இருந்தது. விஷயம் புரியாத ராக்கி, "கண்ணனுக்குக் கொடுத்துவிட்டுக் கந்தனுக்காகத்தானே மூடி வைத்தேன்!" என்றாள்.

"சம்புடம் என்னவோ மூடித்தானிருக்கிறது; பணியாரத்தைத்தான் காணோம்!" என்றாள் முருகம்மாள்.

அவள் குரலில் இருந்த ஏகத்தாளம் ராக்கிக்குச் சுரீரென்றது. "அதென்னமோ. நான் என்னத்தைக் கண்டேன்?" என்றாள்.

"பசியோடு வந்த பிள்ளைக்குப் பதில் சொல்லு!"

முருகம்மாளென்னவோ இதைச் சாதாரணமாகத்தான் சொன்னாள். ஆனால், ராக்கிக்கு அவள் தன்மீது சந்தேகப்படுவதாகவே தோன்றியது. இத்தனை காலம் ஒன்றாக இருந்தும்கூடத் தன்னை யறியாமல் போய்விட்டாளே என்று முருகம்மாளின் மீது மனத்தாங்கல் கொண்டாள். ரோசம் பொங்க, "நானா தின்னுட்டேன்?" என்றாள்.

இவ்வளவு நேரம் பொறுமையாக நின்று கொண்டிருந்த கந்தன், "என்ன, அம்மா! பசிக்கிறது என்றால் ஒன்றையும் காணோம்! நீங்கள் வேறே சண்டை பிடிக்க ஆரம்பித்து விட்டீர்களே!" என்றான்.

ராக்கியின் வார்த்தையில் ஆத்திரமடைந்த முருகம்மாள் அதைக் காட்டிக் கொள்ள, "பாவி மவனே! இங்கே ஒன்றும் கிடையாது, போ!" என்று கூறி அவன் முதுகில் ஓங்கி ஒரு அறை வைத்தாள்.

அவ்வளவுதான்; புற்றிலிருந்து ஈசல் கிளம்புவதுபோல ராக்கியின் வாயிலிருந்து சொற்கள் கிளம்பின. முருகம்மாளும் அதற்கு விட்டுக் கொடுப்பவளாக இல்லை. ஒருவருக்கொருவர் சளைக்காமல் சொல்மாரி பொழிந்து கொண்டனர். சற்றுநேரத்துக்கு முன்பு அன்னியோன்னியமாக அளவளாவிக் கொண்டிருந்த அவ்விருவரும், எலியும் பூனையும்போல ஒருவரை யொருவர் கடுமையாக வெட்டி விடுவதுபோல் நோக்கினர்.

3

அந்தி மயங்கும் நேரம். ஊர் நோக்கிச் செல்லும் வண்டிகள் புழுதியைக் கிளறி விட்டுக் கொண்டே சென்றன. கட்டுக் கட்டாக வண்டிகளில் ஏற்றப்பட்டிருந்த புது வைக்கோல் ஒருவித நறுமணத்தைப் பரப்பிக் கொண்டே சென்றது.

வயலிலிருந்து வீடு திரும்பிய அக்கமுத்து, உழவுக்கு ஓட்டிச் சென்ற காளைகளைத் தொழுவத்தில் கட்டினான். தண்ணீர் காட்டி அவைகளுக்குத் தீனியும் போட்ட பிறகு வீட்டிற்குள் நுழைந்தான். அங்கே சோறு படைக்கப் பெண்சாதியையோ, அண்ணியையோ காணவில்லை. பசிமேலீட்டால் அவன் கோபத்துடன், "ராக்கி! ராக்கி! எங்கே ஒழிஞ்சு போயிட்டே?" என்று இரைந்தான்.

ஒரு முனகல்தான் பதிலுக்கு வந்தது. ராக்கி ஒரு மூலையில் சுருட்டிக்கொண்டு படுத்திருப்பதைத் தெரிவித்தது அது. அக்கமுத்து கவலையுடன், "என் ராக்கி, இப்படி முடங்கி விட்டாய்? உடம்பு சுகமில்லையா, என்ன?" என்று தணிந்த குரலில் விசாரித்தான்.

"உடம்புக்கு ஒரு கேடும் வரமாட்டேன் என்கிறது! குண்டுமாதிரி நல்லாத்தான் இருக்கிறேன்!" என்றாள் ராக்கி.

"பின்னே, இதென்ன விளையாட்டு? எழுந்து வந்து விளக்கைப் பொருத்திச் சோறு போட வா!"

"இனிமே, இந்த வீட்டிலே என் கையாலே ஒன்றும் செய்யப் போவதில்லே!" என்ற ராக்கியின் நிதானமான குரல் அவனைத் திகைக்க வைத்தது.

ராக்கி விம்மல்களுக்கும் விக்கல்களுக்கும் இடையே நடந்த கதைக்குக் காது, மூக்கு வைத்துச் சொன்னாள்.

இயற்கையிலேயே முன் கோபி அங்கமுத்து. அதனுடன் பசியுணர்வும், காலெல்லாம் வயலில் உழுததினாலும் களைப்புற்றிருந்தான்.

"சரி, இத்தனையும் ஆன அப்புறம் இங்கே ஒரு நிமிஷம் கூட இருக்கக் கூடாது! எதையும் பார்க்க வேண்டியதில்லே! எழுந்திரு, போகலாம்!" என்றான்.

ராக்கி "எங்கே போக?" என்றாள்.

"வேலப்ப மாமன் வீடு காலியாக இருக்கிறது; உழைச்சுச் சாப்பிட என் கையிருக்கிறது. புறப்படுன்னு, புறப்படு! ஏன் இன்னும் உட்கார்ந்திருக்கே?"

அங்கமுத்துவின் மனப்போக்கைக் கண்ட ராக்கிக்கு அதையெல்லாம் 'ஏன் சொன்னோம்?' என்று பயமுண்டாகி விட்டது.

அதற்குள் கண்ணனைத் தேடி இழுத்துக் கொண்டு வந்துவிட்டான் அங்கமுத்து. ஆகவே, வேறு வழியில்லாமல் அவனைப் பின்தொடர்ந்து செல்லும்படி யாகிவிட்டது அவளுக்கு.

நடந்ததனைத்தையும் தூரத்தி லிருந்து கவனித்துக் கொண்டிருந்த முருகம்மாள், "வேலே செய்து களைப்புடன் வீட்டுக்கு வந்த புருஷனுக்குச் சோறுகூடப் போடாமல், இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி எங்கேயோ இழுத்துக்கொண்டு போகிறாளே, பாவி! மத்தவங்களுக்கெல்லாம் வாயில்லேயென்று நினைச்சுட்டாப் போலேருக்கு!" என்று தனக்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டாள்.

4

"மாரிமுத்துவா! ரொம்ப நாளாய்க் கண்ணிலேயே காணுமே! வா அப்பா, வா!"

"காணாமல் என்ன? நானும் காலமே பிடிச்சு அலையறேன்; ஒரு வெத்திலைச் சருகுக்கு வழியைக் காணோம், இந்த ஊருக் கடையிலே!"

"அதானே பார்த்தேன், எதுடா இந்த ராசாயிக் கிழவியைத் தேடிக்கிட்டு இவ்வளவு தூரம் வருகிறானே என்று!"

"என்ன, அப்படிச் சொல்லிட்டீங்க!"

"என்னமோ கொஞ்சம் வைச்சி. இதைக் காசுகொடுத்தும் வந்தியே! அதே சந்தோஷம்! இரு, வெத்திலே கொண்டாரேன்!"

வெத்திலே எடுத்துவர உள்ளே சென்றாள் கிழவி. அதை வாங்கிக் கொண்டு அவளுடைய தொணதொணப்பிலிருந்து எப்படிச் சீக்கிரம் தப்புவது என்று யோசித்தான் மாரிமுத்து.

ஆனால் கிழவியா லேசில் விடுவாள்? "சும்மா உட்காரு, தம்பி! ஒரு அஞ்சு நிமிஷம்! நீ எங்கே வரே, எங்கே போறே!" என்றாள்.

வேறு வழியில்லாமல் திண்ணையில் அமர்ந்தான் மாரிமுத்து. எதைப்பற்றி அவள் கேட்டுவிடப் போகிறாளென்று பயந்தானோ, அதை எடுத்த எடுப்பிலேயே கேட்டாள் ராசாயி.

"ஏன் தம்பி, ஊரெல்லாம் பேசிக்குதே, நெசந்தானா?"

"ஊருக்கு என்ன வேலே? ஏதாவது வம்பாயிருக்கும்!" என்று மழுப்பினான் மாரிமுத்து.

"அதுதானே சொல்றேன்! என்ன இருந்தாலும் அங்கமுத்துக்கு உன்னை அடிச்சுப் போட்டுவிட்டுத் துட்டைத் திருடிக்கிட்டுப் போகக்கூடத் தைரியமிருக்குமா?"

மாரிமுத்துவுக்கு தூக்கிவாரிப் போட்டது. அங்கமுத்துவாவது அவனைக் கை தொட்டு அடிக்கவாவது! அவ்விதம் கனவிலும் எண்ணியிருக்க மாட்டானே அவன் தம்பி! ஏதோ தாங்கள் பிரிந்திருப்பதைப் பற்றித்தான் கிழவி கேட்கப் போகிறாளென்று அவன் நினைத்தான். ஆனால், ஊரில் இப்படியெல்லாம் கதை கட்டி விட்டிருப்பது அவனுக்குத் தெரியாது. தம்பி பிரிந்துபோன காரணம் அவனுக்கே சரியாகத் தெரியாமலிருக்கும் போது, ஊரிலிருப்பவர்களுக்கு எப்படித் தெரியும்?

"அவர் அந்தமாதிரி யிருக்கிறதைப் பற்றிக்கூட ஒன்றுமில்லே! அண்ணனை மதிப்புக்காவது ஒரு வார்த்தை கேட்டுப் பின்னுகூட இல்லாமே, அந்தச் சிறுக்கி பேச்சைக் கேட்டுக்கிட்டு ஆடுறாரே, அது தான் வெசனமாயிருக்கு!" என்று முருகம்மாள் அன்றைக்குச் சொன்னது நியாயமாகவே பட்டது மாரிமுத்துவுக்கு. ஏது எப்படியிருந்தாலும் தன்னைப் பெரியவனாய் மதித்து, ஒரு வார்த்தைகூடக் கேட்காமல்

வீட்டைவிட்டுப் போனவனைத் தான் மாத்திரம் ஏன் வருந்தி அழைக்க வேண்டும் என்ற மனத்தாங்கலால் அதுவரை அவன் போகாதிருந்தான்.

5

வயலுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தான் அங்கமுத்து. வரப்புகளை வெட்டி விடுவதும், அடைத்து விடுவதுமாக அவன் உடம்புதான் வேலை செய்துகொண்டிருந்ததே தவிர; அவனுடைய மனது அங்கில்லை.

'நான்தான் சிறுபிள்ளைத்தனமா ஆத்திரத்திலே செய்துவிட்டேன் என்றால், அதுக்கு மேலே இருக்காங்களே அண்ணாச்சி!—அவர்கூடவா அப்படிச் செய்வது? முகத்தைப் பார்க்கக்கூடப் பிடிக்காதவர் போலத் திருப்பிக்கொண்டு போயிட்டாரே!' மனம் பலவாறு செல்லவே வேலையில் புத்தி செல்லவில்லை. மண்வெட்டியைக் கீழே போட்டுவிட்டு அவன் தலை நிமிர்ந்தான். பின் பக்கத்திலிருந்து ஏதோ சத்தம் கேட்டது; திரும்பிப் பார்த்தான். அண்ணாச்சியின் சின்னக் குழந்தையான முத்து, தத்தித்தத்தி நடந்து வருவதைக் கண்டு அவன் திடுக்கிட்டு விட்டான். 'அதைப் போய் எடுத்துக் கொள்வதா, அல்லது நமக்கு என்னவென்று பேசாம லிருந்துவிடுவதா?' என்று யோசித்தான். ஆனால், அதிக நேரம் அவன் அவ்வாறு யோசித்துக்கொண்டிருக்கவில்லை. முத்து அருகிலிருந்த மடையை நோக்கித் தன் சின்னஞ்சிறு கால்களை எடுத்து வைத்துப் போவதைப் பார்த்துக்கொண்டு அவனால் எவ்வளவு நேரம் சும்மா இருக்க முடியும்? இரண்டு வயதுக் குழந்தையை முழுகடிக்க அந்த மடையிலிருந்த தண்ணீர் போதாதா? சகதியில் காலை வைத்துவிட்ட முத்து, மேலே போகவிடாமல் தன்னை யாரோ தூக்குவதைக் கண்டு கத்த ஆரம்பித்தான். சிறிது நாட்களாய்க் காணாமலிருந்த சித்தப்பனைக் கண்டதும், அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டான் முத்து.

மகிழ்ச்சி பொங்கத் தன்னை நோக்கும் இரு கரிய விழிகளைக் கண்ட அங்கமுத்து, தான் ஒரு விநாடி தாமதித்திருந்தால் என்ன நேர்ந்திருக்கும் என்று எண்ணவும் அஞ்சினான். ஒன்றும் தோன்றாமல் குழந்தையைத் தோளில் சாத்திக் கொண்டு தன் வீட்டை நோக்கி நடக்கலானான்.

6

"என்ன அக்கா, கழனிக்கே மல்லே போயிடுச்சாம், இந்தப் போக்கிரி முத்து! அவன் சித்தப்பன் பார்க்காமே யிருந்திருந்தா, மடையிலேயே விழுந்துட்டிருப்பானாமே!" என்றாள் ராக்கம்மாள்.

அவளையும், அவள் கரத்திலிருந்த தன் மகனையும் மாறி மாறிப் பார்த்தாள் முருகம்மாள். அவளுடைய தாய் உள்ளத்தை ராக்கி சொன்ன செய்தி கலக்கி விட்டது. சமாளித்துக்கொண்டு குழந்தையைக் கையில் வாங்கியவள் திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டு, "சரி, வந்ததுதான் வந்தயே; கொஞ்ச நாழி பேசிவிட்டுப் போயேன்! இப்படிக் குந்து!" என்றாள்.

"இன்னைக்குச் சொதந்திர தினமாமே! ஊர் என்ன தடபுடல் படுது பார்த்தீங்களா!" என்று ஆரம்பித்த ராக்கம்மாவுடன், பொழுது போனதே தெரியாமல் பேச்சில் ஆழ்ந்து விட்டாள் முருகம்மாள்.

அண்ணன் வீட்டிற்குச் சென்ற ராக்கி ஒரு மணி நேரமாகியும் வராமலிருந்ததைக் கண்ட அங்கமுத்து, அதிசயித்தவாறு தெருத் திண்ணையில் அமர்ந்தான்.

"என்டா, பாவி! இப்படி இளைச்சுக் கறுத்துப் போயிட்டே! நல்லா இருக்குது நீ சொல்லாமே, கொள்ளாமே தனிக் குடித்தனம் பண்ற அழகு!"

தூக்கி வாரிப் போட்டுக்கொண்டு எழுந்தான் அங்கமுத்து.

எதிரில் தன்னைப் பரிவுடன் நோக்கிய வண்ணம் நின்று கொண்டிருந்த மாரிமுத்துவைக் கண்டதும் என்ன சொல்வதென்றறியாமல் நாக்குழற, "வாங்க!" என்று இழுத்தான்.

"வீடு என்று இருந்தால் சண்டை, சல்லாபம் எல்லாவற்றையும் தள்ளிக் கொண்டு தான் போகணும். போனதெல்லாம் போகட்டும்; வீட்டுக்குப் போகலாம், வா!"

இப்படிச் சொல்லிக்கொண்டே தன் கரங்களைப் பற்றி இழுத்த அண்ணனின் சொல்லை மீற முடியாமல் அவனைப் பின் தொடர்ந்து சென்றான் அங்கமுத்து.

வரப்பிரசாதம்

விஜயம்

அந்தச் சாமியார் அரண்மனைக்கு வந்ததிலிருந்து அரசன் சதாகாலமும் அவருடனேயே இருந்தான். காலையும் மாலையும் அவருடன் உலாவப் போவான். தர்பாரில் அரசன் இருக்கும்போது கூட அந்தச் சாமியாரும் அங்கு அமர்ந்திருப்பார்.

ஒருநாள் மாலை அரசன், "சுவாமி, எனக்கு அளவற்ற செல்வம் இருக்கிறது. அருமை மனைவி இருக்கிறாள். ஆசைக் குமாரன் இருக்கிறான். பெரிய ராஜ்யம் இருக்கிறது. ஆனாலும் என் மனதில் ஒரு குறை இருக்கிறது" என்று வணக்கத்துடன் கூறினான்.

"அது என்ன, சொல்? முடியுமானால் நான் அக்குறையைத் தீர்த்து வைக்கிறேன்" என்றார் சாமியார்.

உடனே அரசன், "சுவாமி, எல்லோருடைய மனதில் இருப்பதும் எனக்குத் தெளிவாய்த் தெரிய வேண்டும். இந்த வரம் எனக்குக் கொடுங்கள்" என்றான்.

சாமியார் சற்று நேரம் யோசித்து விட்டு, "அரசே, நான் அந்த வரம் தருகிறேன். அதன்படி நாளைக் காலையிலிருந்து உமக்கு எல்லோருடைய மனத்திலிருக்கும் விஷயங்களும் தாமாகவே பளிச்சுப் பளிச்சு என்று தெரியும். ஆனால் ஒரு நாளைக்கு மட்டும் தான் இந்த வரம் தருகிறேன். முதலில் பரீக்ஷை செய்து பாரும். அந்த வரம் உமக்கு எப்போதும் வேண்டுமென்றால் என்னிடம் தெரிவியும். அப்படியே தருகிறேன்" என்று சொன்னார்.

அரசன் சந்தோஷத்துடன் சம்மதித்தான். சாமியாரும் தம் விடுதிக்குப் போனார். அரசன் தன் அரண்மனைக்குப் போய் மறுநாள் காலை தனக்குக் கிடைக்கப் போகும் வரத்தைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான். விடியும் வரையில் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. கடைசியில் பொழுது விடிந்தது. உடனே அரசன் தன் மந்திரியின் மனத்திலிருப்பதைப் பரிசோதிக்க நினைத்தான். சாமியாரின் மகிமையினால் மந்திரியின் மனத்தில் இருக்கும் எண்ணம் அரசனுக்கு நன்றாய்த் தெரிந்தது.

"இந்த ராஜா உயிரோடிருப்பதனால் நமக்கு எவ்வளவு இடைஞ்சலாயிருக்கிறது. ஆகா! ராஜாவைத் தீர்த்து விட்டால் ராஜ்யம் நம் வசமாகிவிடுமே! இராஜகுமாரன் இளைஞன். அவனுக்கு வயதுவரும் வரையில் ராஜ்யம் நம் கையில் தான் இருக்கும். பிறகு ராஜகுமாரனையும் தீர்த்துக் கட்டிவிடலாம்!"—இப்படித்தான் அவன் மனம் சிந்தித்துக் கொண்டிருந்தது.

அரசனுக்கு இதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. 'பரம யோக்கியனென்று மந்திரியை நினைத்துக்கொண்டிருந்தோமே, அவன் இவ்வளவு அயோக்கியனா!' என்று நினைத்து மனம் வருந்தினான்.

பொழுது விடிந்ததும் மங்கள வாத்திய கோஷங்களுடன் அரசனை எழுப்பும் வாத்தியக்காரன், வாத்தியம் முழங்கத் தொடங்கிவிட்டான். அரசனது சிந்தனை அவனிடம் சென்றது. அவன் மனத்தில் "அரசன் இறந்து தொலைந்தால் பத்துப்பதினைந்து நாள் இந்த வாத்தியம் வாசிக்கும் தொல்லையில்லாமலிருக்கும். துக்க தினம் கொண்டாடும்போது மங்கள வாத்தியத்துக்கு வேலையேது?" என்று நினைத்தான்.

அரசன் மனம் திடுக்கிட்டது. அவனுக்கு ஒன்றிலும் மனம் செல்லவில்லை. சூரிய உதயமாகியும் அரசன் எழுந்து வாராததால் அரசனுக்கு உடம்பு சரியில்லை என்று அரண்மனை முழுவதும் செய்தி பரவியது. அரசனின் படுக்கையறை வாசலில் பெருங் கூட்டம் கூடிவிட்டது; யாருக்கும் கதவைத் திறக்கத் தைரியம் வரவில்லை. அரண்மனை வைத்தியர் வந்தார். கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே படுத்துக் கொண்டிருந்த அரசனின் மனம் தானாகவே அந்த வைத்தியனின் மனப் போக்கை அறிய ஆரம்பித்தது.

அரண்மனை வைத்தியன் மனத்தில், "நல்லவேளை தான்; அரசனுக்கு

உடம்பு சரியில்லாம லிருக்கிறது. மந்திரி எதிர்பார்த்த சமயம் இது தான். இப்பொழுது விஷம் கொடுத்து விட்டால் அரசனின் மரணத்தைப் பற்றி யாரும் சந்தேகப்பட மாட்டார்கள். மந்திரியிடம் பரிசு பெறலாம்" என்ற எண்ணம்தான் ஓடிக் கொண்டிருந்தது.

அரண்மனை வைத்தியன் கொடிய விஷ மாத்திரைகளுடன் அரசனுடைய படுக்கை யறையை நெருங்கினான். மந்திரியும் மகா யோக்யனைப் போல் அவனைப் பின் தொடர்ந்தான். அவர்களிருவரும் கதவண்டை வந்து கதவைத் திறக்க முயற்சி செய்ததும் அரசனுடைய பயம் ரொம்ப அதிகமாகி விட்டது. 'வீல்' என்று கத்தி அப்படியே மூர்ச்சையாகி விட்டான். அப்பொழுது அங்கு வந்த சாமியார் கூட்டத்தை விலக்கிக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார்.

"அரசே, எழுந்திரும். பயப்படாதீர்!" என்று சொல்லிக்கொண்டே அரசனைச் சாமியார் தொட்டார்.

உடனே அரசன் அலறிக் கொண்டு எழுந்திருந்து, "சுவாமி, காப்பாற்றுங்கள்! என்னைச் சேர்ந்தவர் அத்தனை பேரும் வெளியில் நல்லவர்களைப் போல் நடிக்கிறார்களே யொழிய எல்லோரும் மிகப் பொல்லாதவர்கள். ஆகா! நினைக்கவே பயமா யிருக்கிறது!" என்று கதறினான்.

"அரசே, ஏன் பயப்படுகிறீர்? நீர் ஒவ்வொருவர் மனத்திலும் என்ன எண்ணம் ஓடிக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும்தான் வரத்தின் மகிமையினால் தெரிந்து கொண்டீர். ஆனால் மனிதர்களுக்கெல்லாம் மேலான வல்லமையுடைய கடவுள் ஒருவர் இருக்கிறார். அவர் மனத்தில் இருக்கும் எண்ணம் என்னவாயிருக்கும் என்பதை நீர் அறியவில்லை. உமக்கு ஒரு ஆபத்தும் வராது. ஈசுவர சங்கற்பம் அப்படியிருக்கிறது. ஒவ்வொருவனும் நான் அப்படிச் செய்து விடுவேன், இப்படிச் செய்து விடுவேன் என்றுதான் நினைக்கிறான். ஆனால் நடப்பது வேறா யிருக்கிறது. சரி, இந்த வரம் உமக்கு எப்போதும் வேண்டுமா? அல்லது இத்துடன் போதுமா?" என்று கேட்டார் சாமியார்.

"சுவாமி, வரமும் வேண்டாம், மண்ணும் கட்டியும் வேண்டாம். யார் மனத்தில் என்ன நினைத்துக் கொண்டால் நமக்கு என்ன? அதை யெல்லாம் அறிந்து கொண்டால்தான் நமக்கு மனவேதனை உண்டாகிறது; அறியா விட்டால் ஒன்றுமே யில்லை. எல்லாவற்றுக்கும் பகவான்மேல் பாரத்தைப் போட்டுவிட்டு நீதியும் நேர்மையும் வழுவாமல் அரசாண்டு வந்தால் யார் என்னை என்ன செய்ய முடியும்? சுவாமி! இந்த வரத்தின் தொந்தரவிலிருந்து தயவுசெய்து என்னைக் காப்பாற்றுங்கள்!" என்று அரசன் சாமியாரை வணங்கினான்.

சாமியார் அவனை ஆசீர்வாதம் செய்ததும் அந்த வரத்தின் மகிமை மறைந்தது. அரசன் எப்பொழுதும் போல் ஆனந்தமாயிருந்தான்.

பம்பாயில் பட்டேல்

சென்ற வாரத்தில் இந்தியாவின் உதவிப் பிரதமரும் உள்நாட்டு மந்திரியுமான சர்தார் பட்டேல் பம்பாய்க்கு விஜயம் செய்து பல விஷயங்களைப் பற்றிக் கண்டிப்பாகப் பேசினார்.

வீண் பயம்

கி.ரா.கோபாலன்

அவள் கடற்கரையில் பிறந்தவள். கடற்கரை ஓரமாயுள்ள செம்படவர் குப்பத்திலுள்ள ஒரு குடிசைதான் அவளுடைய தகப்பன் பூமணத்தானுடையது. அவன் பெயர் பூமணத்தானு யிருந்தாலும் அவன் குடிசையைச் சுற்றிலும் சிதறிக் கிடக்கும் மீன் செதில்களும் கடற்பாசியும் ஒரு தனி மணத்தைத்தான் அள்ளி வீசிக்கொண்டிருந்தன. பூமணத்தானுக்கு நாகம்மா ஒரே பெண். நாகம்மா பிறந்தவுடனேயே அவளை வளர்க்கும் பொறுப்பை அவளுடைய தகப்பனிடமும் பாட்டியிடமும் விட்டுவிட்டுத் தாய் எமனின் அழைப்பை ஏற்றுக் கொண்டாள்.

அவள் தகப்பன் அவளை எவ்வளவோ அன்பாக வளர்த்து வந்தான். மீன் பிடிக்கும் வலையை எப்படிப் பின்னுவது, அதை எப்படிச் சிக்கெடுத்துச் சீர்திருத்துவது, கட்டு மரங்களை எப்படிச் சேர்த்துப் பிணைத்துக் கடலில் இறக்குவது, மீன்களை எப்படி வகையாகப் பிரித்துவைப்பது முதலியவைகளை யெல்லாம் அவளும் ஆர்வத்தோடு கற்றுக்கொண்டாள். அந்தக் குப்பத்திலேயே பூமணத்தான்தான் திறமையுள்ள செம்படவன் என்று பெயர்பெற்று விளங்கினான்.

நாகம்மா குடிசை வாசலில் உட்கார்ந்து கடலையே பார்த்துக் கொண்டிருப்பாள். அதைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு ஆனந்தமாயிருக்கும். கண்ணுக் கெட்டிய தூரம் வரையில் பரவி நிற்கும் கடலை நாள் முழுதும் உட்கார்ந்து பார்த்தாலும் அவளுக்கு அலுப்பு ஏற்படாது. நுரைத்துப் பொங்கிக் கரையில் வந்து மோதும் அலைகளைச் சிறிதும் கண்ணசையாமல் பார்த்துக் கொண்டிருப்பாள். மலையைப் புரட்டிவிடுவதுபோல் எழும்பி வரும் பெரிய அலைகளைப் பார்த்தோ, கோரமாக வீசும் புயல் காற்றைக் கண்டோ, கடலின் 'ஹோ' என்ற பயங்கர சப்தத்தைக் கேட்டோ அவள் பயந்ததேயில்லை. அவளுடைய தகப்பன் மீன் பிடிக்கப் போகும் பொழுது அவனோடு கரைக்குச் சமீபமாகப் போய், அவன் கட்டுமரத்திலேறிக் கண்மறைவாகப் போகும் வரையில் பார்த்துக் கொண்டே அலை மோதும் தண்ணீரில் நின்றுகொண்டிருப்பாள்.

சூரியன் மேற்கு வாசலில் மறையும் தருணம் சமுத்திரத்தில் கண் திருஷ்டிக்கு எட்டிய தூரத்தில் ஒரு கட்டுமரமோ படகோ வரும் நிழல் தெரிந்தால் போதும்; பொன்னிறமான மணற் பரப்பில் அவள் கால்கள் பதிய ஓடிவந்து கரை விளிம்பில் தன் தகப்பனின் வருகையை ஆவலோடு பார்த்துக் கொண்டு நிற்பாள். அவன் கரை சேர்ந்ததும் அவனுக்கு உதவியாக மீன் சுமை, வலை, பாய்மரம் முதலியவைகளைக் கரையில் இறக்குவாள்.

ஒவ்வொரு நாள் இரவும் பூமணத்தான் நெடுநேரம் வரையிலும் தான் ஏதோ வெளியூர்ச் சீமையைப் போய்ப் பார்த்து விட்டு வந்து அதிசயத்தைச் சொல்வது போல அவன் கடலில் நெடுந்தூரம் போனது, எப்படி எப்படியெல்லாம் சாமர்த்தியமாகக் கட்டு மரத்தைச் செலுத்தியது முதலியவற்றைச் சொல்லுவான். எவ்வளவோ பேர் கட்டு மரம் கவிழ்ந்து சமுத்திரத்தில் மூழ்கிப் போனதையும், புயலில் அகப்பட்டுத் தத்தளித்ததையும் சிலரை உயிர் போகும் தறுவாயிலிருந்து மீட்டதையும் சொல்லுவான். அப்பொழுதெல்லாம் அவள் தன் தகப்பனைப் பற்றிப் பயப்படவே மாட்டாள். ஏனென்றால் தன் தகப்பன் கெட்டிக்காரன், சாமர்த்தியமும் தைரியமும் முள்ளவன் என்று பாட்டியும் குப்பத்திலுள்ள மற்றவர்களும் சொல்லிக் கொண்ட

தாய்தான். தவிர, சமுத்திரம் தன் தகப்பனை அப்படி வஞ்சிக்காது என்றும், அதற்கும் தன் தகப்பனுக்கும் ஏதோ ஒரு நெருங்கிய பாந்தவ்யமோ, கட்டுப்பாடோ இருப்பதாகவும் ஒரு எண்ணத்தைக் குழந்தைப் பருவத்திலிருந்தே அவள் வளர்த்து வந்தாள்.

நாகம்மாளுக்கு வயது பதினெட்டாகி விட்டது. அழகான பெண்ணாக வளர்ந்திருந்தாள். இப்பொழுதெல்லாம் அவள் தன் தகப்பன் கொண்டு வரும் மீனைக் கிராக்கியுடன் விற்பதில் கெட்டிக்காரியாகி விட்டாள்.

ஒரு நாள் அந்தி மயங்கும் வேளை. சமுத்திரத்தின் மேல் மட்டத்தில் கட்டு மரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வரும் அடையாளம் கண் பார்வையில் பட்டதும் ஒரு பெரிய கூடையை இடையில் தூக்கி வைத்துக் கொண்டு வேகமாய் நடந்து சமுத்திரத்தின் கரையை ஒட்டி நின்றாள்.

ஒவ்வொரு கட்டு மரங்களாக அலை உந்தக் கரையில் மோதி நின்றன. ஆனால் பூமணத்தானை மாத்திரம் காணோம். நாகம்மா கண்பார்வைக் கெட்டும் வரையில் துருவித் துருவிப் பார்த்தாள். கொஞ்சங்கூட வருகிற அடையாளமே தெரியவில்லை. அவள் தன் தகப்பனுக்குள்ள திறமையிலும், கடலின் மேலிருந்த அவளுடைய அழியாத நம்பிக்கையிலும் மனதில் சிறிது சமாதானத்தை உண்டாக்கிக் கொண்டு சூரியன் மறைந்து இருள் சூழும் வரையில் கடலையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் தகப்பன் வரவேயில்லை. அவள் மனதில் திகில் பரவியது. அழுது விசித்துக் கொண்டு குப்பத்திற்கு ஓடி வந்தாள். குடிசைகளிலிருந்தவர்கள் அழுகுரல் கேட்டு வெளியே ஓடி வந்து சூழ்ந்தனர். விஷயம் தெரிந்து கொண்டதும் "ஹூம், பூமணத்தானின் விதி அவ்வளவுதான்!" என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்கள்.

நாகம்மாள் தன் குடிசைக்கு வந்து தரையில் குப்புற விழுந்து இரவு பூராவும் விசித்து விசித்து அழுதாள். அவளுக்குப் பக்கத்தில் அவளுடைய பாட்டி துக்கம் தோய்ந்த முகத்துடன் உட்கார்ந்து அவளைச் சமாதானப் படுத்திக் கொண்டிருந்தாள்.

அவள் எந்தக் கடலை ஆசையோடு பார்த்து வந்தாளோ அதை அவளால் இப்பொழுது நினைக்கவே பயங்கரமாயும் வெறுப்பாயும் இருந்தது. சுருண்டு சுருண்டு வந்து எழும்பிக் கரையில் மோதும் அலைகளெல்லாம் மனிதர்களைப் பிடித்திழுத்து ஆழத்தில் அழுத்திக் கொல்ல வருகிறதாகவே அவள் நினைத்தாள்.

நாகம்மாவுக்கு அந்தக் குப்பத்திலிருக்கவே பிடிக்கவில்லை. அவள் பித்துப்பிடித்தவள்போலாகிவிட்டாள். சில நாள் வெளியே எங்காவது சென்று வசித்தால் அவளுக்குச் சிறிது மனமாறுதலும் சமாதானமும் ஏற்படுமோ என்று நினைத்துக் கடற்கரைக்குச் சற்றுத் தொலைவிலுள்ள தங்கள் பூர்வீக

கிராமத்துக்கு அழைத்துச் சென்றாள், அவளுடைய பாட்டி.

செம்படவர், சமுத்திரம், மீன், வலை— இவற்றில் எதைப் பற்றிப் பேசினாலும் காதைப் பொத்திக்கொண்டு பயந்து நடுங்கும் நாகம்மாவிடம் ஒரு செம்படவனைத்தான் அவள் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று சொல்ல அவள் பாட்டிக்குத் தைரியமில்லை. மிகவும் அனுபவமடைந்த அவளுக்கு, தன் பேத்தி இப்படி மனது மாறிக் கோழையாகப் போய்விட்டது ஆச்சரியமாகத்தான் இருந்தது. நாகம்மாவின் தகப்பன் உயிரோடிருந்தபோது அடிக்கடி தைரியமும் சாமர்த்தியமும் உள்ள ஒரு செம்படவனுக்கே அவளைக் கல்யாணம் செய்து கொடுக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டு வந்தான். நாகம்மாவும் அப்படி ஆசைப்பட்டதுண்டு. கடலில் போன தன் தகப்பன் கரை திரும்பாததிலிருந்து செம்படவர்களைக் கண்டாலே அவளுக்கு வெறுப்பாகத்தானிருந்தது.

அந்தக் கிராமத்திற்குச் சிறிது தூரத்திலுள்ள ஒரு பெரிய திடலில் செவ்வாய்க்கிழமை தோறும் பெரிய சந்தை கூடுவது வழக்கம். சுற்றிலுமுள்ள கிராமத்திலுள்ளவர்களெல்லாம் தங்களிடமுள்ள பொருள்களைக் கொண்டு வந்து விற்பதும், வேண்டிய பொருள்களை வாங்குவதுமாக இருப்பார்கள். நாகம்மாவின் வீட்டுத் தோட்டத்தில் நிறையக் காய்கறிகள் பயிர் செய்திருந்ததால் அவைகளைக் கொண்டு போய்ச் சந்தையில் வியாபாரம் செய்து வந்தாள்.

சந்தைக் கூட்டத் திடையே குறிப்பாக ஒரு உருவம் அடிக்கடி அவள் கண்ணில் பட்டது. இத்தனை ஜனங்களிடையே அந்த ஒரு உருவம் மாத்திரம் அவள் கண்களையும் மனதையும் கவர எத்தனையோ காரணமிருந்தது.

அவன் பெயர் தங்கப்பன். வயது இருபத்தைந்துதானிருக்கும். கட்டுமஸ்தான தேகம். பொலிவான முகம். தைரியத்துக்கும் ஆண்மைக்கும் அறிகுறியாக அழகாக முறுக்கிவிட்ட மீசை. அலட்சியமான பார்வை. இப்படிப்பட்ட அங்க லட்சணங்களோடு கூடிய அவன் கூட்டத்திடையே அப்படியு மிப்படியுமாகப் போய் எப்படியோ நாகம்மாவின் மனதைக் கவர்ந்துவிட்டான்.

இரண்டு மூன்று வாரங்கள் இப்படியே ஓடி விட்டன. அவளுக்கும் அவனோடு பேச வேண்டுமென்ற ஆசை நெடுநாளாய் இருந்தது போலும்! இல்லாவிட்டால் அப்படி நெருங்கி வருவாளா?

நாகம்மா கத்திரிக்காயைக் கடையில் பார்வையாக அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள். "இந்தா பொண்ணு! கத்திரிக்காய் எப்படி?" என்ற குரலைக் கேட்டதும் அவள் நிமிர்ந்து பார்த்தாள். அவன் நின்று கொண்டிருந்தான். அவள் உடலே குப்பென்று வியர்த்துச் சில்லிட்டு விட்டது கணத்தில். இருந்தாலும் தன்னை ஒருவிதமாகச் சமாளித்துக் கொண்டு, "வீசை ஆறணாங்க; உங்களுக்காக வேணுமானால் மூன்றணாவுக்குத் தாரேன்" என்றாள்.

ஆறணா என்று சொல்லிவிட்டுச் சட்டென்று மூன்றணாவுக்குத் தருவதாகச் சொன்னது அவளுக்கே ஆச்சரியமாயிருந்தது. "சந்தையிலே வியாபாரம் செய்து ஏதாச்சும் லாபம் காண வந்திருக்கியா? இல்லாட்டி.........." என்றான் சிரித்துக் கொண்டே.

"உங்களுக்காக என்றுதானே சொன்னேன். வீட்டுக் கொல்லைக் காய்தானே? வேண்டியவங்களுக்குத் தள்ளிக் கொடுத்தால் அதனாலே பிரமாத நஷ்டம் வந்து விடாது" என்றாள்.

"அதுக்குள்ளே நான் வேண்டியவனாய்ப் போய்விட்டேனா!" என்றான் கேலிச் சிரிப்புடன். அவளும் ஒரு சிரிப்புச் சிரித்தாள் புதிரை விளக்குவது போல. அவ்வளவுதான்; ஒவ்வொரு வாரமும் காய்கறி வாங்கும் வியாஜமாகவே பேச்சு வளர்ந்து ஒரு பிரிக்க முடியாத உறவை அவர்களுக்கிடையே பிணைத்து விட்டது. இந்நிலையில் அவனை யார் என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்று அவள் எவ்வளவோ சமயம் நினைத்ததுண்டு. ஆனால் அவனைக் கண்டதும் அந்த நினைப்பையே மறந்துவிடுவாள்.

ஒவ்வொரு வாரமும் சந்தைக்குப்போய் விட்டு வந்ததும் தன் பாட்டியிடம் தங்கப்பனைப் பற்றி வர்ணனை செய்யத் தவறியதே இல்லை நாகம்மா. அவனையேதான் கல்யாணம் செய்துகொள்ளப் போவதாகப் பேச்சினிடையே ஜாடையாகச் சொல்லுவாள். ஆனால் பாட்டி 'அவன் யாரடி?' என்று கேட்கும் கேள்விக்கு மாத்திரம் அவள் ஒரு நாளும் சரியான பதில் கொடுப்பதே இல்லை.

ஒரு சந்தையின்போது அவனை யார் என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தோடு கிழவியும் நாகம்மாவுடன் சந்தைக்குப் புறப்பட்டாள்.

நாகம்மா சந்தையில் கடையை இறக்கி வைத்ததுதான் தாமதம், தங்கப்பன் அவள்

எதிரில் வந்து நின்றான். நாகம்மா அவனைக் கண்டதும் எல்லையற்ற உவகை பொங்க, "வாங்க! இன்னிக்கு எங்க பாட்டியும் சந்தைக்கு வந்திருக்கு!" என்று சொல்லி விட்டுப் பக்கத்தில் நின்ற மிழலியைக் காட்டினாள்.

"சரிதான்; ரொம்ப நாளா நானும் உங்க பாட்டியைப் பாக்கணும்னுதான் நினைச்சுக்கிட்டிருந்தேன். உங்க பாட்டி சம்மதமில்லாமல் நாம் எந்தக் காரியத்தையும் செய்துட முடியுமா? என் பாட்டி, நான் உன் பேத்தியைக் கல்யாணம் செய்துக்கணும்னு யோசிக்கிறேன்" என்றான்.

மிழலி ஒரு தடவை தங்கப்பனை மேலும் கீழுமாகப் பார்த்துவிட்டு, "கல்யாணம் கட்டிக்கலாம். ஆனா, எல்லாம் பொருந்தியிருக்க வேண்டாமா!" என்றாள்.

"ஏன் பாட்டி, நான் உன் பேத்திக்குப் பொருத்தமாகப் படவில்லையா?"

"பொருத்தமாத்தா னிருக்கே! — ஆமாம், உன் பேரு?"

"பேரா? தங்கப்பன்!"

"பேரும் ஒத்தாப்பலேதான் இருக்குது. நீ இந்தச் சந்தையிலே காய்கறி வியாபாரமா செய்யறே?"

"ஹஹ்ஹூம்! சொந்த வியாபாரம் இருக்கச்சே இதெல்லாம் என் பாட்டி? இங்கே மீன் கடை வைச்சிருக்கிறவங்கக்கிட்டே சந்தைக்குச் சந்தை நிலுவை வசூல் செய்ய வருவேன்......"

நாகம்மாவுக்கு இதைக் கேட்டதும் திக்கென்றது. மிழலிக்குத் தாங்க முடியாத ஆச்சரியமாயிருந்தது. அவள் பரபரப்போடு, "அப்படின்னா, நீ செம்படவ சாதியா......?" என்றாள்.

"ஆமாம், பாட்டி! எங்க பக்கத்துக் குப்பத்துப் பெண்ணுதான் உன் பேத்தின்னு தெரிஞ்சுக்கிட்டுத்தானே இவ்வளவு நெருங்கிப் பழகினேன். இல்லாட்டி பழகுவேனா?" என்று சொல்லி விட்டு ஆனந்தம் பொங்க நாகம்மாவைப் பார்த்தான். ஆனால் அவள் முகம் கறுத்துச் சுண்டி துக்கம் நிறைந்ததாகக் கணப் பொழுதில் மாறி விட்டது. மிழலிக்குத் தன் மனதிலுள்ள பெரிய பாரத்தைப் போக்கி விட்டதுபோ லிருந்தது. "கடவுள்தான் உன்னைக் கொண்டு வந்து சேர்த்து விட்டாரு" என்றாள் நன்றியறிதலோடு. ஆனால் நாகம்மாவுக்கு அவன் சொல்லிய வார்த்தை ஒரு பெரிய மலையையே புரட்டித் தள்ளி அவள் ஹிருதயத்தைச் சுக்கு நூறாக்கி விட்டதுபோ லிருந்தது. அவள் மனதில் திகில் பரவியது. அவள் தலையைத் திருப்பிக் கொண்டு படபடப்போடு சொன்னாள். "முடியாது, நீங்க செம்படவ சாதியைச் சேர்ந்தவங்களா இருந்தால் உங்களை நான் கல்யாணம் செய்துக்க முடியாது" என்றாள்.

தங்கப்பன் அவளிடமிருந்து இப்படிப் பட்ட பதிலை எதிர்பார்க்கவே யில்லை. "ஏன்?" என்றான் ஆச்சரியத்தோடு.

"அவள் தகப்பன் கடலிலே போய்த் திரும்பாமல் போயிட்டான். அதிலேயிருந்து அவளுக்கு நம்ம சாதியைக் கண்டாலே பிடிக்கல்லே!" என்றாள் மிழலி.

நல்ல வேலை!



"அதோ தெரியுதே ரூமி, அவர் தான் இந்த ஆபீஸிலே ரொம்ப நேரம் வேலை செய்பவர்..............

............ஐயையோ! இப்படித்தான் இத்தனை நாளும் இவர் வேலை செய்து வந்தாரா, என்ன?"

"ஆமாம்; என் தாலிக் கயிறு செட்டிமாயிருக்கணும்னு காலையும் யோசித்துத் தானே கல்யாணம் செய்துக்கணும்?" என்றாள் நாகம்மா முகத்தைத் திருப்பிக் கொண்டே.

"அப்படின்னு கடலிலே மீன் பிடிக்கப் போறவங்கதான் இந்த உலகத்திலே செத்துப் போறவங்கன்னு நினைக்கிறியா? அசட்டுப் பெண்ணுல்லே இருக்கே?" என்று சொல்லிவிட்டு அவள் முகத்தை இரக்கத்தோடு பார்த்தான் தங்கப்பன்.

"அது என்னவோ - என் தகப்பனை நினைச்சிட்டா இந்த மீன் பிடிக்கிறவங்களைக் கண்டாலே எனக்குப் பிடிக்கல்லே. ஏதோ உங்கள் பேரிலே தெரியாத்தனமா ஆசை வைச்சிட்டேன். நீங்க கடலிலே மீன் பிடிக்கப் போகிறதில்லேன்னு சத்தியம் செய்து கொடுத்தால் உங்களைக் கல்யாணம் செய்துக்கிறேன். இல்லாட்டி வேண்டாம்" என்றாள் கண்டிப்பாகவும் தீர்மானமாகவும்.

தங்கப்பன் ஒரு கேலிச் சிரிப்புச் சிரித்தான். "ஊஹூம்! அது முடியாது. சத்தியம் செய்து கொடுக்க முடியாது. எனக்கு உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று ஆசைதான். அதுக்காக என் சொந்தத் தொழிலை விட்டால் என்னை எல்லாரும் பயந்தாங்கொள்ளிப் பயல் என் பாங்க" என்றான் அவனும் கண்டிப்பாக. கிழவி ஏதோ நாகம்மாவுக்குச் சமாதானம் சொல்ல வந்தாள். அதற்குள் நாகம்மா இடைமறித்து "இஷ்டமில்லா விட்டால் இந்த இடத்தை விட்டு இப்போதே நீங்க போயிடுங்க" என்றாள் துக்கம் நிறைந்த பெருமூச்சோடு. வயதான கிழவி அவர்கள் இரண்டு பேரையும் எப்படிச் சமாதானம் செய்வது என்று தெரியாமல் துடித்தாள். தன் பேத்திக்கு, கோடித் தவம் செய்தாலும் தங்கப்பனைப் போன்ற கணவன் கிடைப்பது அரிது என்று அவள் நினைத்தாள். நாகம்மா அவனைக் கை நழுவ விட்டு விடுகிறாளே என்பதை எண்ணித் துடியாகத் துடித்தாள். தங்கப்பன் மனம் குழம்பியபடியே துக்கம் தோய்ந்த முகத்தோடு அந்த இடத்தைவிட்டு மெதுவாக நடந்தான். "நாகம்மா! கொஞ்சம் யோசித்துப் பாரு! இந்தமாதிரி ஒரு புருஷனை அப்புறம் நீ காணவே முடியாது" என்று கிழவி அங்கலாய்த்தாள்.

"பாட்டி வீணுக் என்னைத் தொந்தரவு பண்ணாதே! இந்தப் பிறப்பிலே இல்லே, நான் கடலிலே போய் மீன் பிடிக்கிறவன் பெண்டாட்டியாய்ப் போறதன்னு" என்று சீறினாள் நாகம்மா.

கிழவி இடி விழுந்தவள் போல் குன்றிப் போய் உட்கார்ந்திருந்தாள்.

* * *

அடுத்த வாரத்திலிருந்து நாகம்மாவுக்குச் சந்தைக்கு வரவே பிடிக்கவில்லை. ஆனால் அவளுடைய பாட்டி காய்கறிகளை எடுத்துக் கொண்டு சந்தைக்கு வரத் தொடங்கினாள். தங்கப்பன் ஒரு செம்படவன் என்று கேள்விப்பட்ட பிறகு தப்பித் தவறி அவன் கண்களில் படுவது கூட நாகம்மாவுக்குப் பீதியை உண்டாக்கியது. ஆனால் அவனை என்னவோ அவளால் வெறுக்க முடியவில்லை. அவன் நினைவு எப்பொழுதும் இருந்து கொண்டே இருந்தது. அதைத் தொடர்ந்து செம்படவர் குப்பம், கடல், அலை, கட்டு மரம், புயல், வலை, மீன் இவைகளெல்லாம் தோன்றி அவளை நடுங்க வைத்துக் கொண்டிருந்தன.

அன்று செவ்வாய்க்கிழமை; சந்தைக்கு அவளுடைய பாட்டி போயிருந்ததால் அவள் வீட்டில் தனிமையிலிருந்தாள். திடீரென்று பக்கத்துக் குடிசையிலிருந்தவர்கள் மூலமாக அவளுக்கொரு செய்தி எட்டியது. சந்தைத் திடலிலிருந்த ஒரு பெரிய ஆலமரத்தின் கிளை ஒன்று முறிந்து விழுந்ததால் மூன்று பேர் இறந்து விட்டதாகவும் பத்துப் பதினைந்து பேருக்கு நல்ல காயமென்றும் சொன்னார்கள். இதைக் கேட்டதும் அவள் மனதில் திக்கென்றது. அவளுடைய பாட்டி அந்த ஆலமரத்தினடியில் தானே உட்கார்ந்து வியாபாரம் செய்வாள். அவள் பதட்டத்தோடு சந்தையைப் பார்க்க ஓடினாள். ஆலமரத்தடியில் கூட்டமாக ஜனங்கள் நின்று கொண்டிருந்தனர். நாகம்மா அந்தக் கூட்டத்திடையே தன் பாட்டியைத் தேட முயற்சிக்கும் பொழுது "நாகம்மா!" என்ற குரலைக் கேட்டு திரும்பினாள். தங்கப்பன் சிரித்துக் கொண்டே "உங்க பாட்டியைத் தேடுறயா? அவ பத்திரமாத்தானிருக்கா. ஒரு ஆபத்தும் இல்லே. அது இந்த ஆலமரத்தடியிலே இரண்டு மூன்று சந்தையா வியாபாரம் செய்றதில்லே. என் அத்தான் இங்கே ஒரு மீன் கடை போட்டிருக்கான். அதுக்குப் பக்கத்தாலே கடைபோட்டு வியாபாரம் செய்கிறாள் உங்க பாட்டி. வா, போவோம்" என்று சொல்லி நடந்தான். தன்னுடைய பாட்டி உயிர் தப்பினாள் என்று தெரிந்த

பிறகு அவனுக்கு வேறு எதிலும் கவலை இல்லை. அவளைப் பின் தொடர்ந்து யந்திரம்போல் நடந்தான். நெடுநாட்களுக்குப் பிறகு மீன்களின் வாசனையை அவன் மறுபடியும் நுகர்ந்தான். வகை வகையான மீன்களை யெல்லாம் வெகு நாட்களுக்குப் பிறகுதான் அவன் மறுபடியும் பார்த்தான். வரிசையாக வைத்திருக்கும் மீன் கடைகளுக்கிடையே நடந்து நாகம்மாவை அவனுடைய பாட்டிக்கு எதிரில் கொண்டு வந்து நிறுத்தி "இதோ பாரு, உங்க பாட்டியை!" என்று காட்டி விட்டு "இந்த மீனை யெல்லாம் கண்டு இப்படிப் பயப்படுகிறயே. இந்த மீன் கடை இல்லாட்டி உங்க பாட்டியை இப்போ நீ உயிரோடே கண்டிருக்க முடியுமா? இதிலே யிருந்து தெரிஞ்சுக்க! சாவு சமுத்திரத்திலே மாத்திரமில்லை. பூமியிலேயும் இருக்கிறது. சமுத்திரம் எவ்வளவு பொல்லாததோ அவ்வளவு பொல்லாதது இந்த பூமியும். இந்த பூமி எவ்வளவு நல்லதோ அவ்வளவு நல்லதுதான் சமுத்திரமும். சமுத்திரத்தை கண்டு பயப்படறதெல்லாம் வீண் பயந்தான்" என்றான் அவளை ஆர்வத்தோடு பார்த்தபடியே.

அந்தச் சந்தர்ப்பத்தில்தான் அவன் சொல்லுவது முற்றிலும் உண்மை என்பதை அவனால் உணர முடிந்தது. அவன் ஒன்றும் பேசாமல் நின்றான். ஆனால் தான் கொண்ட தவறான அபிப்பிராயத்திற்காக அவன் தன் கண்கள் மூலம் பச்சாதாபத்தை அவளுக்குக் காட்டினான்.

அன்று மாலை சந்தை கலையுமுன் அவன் அவளைப் பார்த்து "அடுத்த சந்தைக்கு ஆலமரம் முறிந்து விழுந்ததை எண்ணிப் பயந்துகொண்டு பாட்டியை அனுப்பாமல் இருந்துடாதே" என்றான்.

அவள் சிரித்துக் கொண்டே "அடுத்த சந்தைக்குப் பாட்டி வராது-நான் தான் வருவேன்" என்றாள்.

"நீ வந்தா ஆலமரத்தடியிலே தானே கடை போடுவே..."

"இல்லை. இங்கேதான்."

"ஏன், ஆலமரத்திடம் பயமா?"

"ஆலமரத்திடம் பயமல்ல; மீன் கடை மீதும் அதைப் பிடிக்கிறவங்க மீதும் பிரியம்" என்று சொல்லிவிட்டுக் கலுக்கென்று சிரித்தாள். அதற்கு பதிலாகத் தங்கப்பன் கல கலவென்று சிரித்தது அந்தச் சந்தை முழுவதும் எதிரொலித்தது.

கரகரப்பான தொண்டை, இன்ப்ளூயென்ஸா, ஜலதோஷத்திற்கு

இதமளிக்கும், கிருமி - நாசனி பெப்ஸ் அவசியம் உங்களுக்குத் தேவை

நாவிற்கு ருசியான பெப்ஸ் மாத்திரை ஒன்றை சாப்பிடுங்கள். அதன் மருந்து சத்துக்கள் உங்கள் நெஞ்சுக்கும் சுவாசாசயங்களுக்கும் இதப் தருவதை உடனே உணர்வீர்கள். பெப்ஸ் மாத்திரைகள் மிக்க சக்தி வாய்ந்தவை. இதமளித்து, புண்ணை ஆற்றி, கிருமிகளை அழிக்கிறது. அதன் சத்துக்கள் சுவாசத்தின் மூலம் நெஞ்சு, சுவாசாசயம், மார்பு இவற்றிற்கு நேராக செல்வதால் பெப்ஸ் ரணத்தையும், கமைச்சலையும், வீக்கத்தையும் அகற்றி கிருமிகளைக் கொன்று உபாதையை அகற்றுகிறது.

படத்தில் பெப்ஸ் மருந்தின் சத்துக்கள் எப்படி சுவாச கோசத்தின் ஒவ்வொரு பாகத்தையும் சேருகிறது என்பதை விளக்குகிறது

PEPS

சுவாச, கிருமி நாசன மாத்திரைகள்
நெஞ்சு, சுவாசாசயம், மார்பு நோய்களுக்கு அதிக சக்தி வாய்ந்த பரம ஔஷதம்

ஏஜண்டுகள் : மெஸர்ஸ். தாதா & கோ., பி. டி. மதராஸ்

அம்பியின் ஆசை!

காட்டூர் கண்ணன்

கமலி :—

1 அக்காவைப் பார்த்தாயா அம்பி — அவள்
ஆட்டமும் பாட்டமும் அதிகமாய்ப் போச்சு
நிக்காமல் துடிக்கிறாள் பாரு — அவள்
நினைத்தபடி பட்டுப் புடவையு மாச்சு!

2 அத்திம்பேர் என்றால்தா னென்ன? — அவர்
அப்பட்ட தைச்சுருட்ட வருகிறார் சொன்னேன்
மொத்தத்தில் நூறுரூபாய் ஆச்சாம் — எட்டு
முழத்தில் ஜரிகைவேஷ்டி விலையேறிப் போச்சாம்!

3 தித்திப்புப் பட்சணம் முறுக்கு — எல்லாம்
திருட வகையில்லாமல் பரணிமே லிருக்கு
அத்திம்பேர்க் கடித்தது யோகம் — அவர்
அல்வாவைக் கண்டதும் விழிக்கிறார் பாவம்!

4 குழந்தைகள் என்றுநம்மை அழைத்து—அம்பி
கொஞ்சாத அத்திம்பேர் உறவென்ன உறவு?
அழகான பெண்டாட்டி அக்கா — அவள்
அசட்டுத் தனத்திற்கொரு கணக்கு வழக்கா?

5 சகிக்க முடியல்லேடா அம்பி — இதற்கு
சரியானபடி நாமும் செய்யணும் வம்பு
விதிப்பவர் தண்டனை யாரு — உன்
விஷமத்தைச் சரியாகக் காட்டித்தான் பாரு!

அம்பி :—

6 அக்காவின் கொட்டத்தை யடக்க — கமலி
அணாருண்டு இருந்தால்தான் முடியும்போ லிருக்கு
பக்கா வெடிகளெல்லாம் வைத்தேன் — வெறும்
பட்டாசால் முடியல்லே நானென்ன செய்வேன்?

7 அணாருண்டு வாங்குவோ மென்று — நான்
அலையாத பட்டாசுக் கடையில்லை இன்று
துணிவுடன் நான்இருந் தாலும் — ஏதும்
தோதுப் படவில்லை துட்டிருந் தாலும்

8 ஊசிவெடி ஒத்தைவெடி கொளுத்தி—அவர்கள்
உட்காரும் இடத்திலே வைத்துத்தான் பார்த்தேன்
நாலுக்காய் நகர்ந்து உட்கார்ந்து — என்ன
தமுட்டு விஷமமின்னு அதட்டினார் பாரு!

9 அணாருண்டு கடைப்பக்கம் வரணும் — இதற்கு
ஐ. நா. சபையோரு வழிசெய்ய வேணும்
பணத்துடன் கடைக்குதான் போனால் — இந்தப்
பட்டாசு போல்கட்டு கட்டாகத் தரணும்!

காரணம் தெரிந்தது

எஸ். வி. சௌந்தரராஜன்

"நமஸ்காரம் ஸார்! சௌக்கியந்தானே! என்ன இப்படி இளைத்துப் போய் விட்டீர்களே! அடையாளமே தெரியவில்லையே!" என்று சொல்லிக்கொண்டே என்னைப் பார்க்க வந்து சேர்ந்தார் ஒருவர்.

"சௌக்கியந்தான் ஸார்! இந்த ரேஷன் காலத்தில் இளைத்துப் போகாமல் திடகாத்திரமாய் எப்படி இருக்க முடியும்? ஏதோ இப்படிக் காலத்தைத் தள்ளிக் கொண்டு போகவேண்டியதுதான். உங்களை........."

"என்ன ஸார்! அதற்குள் மறந்துவிட்டீர்களே! போன மாதம் திருவல்லிக்கேணி 'க்யூ' வரிசையில் பஸ்ஸிற்காக அரை மணி நேரம் நின்று கொண்டிருக்கவில்லையா? அன்றைக்கு ஆங்கரை சுப்புவைப் பற்றிக்கூடப் பேசிக்கொண்டிருக்கவில்லையா? அவருடைய சாக்ஷாத் பேரன் ஸார், நான். என் பெயர் விகவம்."

"ஆமாம், ஆமாம், நன்றாய் ஞாபகம் வருகிறது. வர வர ஞாபக சக்தி குறைந்து கொண்டே வருகிறது. வீட்டில் எல்லோரும் சௌக்கியந்தானே? ஏதோ நான் மறந்து விட்டாலும் நீங்கள் ஞாபகம் வைத்துக் கொண்டு வந்தீர்களே, சந்தோஷம். இருங்கள், இதோ ஒரு நிமிஷத்தில் வந்து விடுகிறேன். அடே! யாரடா அங்கே!"

"ஸார், ஸார்! அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். நீங்கள் அனாவசியமாகச் சிரமப்படுத்திக் கொள்ளாதீர்கள். காப்பிக் கொட்டை கிடைக்காத கஷ்டகாலத்தில் இந்த மாதிரி உபசாரம் செய்யக்கூடாது. தனக்கு மிஞ்சித்தான் ஸார் தர்மம். இந்தத் தெருவில் ஒருவரைப் பார்க்க வேண்டியிருந்தது. வாசலில் போர்டைப் பார்த்தேன். சரி, வந்தது தான் வந்தோம். உங்களையும் பார்த்து விட்டுப் போகலாமென்று உள்ளே நுழைந்தேன்" என்று வேண்டா வெறுப்பாக நான் கொடுத்த காப்பியைச் சாப்பிட்டுவிட்டுக் கிளம்பினார் விகவம்.

என் மனைவி சொல்கிற மாதிரி காப்பி சாப்பிடுகிற வேளைக்குச் சரியாக யாராவது வந்து சேர்ந்து விடுகிறார்கள். இன்றைக்கு விகவம்; நாளைக்கு வில்வாத்ரி என்று யாராவது வந்துகொண்டு தான் இருக்கிறார்கள். வீடேறி வந்தவர்களை எப்படி 'போ' என்று சொல்கிறது? விகவத்தை இதற்கு முன்பு எனக்குப் பார்த்ததாகவே ஞாபகமில்லை. தினம் எத்தனையோ பேரைப் பார்க்கிறோம். அவ்வளவு பேரையும் ஞாபகம் வைத்துக் கொள்ள முடிகிறதா, என்ன?

ஒரு நாள் நான் மவுண்ட் ரோடில் போய்க் கொண்டிருக்கும் பொழுது விகவத்தைக் கண்டேன். ஆளை அடையாளமே தெரியவில்லை. காக்கி நிஜாரும் 'புஷ்' கோட்டும் போட்டுக்கொண்டு அமெரிக்க ஸோல்ஜர்போல் நின்றுகொண்டிருந்தான். மற்றொரு நாள் மயிலாப்பூரில் காப்பி ஹோட்டலில் சந்தித்து விட்டான். ஏக உபசாரம் செய்தான். காப்பி சாப்பிட்ட 'பில்லை'யும் தானே கொடுத்தான். போதாக் குறைக்கு என்னை வீட்டுவரையில் கொண்டு வந்து விட்டு விட்டுப் போனான். எனக்கு இவ்வளவு தாரம் உபசாரம் செய்யும் விகவத்தை யாரென்று தெரிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம். ஆனால் அவன் என்னைப் பேச விட்டால்தானே! ஏதாவது சளசள என்று என்னைப் பேசவிடாமல் அவனே பேசிக்கொண்டு போனான். நான் அவன் பேச்சைக் கேட்கிறேனா, இல்லையா என் பதைக்கூட அவன் லட்சியம் செய்யவில்லை.

ஞாயிற்றுக்கிழமை தவறாமல் என் வீட்டுக்கு வர ஆரம்பித்துவிட்டான். வந்தால் இரண்டு மணி சாவகாசத்திற்குக் குறைந்து போகமாட்டான். "என்ன, மணி பத்தடிக்கப் போகிறதே, இன்னும் உங்கள் பிரெண்ட் வரக் காணோமே! பிரெண்டாம் பிரெண்ட்! 'எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது, போய் விட்டு அப்புறம் வாருங்கள்' என்று சொல்லி அனுப்பாமல் அவனுடன் உட்கார்ந்து கொண்டு மணிக்கணக்காகப்

பேசிக் கொண்டிருக்கிறீர்களே!'' என்று எரிந்து விழுவாள் என் மனைவி.

எனக்கு அவனை யாரென்று கேட்கவே சங்கோசமா யிருக்கும் பொழுது அவனை, 'எனக்கு வேலை யிருக்கிறது, போய் விட்டு வா' என்று சொல்ல எங்கிருந்து தைரியம் வரப்போகிறது!

ஓரளவிற்கு விகவமும் என் மனைவியின் மனதை அறிந்து கொண்டு விட்டான். அவன் வந்தவுடன்தான் அவன் கடுவன் பூனைமாதிரி முகத்தை வைத்துக் கொண்டு உள்ளுக்கும் வாசலுக்கும் நூறு தரம் நடக்கிறாளே! இது கூடவா அவனுக்குத் தெரியாது!

ஒருநாள் ஆபீஸிலிருந்து வந்து உள்ளே நுழைவதற்குள்; "உங்கள் சிநேகிதர் விகவம் மத்தியானம் வந்திருந்தார். அவருக்குத் தெரிந்த யாரோ ஒருவர் விலை சரசமாக அரிசி கொடுத்தாராம். பதினைந்து ரூபாய் அரிசியைக் கொண்டு வந்து, 'வேண்டுமா' என்று கேட்டார். கையில் பணம் இல்லை என்று சொன்னேன். பரவாயில்லை என்று அரிசியை வைத்து விட்டுப் போய்விட்டார். அரிசி எவ்வளவு நன்றாய் இருக்கிறது, தெரியுமா!'' என்று மூச்சு விடாமல் பேசிக்கொண்டே போனாள் என் மனைவி.

எனக்கு விகவத்தின் மேல் சந்தேகம் தோன்ற ஆரம்பித்து விட்டது. எதற்காக இவன் வலுவில் வந்து இப்படி உபகாரம் செய்கிறான் என்றே புரியவில்லை. ஒரு வேளை என் மனைவியைத் திருப்தி செய்து விட்டால் ஞாயிற்றுக் கிழமை தவறாமல் டிபன், காப்பி சாப்பிட்டுக் கொண்டிருக்கலாம் என்று நினைத்தானோ என்னவோ!

எப்படியும் இந்த ஞாயிற்றுக்கிழமை அவனுடைய பூர்வோத்திரத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானமாய் உட்கார்ந்து கொண்டிருந்தேன். விகவம் வரும்பொழுதே, "என்ன ஸார், அரிசி எப்படி இருந்தது? பேஷான அரிசி. ஒன்றரை ரூபாய் கொடுத்தால்கூட இந்தமாதிரி அரிசி கிடைக்காது. நீங்கள் சரியாகச் சாப்பிடாமல்தான் உடம்பைக் கெடுத்துக் கொள்கிறீர்கள். உங்களைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது. எவ்வளவோ கஷ்டப்பட்டு இந்த அரிசியை வாங்கிக் கொண்டு வந்தேன்'' என்று ஒரு போடு போட்டான்.

"ரொம்ப சந்தோஷம். இந்தக் காலத்தில் யார் இப்படி வலுவில் வந்து உபகாரம் செய்யப் போகிறார்கள்! அது கிடக்கட்டும்; நான் உடம்பைக் கெடுத்துக் கொள்வதாகச் சொல்கிறீர்களே, நீங்கள் ரொம்ப பலசாலியாக இருப்பதாக எண்ணமோ?''

"பலசாலியாக இல்லாவிட்டாலும் என்னைப் பற்றி ஒன்று சொல்லிக்கொள்ள முடியும்? நான் புத்திசாலி என்று சொல்லிக் கொள்ளலாம்.''

"என்ன, அப்படி புத்திசாலித்தனமான காரியம் செய்து விட்டீர்கள்?''

"எனக்கு ஒரு கவலையும் இல்லை, ஸார்! நான் இன்றைக்குக் கண்ணை மூடிக்கொண்டால்கூட குடும்பம் கஷ்டப்படாமல் இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்து விட்டேன்.''

"என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்? குறைந்தது இரண்டாயிரம் ரூபாய்க்காவது இன்ஷ்யூர் செய்திருக்கிறீர்களா? இல்லாவிட்டால் சொல்லுங்கள். நம் கம்பெனியில் ஒரு 'பாலிஸி' எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று பேச்சோடு பேச்சாக என் காரியத்தையும் சொல்லி வைத்தேன்.

"ஐயோ! நீங்களும் ஒரு இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டா?'' என்று தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்து விட்டான் அருமை நண்பன் விகவம்.

வட்ட மேஜை

கோச்சி
23—10—48

மருந்தும் மந்திரியும்

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

தற்பொழுது நம் நாட்டிலும் சரி, பிறநாடுகளிலும் சரி, எவ்வளவோ பிரபலமான விஞ்ஞான ஆசிரியர்கள் இருக்கின்றனர். மிகவும் கஷ்டப்பட்டு, ஆராய்ச்சி செய்து, பல அபூர்வமான மருந்துகளைக் கண்டு பிடித்தும் அவைகளைத் தயாரித்தும் இருக்கிறார்கள். அப்படித் தயார் செய்யப்பட்ட மருந்துகளை, நம் நாட்டிலுள்ள அரசாங்க விஞ்ஞான ஆசிரியர்கள் பரிசோதித்து, நல்ல மருந்தை ஆமோதிக்கிறார்கள். சில மருந்துகள் விஷயத்தில் நம் நாட்டு விஞ்ஞான ஆசிரியர்கள் அசிரத்தையாக இருப்பதாகத் தோன்றுகிறது. உதாரணமாக 1. ஸிஸ்டக்ஸ்(Cystex) 2. மெண்டகோ (Mendaco) 3. வைடப்ஸ் (Vi-tabs) 4. அமோசான் (Amosan) என்ற நான்கு மருந்துகளும் அமெரிக்க விஞ்ஞான ஆசிரியர்களால் பரிசோதிக்கப்பட்டு, பின்னர் அம்மருந்துகளை ஆட்சேபித்திருக்கின்றனர். மேற்படி மருந்துகள் அமெரிக்காவில் விற்பனை செய்யக்கூடாதென்று அமெரிக்க அரசாங்கத்தார் தடை உத்தரவு விதித்திருக்கிறார்கள். அதே மருந்துகளை 'நல்ல உத்தரவாதமான மருந்து' என்று இந்தியாவில் பத்திரிகைகள் மூலம் விளம்பரப் படுத்துவதேன்?

நம் நாட்டிலுள்ள சுகாதார மந்திரிகள் இவைகளைக் கவனிக்கவில்லை போலும்! இம்மாதிரி இன்னும் எத்தனை மருந்துகள் இருக்கின்றனவோ!

கே. பி. விசுவநாதன்.

கோயமுத்தூர்
26-10-48

ஸ்டேஷன் வேண்டும்

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

கடந்த பல வருஷங்களாகவே மைசூர் ராஜ்யத்தின் தெற்கு எல்லையான சாமராஜ நகரத்திற்கும் சத்திய மங்கலத்திற்கும் ரயில் பாதை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருந்தன. தற்சமயம் மைசூர் அரசாங்கமும் இந்திய யூனியன் அரசாங்கமும் ஒரு முடிவுக்கு வந்து ரயில் பாதையைச் சாமராஜ நகரத்திலிருந்து மேட்டுப்பாளையத்திற்கு இணைப்பதற்கு 'சர்வே' நடத்துகொண்டிருக்கிறது. தற்சமயம் நடக்கும் சர்வேயில் சத்தியமங்கலம் நீக்கப்பட்டு இவ்வூருக்கு சுமார் ஆறு அல்லது ஏழு மைல் தூரத்திற்கு மேற்கேயே ரயில் பாதையை மேட்டுப் பாளையத்துடன் இணைப்பதற்கான ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது.

சுமார் மூவாயிரம் வீடுகளும் இருபதினாயிரம் ஜனங்களும் சத்தியமங்கலத்தில் இருக்கின்றனர். மைசூர் ராஜ்யத்தின் முக்கிய விளை பொருள்கள் அனைத்திற்கும் வியாபார ஸ்தலமாக விளங்கும் சத்தியமங்கலத்தை இணைக்காமல் 'சர்வே' நடந்து கொண்டிருப்பது சத்தியமங்கல வாசிகளின் அதிருப்திக்கும் மன வருத்தத்திற்கும் காரணமாயிருக்கிறது.

மைசூர் அரசாங்கத்திற்குச் சத்தியமங்கலத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி மிக நன்றாகத் தெரியும். ரயில்பாதை இணைப்பு விஷயமாக ஸ்ரீ மாதவராவ் அவர்கள் திவானாக இருந்த சமயம் மைசூர் ரயில்வேயின் பிரதம அதிகாரிகளுடன் இவ்விடம் நேரில் விஜயம் செய்து ஸ்டேஷன் ஏற்படுத்த வேண்டிய இடங்களைப் பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்.

ரயில் பாதையை இந்திய யூனியன் அரசாங்கமும் மைசூர் அரசாங்கமும் சிரமத்தைப் பாராமல் சத்திய மங்கலத்துடன் இணைப்பதால் நாள்தோறும் சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட பஸ்களில் பிரயாணம் செய்யும் பிரயாணிகளுக்குச் சௌகரியம் செய்தவர்களாவார்கள். அத்துடன் நூற்றுக்கணக்கான லாரிகளிலும் வண்டிகளிலும் மைசூர் ராஜ்யத்திற்கும் மற்றும் நமது மாகாணத்தின் பல பாகங்களுக்கும் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் நூற்றுக் கணக்கான வியாபாரிகளுக்கும் சௌகரியமாயிருக்கும்.

எஸ். கே. முத்து

இலங்கை
18—10—48

'மேனன்' மயம்

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

இலங்கையின் ராஜீய சரித்திரத்தை அறிந்தவர்களுக்கு இந்தியத் துவேஷம் இங்கு தாண்டவமாடுவதின் அடிப்படைக் காரணம் என்னவென்பது நன்கு தெரியும். 1939ம் ஆண்டில் இந்தியர்களை இலங்கை அரசாங்கம் நாடுகடத்தியபொழுது இந்தியத் துவேஷிகள் தங்களுடைய பிரசார பாணங்களை யெல்லாம் முக்கியமாக மலையாளிகள் மீதே செலுத்தினார்கள். "ஒரு வீட்டை இருபது முப்பது மலையாளிகள் கூட்டாக வாடகைக்கு எடுத்துக் கொண்டு வசிக்கிறார்கள். அவர்களால் தான் தொழிலாளரின் வாழ்க்கை நிலைமை குறைக்கப்பட்டு, அந்த நிலைமையில் சிங்களத் தொழிலாளரால் வேலை செய்ய முடியாமற் போய் விட்டது" என்று ஜாக்ஸன் கமிஷனிடமும் சோல்பரி கமிஷனிடமும் ஸ்ரீ குணசிங்கா சாட்சியம் அளித்தார்கள்.

இந்த நிலைமையில் இலங்கையிலுள்ள இந்திய அரசாங்கப் பிரதிநிதிகளை யெல்லாம் "மேனன்"கள் மயமாக்க முயற்சி நடப்பது இலங்கை இந்தியர்களுக்குக் கவலையைக் கொடுத்து வருகிறது. இங்குள்ள இந்திய வர்த்தகக் கமிஷனர் ஒரு மேனன்; அவருடைய காரியதரிசி ஒரு நாயர்; கண்டியிலிருக்கும் இந்திய அரசாங்க ஏஜண்டு ஒரு மேனன்; ஹை கமிஷனர் ஸ்ரீ கிரியின் காரியாலயத்துக்கு ஒரு விளம்பர இலாகா அதிகாரி நியமிக்கப்பட விருப்பதாயும் அப்பதவிக்கு டில்லியிலிருந்து ஒரு மேனன் வரப்போவதாயும் பேச்சுகள் அடிபடுகின்றன. ஸ்ரீ கிரிக்கு அடுத்தபடியாக ஒரு நாயர் வந்து விட்டால் இங்குள்ள இந்திய அரசாங்கப் பிரதிநிதி

● இந்த இதழில் வெளியாகி யிருக்கும் வட்டமேஜைக் கடிதங்களில் கோச்சி கே. பி. விசுவநாதன் எழுதி யிருக்கும் கடிதத்துக்கு ரூ. 25 பரிசு வழங்கப்பட்டது.

சென்றோரும் மலேயாவிலேயே தங்கி விடு வார்கள் !

மலேயா சகோதரர்களின் அறிவையும் திறமையையும் பற்றி யாரும் குறை சொல்லிவிடவில்லை. அந்த அறிவாளிகளுக்கு வேலை கொடுக்க பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், பிரான்ஸ் முதலான இடங்களிலிருக்கும் இந்தியப் பிரதிநிதிகளின் காரியாலயங்கள் இல்லையா? அவைகளை யெல்லாம் விட்டு இலங்கையில் நியமிப்பானேன்? மலேயா சகோதரர்களைத் துவேஷப் பார்வையோடு இலங்கையர்கள் பார்க்கிறார்களென்பது பிரசித்தமாயிருந்தும் 'மேனன்'களை வர்த்தகக் கமிஷனர்களாகவும் சர்க்கார் ஏஜெண்டுகளாகவும் காரியதரிசிகளாகவும் நியமித்து இலங்கைக்கு அனுப்புவது இருதேச நல்லுறவையும் வளர்க்க உதவாது. இந்த விஷயத்தில் இந்திய சர்க்கார் கவனம் செலுத்தவேண்டும்.

ரஜனி.

கும்பகோணம்
22—10—48

கொசு மகாத்மியம்

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

எங்கள் ஊரில் மூச்சந்தி என்று சொல்லப்படும் மூன்று ரோடுகள் கூடுமிடம், நிறைய இருக்கின்றன. ஜனங்களின் சௌகரியத்திற்காக ஒவ்வொரு மூச்சந்தியிலும் ஒரு மெர்குரி விளக்கு (பாதரஸ விளக்கு) போட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி ஜனங்கள் அடைய வேண்டியசந்தோஷத்தை அந்தக் கொசுக்கள்தான் அனுபவிக்கிறது. எதாவது குழந்தை அந்தப் பக்கமாகச் சென்றால் மறைந்து விடுகிறது. அந்தப் பூச்சிகள் குழந்தையை மேலே தூக்கிச் சென்று அபேஸ் செய்து விடுகின்றன போலும்! பெரியவர்கள் யாராவது அந்தப் பக்கமாக வாயைத் திறந்து கொண்டு சென்றால் அந்தப் பூச்சி வாயால் புகுந்து மூக்கால் வெளிவருவதன் மூலம் தன் சாமர்த்தியத்தைக் காண்பிக்கிறது. சில பூச்சிகள் காதில் புகுந்துகொண்டு வெளிவர ஸ்டிரைக் செய்கின்றன. எவ்வளவோ சாமான்கள் ஏற்றுமதி செய்யும் நம் சர்க்கார் இப் பூச்சிகளை ஏற்றுமதி செய்ய (வெளி நாடுகளில் இறக்குமதி செய்வதாயிருந்தால்) எனக்கு ஓர் உத்தரவு கொடுத்தால் ஒரு மூட்டை ஒரு அணா வீதம் அனுப்பினாலே ஒரு மாதத்தில் நான் கோடீசுவரனாகி விடுவேன் என்பது நிச்சயம். அந்தக் காரியத்தை மேற்கொண்டு நான் கோடீசுவரனாகிவிடப் போகின்றேனே என்ற பொறாமையினாலாவது முனிஸிபல் அதிகாரிகளைப் பல இன்னல்களுக்கு மிடையில் இதிலும் ஒரு கண் திறந்து பார்க்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

கே. எஸ். ரங்காச்சாரி.

நாகப்பட்டணம்
27—10—48

சர்க்கார் கவனிக்குமா?

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

ஒரு நாள் வேளாங்கண்ணிக்குச் சென்றிருந்தேன். அன்று அங்கு உற்சவம். ஸ்டேஷனை விட்டு இறங்கிக் கோவிலுக்குப் பாதசாரியாக நடந்தேன். ரோட்டின் இரண்டு பக்கங்களிலும் பெரும்பான்மை குஷ்டரோகிகளும், ஆரோக்கியமுள்ளவர்களும் சேர்ந்தாற்போல் உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தனர். பிரயாணிகள் தங்குவதற்காகப் பல இடங்களில் கொட்டகைகளும் போடப்பட்டிருந்தன. அங்கும் குஷ்டரோகிகளும் ஏழை மக்களும் ஒன்று கலந்தே இருந்தனர். இதைப் பார்த்த பொழுது மிகவும் வருத்தமாகவே இருந்தது. டாக்டர்கள் சாதாரண வியாதியஸ்தர்களைத் தொட்டால்கூடத் தங்கள் கைகளை 'லோஷன்' என்னும் மருந்து கலந்த நீரில் கழுவுகிறார்கள்! அப்படியிருக்க ஏழை மக்கள் வியாதியஸ்தர்களோடு கலந்து உணவு முதலியவை உட்கொள்கிறார்களே, அவர்களுக்கு வியாதி பரவாதா?

தேக ஆரோக்கியமுள்ளவர்கள் பிச்சை எடுத்தல் கூடாது என்று நம் மாகாணத்திலும் சட்டம் இயற்றி, நோயாளிகளுக்கான விடுதிகள் அமைத்து அவர்களை அங்கு வைத்துக் காப்பாற்றினால், மற்றவர்களுக்கு இக் கொடிய வியாதி பரவாமல் தடுக்கலாம். இதை நமது மாகாண சர்க்கார் கவனிப்பார்களா?

ஆர். சௌரிராஜுலு

சென்னை
26—10—48

"மாற்று டிக்கட்"

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

நம் சென்னை நகரத்தில் ஓடும் டிராம் வண்டிகளில் பம்பாய் நகரத்தில் ஓடும் 'டிராம்' வண்டிகளில் கொடுக்கப்படும் டிக்கட்டுகள் போல் "மாற்றும் டிக்கட்" கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதாவது மவுண்ட் ரோடிலிருந்து எழும்பூர் டிராம் ஜெட்டிற்குப் போகவேண்டிய பிரயாணிகள் சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு ஒரு டிக்கட் 0—0—9 அணா கொடுத்து வாங்கி, பிறகு எழும்பூர் ஸ்டேஷன் போகும் டிராமில் ஏறி மேலும் 0—0—9 அணா கொடுத்து டிக்கட் வாங்கிக் கொண்டு போக வேண்டியிருக்கிறது. அவ்வாறு செய்யாமல் மவுண்ட்ரோடிலிருந்து நேராக எழும்பூர் டிராம் ஜெட்டிற்கு மாற்று டிக்கட் கொடுத்தால் சௌகரியமாயிருக்கும்.

'நீர்மூழ்கி'

திருவல்லிக்கேணி
18—10—48

இல்லற வாழ்க்கை!

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

கார்ப்பரேஷன் எலெக்ஷன் சம்பந்தமான விநோத சம்பவங்களில் ஒன்றைத் தெரிவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

நானும் என் கணவரும் திருவல்லிக்கேணியில் ஆறு வருஷங்களாக வசித்து வருகிறோம். இதுவரை பதினாறு வருஷங்களாகக் கவிகள் சொல்லும் நகமும் சதையும்போல் தாம்பத்ய வாழ்க்கை நடத்தி வந்திருக்கிறோம். ஆனால் இந்த வாழ்க்கைக்குக் கார்ப்பரேஷன் எலெக்ஷன் மூலமாக ஆபத்து வந்துவிடும்போலிருக்கிறது. வாக்காளர்கள் ஜாபிதாவில் என்னைத் திருவல்லிக்கேணி டிவிஷனிலும் என் கணவரை மீர்சாஹிப்பேட்டை டிவிஷனிலும் போட்டிருக்கிறார்கள். இரண்டு டிவிஷன்களிலும் எலெக்ஷனுக்கு நிற்பவர்கள் எங்களிருவரையும் தேடி வந்தார்கள். என் கணவர் என் பெயர் திருவல்லிக்கேணி டிவிஷனில் இருக்க முடியாது, தன்னோடு மீர்சாஹிப்பேட்டையில்தான் இருக்குமென்று நினைத்து என் பெயர் தவறாக இருக்கிறதென்று திருத்துவதற்காகச் செய்த முயற்சிகள் வீணாயின. அன்யோன்ய தாம்பத்ய வாழ்க்கை நடத்தும் எங்களைப் பிரித்துவைக்கக்கூடிய சக்தி

நமது கார்ப்பரேஷனைத் தவிர வேறு யாருக்கும் இருக்க முடியாது.

'ஷண்முகப்ரியை.'

வாணுபாடி.
26—10—48

ரஸ்தா வேண்டும்

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

எங்கள் கிராமம் இராணிப்பேட்டைக்கு வடக்கே இரண்டரை மைல் தூரத்திலுள்ளது. கிராமத்தின் ஜனத்தொகை 2000க்கு மேலிருக்கும். யாவரும் ஏழை விவசாயிகள். வருடம் ஒன்றுக்குச் சுமார் ரூ. 2750 வரை தீர்வை செலுத்தப்படுகிறது. ஆனால் விவசாயிகளின் நன்மைக்கென நகரத்தையும் கிராமத்தையும் இணைக்கும் ரஸ்தாவே கிடையாது.

நிலங்களுக்கு எரு முதலிய சாதனங்களைப் பெற இராணிப்பேட்டை, ஆற்காடு, முதலிய நகரங்களுக்குச் செல்லவேண்டும். நோயாளிகளும், கர்ப்பிணிகளும் வைத்திய உதவி பெற இராணிப்பேட்டை ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும். வெளியூர்களுக்குப் பிரயாணம் செய்யவும் இராணிப்பேட்டை ரயில், பஸ் நிலையங்களுக்குத்தான் செல்லவேண்டும். கிராமத்தின் விளைபொருள்கள் சுற்றுப்புற நகரங்களுக்குச் சென்றே விற்பனையாகின்றன. எனவே, கிராமத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இராணிப்பேட்டைப் போக்கு வரவு அவசியமாகிறது.

இராணிப்பேட்டைக்கும் வாணுபாடி கிராமத்திற்கும் ரஸ்தா இல்லாமல் நாங்கள் படும் கஷ்டம் அளவில்லாதது. நிலங்கள் விளைவின்றிப் போவதற்கும், அவசரத் தந்திகளும் செய்திகளும் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதற்கும், கிராமம் சீர் கெட்டுப் போவதற்கும் ரஸ்தா யின்மையே காரணமாகும். இராணிப்பேட்டைக்குப் போக நடைபாதை கூட இன்றி மனிதனும், மாடும் படும் நரக அவஸ்தையை நேரில் பார்த்தவர்கள் தான் அறிய முடியும்.

ரஸ்தா போடவேண்டிய ஏற்பாட்டைச் செய்யுமாறு ஜில்லா கலெக்டரையும் ஜில்லா போர்டாரையும் பன்முறை கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இதில் கவனம் செலுத்தி கிராம மக்களின் நன்மையைக் கருதி வாணுபாடி—இராணிப்பேட்டை ரஸ்தா அமைக்க ஆவன செய்யக் கோருகிறேன். அரசாங்கமும் அமைச்சர்களும் அதிகாரிகளும் அக்கறை கொள்ளுவார்களா?

பி. கிருஷ்ணசாமி.

தூத்துக்குடி.
25—10—48

குறைகளைத் தீர்க்குமா?

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

நான் மத்திய சுங்க இலாக்காவில் (Central Excise) 1944-ம் வருஷம் ஒரு குமாஸ்தாவாக வேலைக் கமர்ந்தேன். என்னை திடீரென்று 1948-ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்திலிருந்து வேலையிலிருந்தும் ஒருவித காரணமும் காட்டாமல் முன்னறிவிப்பும் இன்றி நீக்கி விட்டனர். என்மீது எவ்விதக் குற்றமும் குகப் பிக்கப்படவில்லை. நான் வேலைக்குத் தகுதி யற்றவன் என்பதும் குகப்பிக்கப் படவில்லை. மேலும் எனக்குச் சேரவேண்டிய ஜூன், ஜுலை மாதச் சம்பளங்களையும் கொடுக்காமல் நிறுத்திவைத்துக் கொண்டிருக்கிறது. எனக்கு நியாயமாகச் சேரவேண்டிய பாக்

கல்வி அபிவிருத்தி!



"அடே அப்பா! ஊரிலே படிப்பு ரொம்ப அதிகமாகி விட்டது போலிருக்கே?"

கித் தொகையையும் தர மறுக்கிறது. பன்முறை பணிவாக எழுதிக் கேட்டும் பலனில்லை. அதிகாரிகள் தங்கள் சொந்த விருப்பு வெறுப்பின் பேரிலும், எதேச்சாதிகார வெறிகொண்டும், பழிவாங்கும் நோக்கத்துடனும் மேற்கூறிய காரியங்களைச் செய்திருக்கிறார்கள். உண்மை நிலைமையை எடுத்துக் கூறினும் உணர மறுக்கிறார்கள். நான் நாலு வருஷம் சர்க்காருக்கு உழைத்தது வீணாகப் போவதா? நம் ஜனநாயக அரசாங்கம் என்போன்ற இளைஞர்களைக் காப்பாற்றத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

வி. எஸ். மகாலிங்கம்.

விருதுநகர்
27—10—48

துயரம் தீருமா?

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

சாத்தூர், சிவகாசி வட்டாரங்களில் தீப்பெட்டி உற்பத்தி செய்யும் கம்பெனிகளில் ஏராளமான தீப்பெட்டிகள் தேங்கிவிட்டன. ஹைதராபாத், பாகிஸ்தான் முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகிக் கொண்டிருந்த தீப்பெட்டிகளை சர்க்கார் தடை செய்ததே இதற்குக் காரணம். இதனால் ஆயிரக்கணக்கான தீப்பெட்டித் தொழிலாளிகள் வேலை யிழந்து தங்கள் குடும்பங்களுடன் பட்டினியும் பசியுமாகக் காலத்தைக் கடத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

பல தடவைகள் மேலதிகாரிகளுக்கு எழுதியும் பலன் இல்லை; பதிலும் இல்லை.

ஆகவே, சர்க்கார் மீண்டும் தீப்பெட்டி ஏற்றுமதிக்கு அனுமதியளித்து ஏழைத் தீப்பெட்டித் தொழிலாளர்களின் துயரை நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சோம. மகாதேவன்

தீர் பாராத முடிவு

பி. வி. சுப்பிரமணியம்



திருவருணைக்குச் சில நாட்களுக்கு முன்பு கலெக்டர் விஜயம் செய்த போது அந்த ஊர் கலாசாலை மாணவர்கள் ஒரு நாடகம் நடத்தினர். அதைப்பற்றி உள்ளூரில் நடந்துவந்த இரண்டொரு பத்திரிகைகள் விமரிசனம் செய்திருந்தன. அதன் முடிவு நன்றாக இல்லை என்றும், அது வேறு விதமாக முடிக்கப்பட்டிருந்தால் நன்றாக இருக்குமென்றும் ஒரு பத்திரிகை எழுதி யிருந்தது. சாதாரணமாக விமரிசகர்களுக்குப் பதில் அளிக்கும் முறை அவ்வளவு சரியானது அல்ல என்பதுதான் என்னுடைய கருத்து. என்றாலும் நடை பெற்ற நாடகத்தின் ஆசிரியர் என்ற முறையில் ஒரு அதிசயச் சம்பவத்தை எடுத்துரைக்க விரும்புகிறேன்.

*

திருவருணைத் தாலுக்கா கிராமங்களில் உள்ள ஆரம்பப் பள்ளிக் கூடங்களில் கலீர் கலீர் என்று சதங்கை ஒலி கேட்டது. சிறு குழந்தைகளை நாட்டியத்திற்குப் பழக்குவிக்கும் நட்டுவனாரின் சத்தமும், கட்டைமீது பட்டென்று அடிக்கும் அவருடைய ஆர்ப்பாட்டமும் ஓய்ச்சல் ஒழிவின்றிக் கேட்டுக் கொண்டிருந்தன.

பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் கிடைத்த நாடகப் பிரதிகளை வைத்துக் கொண்டு அவற்றை நடித்துக் காட்டுவதற்குப் பிள்ளைகளைத் தயார் செய்து கொண்டிருந்தார்கள்.

திடீரென்று அப்படி அருங் கலைகளில் அவர்களுக்கு உற்சாகம் வருவதற்கு என்ன காரணம்? அரிச்சுவடிப் புத்தகத்தையும், பெருக்கல் வாய்ப்பாட்டையும் தூக்கி எறிந்து விட்டு அப்படி கிளம்பும்படி என்ன நேர்ந்தது என்று எவரும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. அதற்குக் காரணம் அந்த ஜில்லாவுக்குப் புதிதாக வந்து வேலை ஒப்புக் கொண்டிருந்த கலெக்டர் சேமக்கலக் கவுண்டர்தான். அவருக்கு நாடகம், பரதநாட்டியம் முதலியவை மிகவும் பிடித்தமான விஷயங்கள் என்று அவருடைய சமையற்காரன் மூலமாக ஒரு செய்தி வெளியாயிற்று. அதை வைத்துக்கொண்டு அந்த ஜில்லா வாசிகளும், குறிப்பாகத் திருவருணைத் தாலுக்கா கிராமங்களில் உள்ள ஆரம்ப ஆசிரியர்களும் சிறு குழந்தைகளுக்கு அபிநயத்தோடு பாட்டும் சொல்லிக் கொடுத்தார்கள்.

அப்படிப்பட்ட புதிய வேகம் ஜெயராமன் படித்துக் கொண்டிருந்த கலாசாலையையும் தாக்கியது. அவன் இன்டர்மீடியெட் முதல் வருஷம் தேறி இரண்டாவது வகுப்பை அடைந்திருந்தான். நல்ல களையான முகமும் இனிய குரலும் இயற்கையாகவே அவனுக்கு அமைந்திருந்தன. அத்துடன் பள்ளிக்கூட நாடகங்களில் அடிக்கடி நடித்தும் பழக்கம் பெற்றிருந்தான்.

புதிய கலெக்டரின் விஜயத்தையொட்டி, அந்தக் கலாசாலையில் ஒரு நாடகத்தை நடிக்க ஏற்பாடு செய்தார்கள். ஜெயராமனுக்கு அதில் முக்கிய பாகத்தை கொடுத்தனர். வெகு மும்முரமாக நாடக ஒத்திகை நடந்தது. பாடங்களை எந்த நாளிலும் நெட்டுருச் செய்தறியாத மாணவர்கள், தங்களுடைய பாகங்களை விழுந்து விழுந்து மனப்பாடம் செய்தனர். அந்தக் கலாசாலை பிரின்ஸிபால் தம் காலேஜில் நடைபெறும் நாடகத்தைக் கண்டு கலெக்டர் அப்படியே பூரித்துப் போய்விடுவார் என்று எண்ணி மகிழ்ந்தார்.

அவரைப் போல் சந்தோஷ சாகரத்தில் மூழ்கியிருந்த மற்றொரு பிரகிருதியும் அந்த ஊரில் இருந்தது. யார் தெரியுமா? சாக்ஷாத் ஜெயராமனின் தகப்பனார்தான். அவருக்குத் தலைகால் புரியவில்லை. தன்னுடைய மகன் ஜில்லா கலெக்டரின் ஆதரவைப் பெற்று விடுவான். அதன் மூலமாகச் சர்க்காரில் உதவிச் சம்பளம் பெற்று சீமைக்குச் சென்று படித்து ஒரு கலெக்டராகத் திரும்பி வருவான் என்று அவர் கனவு கண்டார்.

அப்படி எல்லாரும் தங்கள் தங்களுடைய கற்பனைக் கோட்டைகளைக் கட்டிக்கொண்டு, அதில் வாழ்ந்து வந்தபோது, எல்லாருடைய தலையிலும் கல்லைப் போட்டது போன்ற ஒரு செய்தி வந்தது. ஜெயராமனுக்குச் சில நாட்களுக்கு முன்புதான் விவாகமாகியிருந்தது. அந்தப் பெண்ணுக்கு அலமேலு என்று பெயர். அவளுக்கு ஜுரம் வந்து மிகவும் அபாயகரமான நிலையிலிருப்பதாகச் செய்தி வந்திருந்தது. அதைக் கண்டு எல்லாரும் அசந்து போனார்கள்.

பிரின்ஸிபால் தத்தளித்துக் கொண்டிருந்தார். "வேறு ஒருவனை ஜெயராமன் ஸ்தானத்தில் நடிக்கச் சொல்லலாம் என்றால், அது முக்கிய பாகம் ஆயிற்றே? நாடக தினம் வெகு அருகில் வந்துவிட்டதால் இனி அதை அடியிலிருந்து வேறு ஒருவன் மனப்பாடம் செய்ய முடியாதே?" என்று நினைத்து அவர் தவித்தார்.

ஆனால், ஜெயராமனுடைய தகப்பனார் மற்றொரு விதத்தில் வேதனைப் பட்டுக் கொண்டிருந்தார். "இந்த அதிர்ஷ்டங் கெட்ட பயலுக்கு ஏதோ நல்லது வரப் போகிறதென்று நினைத்துக் கொண்டிருந்தால், இடியென்று தலைக்கே கல் வந்து விட்டதே!. தவம் கிடந்தால்கூட அப்புறம் கலெக்டர் தயவு கிடைக்காதே!" என்று அவர் கவலைப்பட்டார்.

ஜெயராமனுடைய உள்ளத்தில் எழுந்த உணர்ச்சி விவரிக்க முடியாததாக இருந்தது. அது துயரமா, பயமா என்று அவனுக்குத் தெரியவில்லை. அலமு அவனுடைய மனதிற்குப் பிடித்த பெண்ணாக இருந்தாள். கைதேர்ந்த சிற்பி ஒருவன் செதுக்கி வைத்த விக்கிரகத்தைப் போல் அவள் பூரண அழகு தோன்ற அவன் முன் காட்சி அளித்தாள்.

செய்தி வந்த அன்றிரவே அவன் அலமேலுவைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டான். ஊர் போய்ச் சேர்ந்தபோது அவனுடைய மனைவி ஒரு கட்டிலில் படுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான். அவளுடைய பிரகாசமான கண்கள் ஒளியிழந்திருந்தன. மாந்தளிர் போன்ற அவளுடைய உடல் மிகவும் வாடியிருந்தது. டாக்டர் அருகில் நின்று அவளைப் பரிசோதித்துக் கொண்டிருந்தார். எல்லாருடைய மனமும் 'திக்' 'திக்' என்று அடித்துக் கொண்டது. டாக்டருடைய வாயைப் பார்த்தபடி எல்லாரும் நின்றனர்.

"நிலைமை அவ்வளவு மோசமில்லை" என்று டாக்டர் சொன்ன பிறகுதான் எல்லாருக்கும் சற்றுத் தைரியம் பிறந்தது.

அடுத்த சில நாட்களில் அலமேலுவின் தேக நிலையில் சற்று அபிவிருத்தி ஏற்பட்டது. அவள் பிழைத்து எழுந்து விடுவாள் என்ற நம்பிக்கை ஜெயராமனுக்கு உண்டானவுடன், கலாசாலை நினைவு வந்தது. ஆகவே, மறுநாள் ஊருக்குப் புறப்படலாம் என்று நினைத்தான்.

அன்று மாலை கோவிலில் ஏதோ விசேஷம். அலமேலுவுக்குச் சற்று குணமாக இருந்ததால் அவளுடைய தாயார் "குழந்தையை பார்த்துக் கொள்ளுங்கள். சீக்கிரத்தில் வந்து விடுகிறேன்" என்று தன்னுடைய கணவரிடம் சொல்லி விட்டுக் கோவிலுக்குச் சென்றிருந்தாள். அவரும் "ஆகட்டும்" என்று சொல்லிவிட்டு ஏதோ எழுதிக்கொண்டிருந்தார்.

எனவே, ஜெயராமன் வெளியிலிருந்து வந்தபோது, அலமேலு தனியாகப் படுத்துக்

கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும் அவளுடைய உள்ளத்தில் ஏதோ ஒருவிதக் கலவரம் ஏற்பட்டது. அவனைத் தனியாகப் பார்ப்பது முதல் தடவையாதலால், விவரிக்க முடியாத பயமும் அவளுக்கு உண்டாயிற்று. படுக்கையை விட்டு அவளால் எழுந்திருக்க முடியவில்லை. வெட்க மிகுதியினால் அவள் கைகளால் தன் முகத்தை மூடிக் கொண்டாள்.

ஜெயராமன், "அலமு" என்று அன்பாக அழைத்து, "நான் அவசரமாக ஊருக்குப் போக வேண்டும். உடம்பை ஜாக்கிரதையாக, சரியாகக் கவனித்துக் கொள்ளுகிறாயா? காரியம் ஆனதும் வந்து விடுகிறேன்" என்றான்.

"என்ன, ஸார்! உங்கள் குடை என் கண்ணைக் குத்தி விட்டதே!"

"இன்னொரு தடவை அப்படிச் சொல்லாதேயும். இது என் குடையில்லை; இரவல் குடை!"

அப்படி ஜெயராமன் கூறியதற்குப் பதிலளிக்கும் தைரியம் அலமுவுக்கு வரவில்லை. "என்ன காரியம்?" என்று கேட்க வேண்டுமென்று அவளுக்குத் தோன்றிற்று. 'தன்னை விட அந்தக் காரியம் அவ்வளவு முக்கியமானதா?' என்றுகூடக் கேட்டு, தன் உரிமையை ஸ்தாபித்துவிட வேண்டுமென்று அவள் நினைத்தாள். ஆனால் அதற்கு நா எழவில்லை. அதே சமயத்தில் அவளுடைய தகப்பனார் மாடியிலிருந்து இறங்கி வரும் சத்தம் கேட்டது.

உடனே "நான் போய் வருகிறேன்" என்று சொல்லி, இலேசாக அவளுடைய கன்னத்தில் ஒரு தட்டுத் தட்டி விட்டு ஜெயராமன் மாடிப்படிக்கட்டுகளின் மீது ஏறிச் சென்றான், அலமு தூங்குவதைப் போலப் பாசாங்கு செய்தாள். அடுத்த நாள் ராத்திரி அவன் ஊருக்கு புறப்பட்ட போது, தன்னுடைய அலமுவிடம் சற்று பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது தான் அவனுக்கு எல்லாவற்றையும்விட அதிக மகிழ்ச்சியை அளித்தது.

அலமேலுவுக்கு வந்த நோயினால் திருவருணையில் ஒரு பெரிய புயல் அடித்துக் கொண்டிருந்தது அல்லவா! அதில் சிக்கியிருந்த கலாசாலை பிரின்ஸிபால், ஜெயராமனின் தகப்பனார் முதலியவர்கள் ஜெயராமன் திரும்பி வந்ததைக் கண்டு சற்று நிம்மதி அடைந்தனர். பழைய கற்பனைகள் மீண்டும் அவர்களுடைய மனதில் தளிர் விட்டன.

நாடக தினத்தன்று அந்த ஊர் புதிய ஒளியுடன் காட்சி அளித்தது. கலெக்டர் விஜயத்திற்காக எல்லா இடங்களையும் அவர்கள் அலங்காரம் செய்து வைத்திருந்தனர். அன்று காலை முதல் எல்லாரும் ஜெயராமனையும், அவனுடைய திறமையினால் பள்ளிக்கூடத்திற்கு உண்டாகப் போகும் பெருமையையும் பற்றிப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அவனும் தன்னுடைய பாகத்தை ஒரு தடவைக்கு இரண்டு தடவையாக ஒத்திகை நடத்திப் பார்த்துக் கொண்டிருந்தான். எந்த இடத்தில் எப்படி நடித்தால் நன்றாக இருக்கும் என்று புத்தகத்தை வைத்துக் கொண்டு நன்றாகச் சிந்தித்தான். அவ்வளவுக்கும் நடுவில் அவனுடைய மனதில் ஒரு காரணமற்ற கிளர்ச்சி அடிக்கடி தோன்றிக் கொண்டே இருந்தது.

கலாசாலையிலிருந்து மாலை நான்கு மணிக்கு மோட்டார் வந்தது. அப்போது ஆரம்பித்தால்தான் வேஷம் போட்டு முடிப்பதற்குச் சரியாக இருக்கும் என்று அவர்கள் 'கார்' அனுப்பியிருந்தார்கள். ஜெயராமன் அதில் ஏறி உட்கார்ந்து கொண்டான். அதே சமயத்தில் பின்னாலிருந்து "சார்" என்று ஒருவன் குரல் கொடுத்தான். அவன் காக்கி உடை தரித்து சைகிளில் வந்திருந்தான்.

தனக்கு வந்திருந்த தந்தியை ஜெயராமன் அவசர அவசரமாகப் பிரித்துப் பார்த்தான். "அலமு அபாயம்" என்ற இரண்டு வார்த்தைகள் அதில் இருந்தன. அவைகளுக்கு என்ன அர்த்தம் என்று புரியாததைப் போல், அந்த தந்தியையே பார்த்துக் கொண்டு சில நிமிஷங்கள் அவன் உட்கார்ந்திருந்தான். அருகிலேயே அவனுடைய தகப்பனாரும் உட்கார்ந்திருந்தார்.

"இப்போது என்ன செய்கிறது, அப்பா?" என்று அவன் கேட்டான்.

"இப்போது ஊருக்குப் போவதற்கு ரயில் கூடக் கிடையாதே! நாளைக் காலை ஒன்பது மணிக்குத் தான் புறப்படலாம். அது வரை கடவுள்தான் துணை" என்றார் அவர்.

மோட்டார் புறப்பட்டது. கலாசாலைக்கு அவர்கள் சென்றதும் அங்கிருந்த நண்பர்களும் மற்றவர்களும் அவர்களைச் சூழ்ந்து கொண்டனர். அன்றைய நாடகம் வெகு அற்புதமாக அமைந்தது. மிக உணர்ச்சியுடன் அன்றைக்கு ஜெயராமன் நடித்தான் என்று அங்கிருந்தவர்கள் கூறினார்கள். ஆனால் முடுக்கி விட்ட யந்திரத்தைப் போல ஜெயராமன் தன்னுடைய பாகத்தை நடித்தான். அன்றைக்கு அவனுடைய மனநிலை இருந்ததற்கு ஏற்றபடிதான் கதையும் அமைந்திருந்தது. அதனால் அவன் நன்றாக நடித்ததாக எல்லாரும் கூறினர்.

குடும்பத்தைக் கவனிக்காமல் துன்மார்க்கத்தில் ஆழ்ந்திருந்த ஒருவன், வாழ்க்கையில் பலவித அனுபவங்களுக்கு உள்ளாகி, பிறகு மனைவியைச் சந்தித்து அவளிடம் தான் செய்த அநீதியை ஒப்புக் கொள்ளுவதாகவும், கடைசியில் அவர்கள் சந்தோஷ வாழ்க்கை நடத்துவதாகவும் கதையை முடித்திருந்தேன்.

நான் முதலில் கதையை முடித்திருந்த விதம் வேறு. துன்மார்க்கத்தில் இறங்கிய கணவன் தன்னுடைய தீச்செயல்களுக்கு இரையாகி விடுவதாகவும், மனைவியை அவன் சந்திக்க முடியாமல் போகிறதென்றும் நான் அதை எழுதியிருந்தேன். சில நண்பர்கள் அதை ஆட்சேபித்தனர். நீதிக்கும் இயற்கைக்கும் அது மாறுபட்டதென்று அவர்கள் அபிப்பிராயப் பட்டனர். "அவன் தீய வழிகளில் சென்றதற்கு அவனுடைய அனுபவங்களே போதிய தண்டனை அளித்து விட்டன. வாழ்க்கையில் அவன் அடைந்த கஷ்டங்களே போதுமானவை. அவ்வளவு கஷ்டப்பட்ட பிறகு மனைவி மக்களைச் சந்திப்பதாகக் கதையை முடித்து விடுங்கள். அதுதான் இயற்கையாக இருக்கும்" என்று நண்பர்கள் வற்புறுத்தினர்கள். நானும் அதற்குச் சம்மதித்தேன்.

நாடகத்தில் மனைவியிடமிருந்து கடிதம் வரப்போகிறதென்று கதாநாயகன் காத்துக் கொண்டிருந்த கட்டம்.

அதே சமயத்தில் தபாலாபீஸிலிருந்து ஜெயராமனுக்கு ஒரு தந்தி உண்மையாகவே வந்தது. அது என்ன தந்தியாக இருக்கும் என்று அங்கிருந்த ஆசிரியருக்குத் தெரியாது. எனவே ஏதோ ஒரு பொய்க் கடிதத்தைக் கொடுப்பதற்குப் பதிலாக, உண்மையாகவே வந்த தந்தியைக் கொடுத்தால் இரண்டு வகைகளில் அது பலன் அளிக்கும் என்று அந்த ஆசிரியர் நம்பினார். அதாவது ஊரிலிருந்து வந்த தந்தியை ஜாடையாக அறிவித்த மாதிரியும் இருக்கும்; நாடகம் பார்ப்பவர்கள் எதிர்பார்த்தபடி கடிதம் வந்ததாகவும் இருக்கும் என்று அவர் நினைத்தார். ஆகவே, அவர் வேலைக்காரன் வேஷத்தில் இருந்தவனைக் கூப்பிட்டு, "இந்தத் தந்தியை ஜெயராமனிடம் கொடு" என்று திரை மறைவிலிருந்தபடியே ரகசியமாகக் கூறினார்.

தந்தியைப் பார்த்ததும் அங்கிருந்த மேடையும், ஜனங்களும் திடீரென்று மறைந்து விட்டதைப் போல் ஜெயராமனுக்குத் தோன்றிற்று. சூரிய சந்திரர்களைப் போல் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்த மின்சார விளக்குகள் அந்த க்ஷணத்தில் அணைந்து விட்டதாக அவனுக்கு உணர்ச்சி ஏற்பட்டது. "ஆ!" என்று அலறிக் கொண்டே ஜெயராமன் அடுத்த கணத்தில் மூர்ச்சையாகி விட்டான். எதிர்பாராத இந்த சம்பவத்தைக் கண்ட திரை இழுப்பவன் கைகழுவித் திரையைப் போட்டு விட்டான். நாடகம் முடிந்துவிட்டதாக நினைத்து ஜனங்கள் எழுந்து விட்டனர்.

* * *

நான் எழுதியிருந்ததற்கு மாறாகக் கதை முடிந்துவிட்டது. ஆரம்பத்தில் கூறிய நண்பர் அதைத்தான் நன்றாக இல்லை என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால் அதற்கு நானா பழி?

ஜெயராமன், தன் மனைவியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்ததால், இரண்டாவதாக வந்த தந்தி வெகு துயரமான செய்தி கொண்டு வரும் தந்தியாகத்தான் இருக்க வேண்டும் என்று நிர்மானித்துத் தந்தியைப் பிரித்துப் பார்க்காமலே மூர்ச்சையாகி விழுந்து விட்டான். உண்மையில் அவனுடைய நண்பன் ஒருவன் அன்று அவனுடைய நடிப்பு வெகு வெற்றிகரமாக இருக்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திப்பதாக அடித்திருந்தார். அவ்வளவுதான்.

எனினும், கதை இயற்கையாக முடிய வேண்டிய முறையில் சற்றும் எதிர்பாராத காரணங்களால் முடிந்து விட்டது என்பதில் எனக்கு வெகு திருப்தி!

கம்பர் தரும் காட்சி

229. இராவணன் எவன் தெரியுமா?

டி.கே.சி

சீதா பிராட்டியிடம் அனுமன் மேலும் சொல்லுகிறான் :

எதிர்காலத்தில் நடக்கும் யுத்தம் கண்ணுக்குத் தெரிகிறது. அரக்கர்களது உடம்பு வெட்டுப் படுகின்றன. இரத்தம் பெருகி பெரிய பெரிய மடுக்களாக நிற்கின்றன.

"புளிக்கும் கண்டகர்
புண் ணீ ருள்
குளிக்கும் பேய்குடை
யுந் தோ றும்
ஒளிக்கும் தேவர்
உவந் துள் ளம்
களிக்கும் நல்வினை
கா ணு யோ."

[புளிக்கும் கண்டகர் புண்ணீருள் : அருவருப்பான அரக்கரது இரத்த மடுக்களில்; குளிக்கும் பேய் குடையுந் தோறும் : நின்று குளிக்கும் பேய்கள் நீந்தும் போதெல்லாம்; ஒளிக்கும் தேவர் : அரக்கர்களுக்காகப் பயந்து ஒளிந்து கொண்டிருக்கிற தேவர்கள்; உவந்து உள்ளம் களிக்கும் : மனம் உவந்து உள்ளத்தில் ஆனந்தம் பெருகுவதற்குக் காரணமான; நல்வினை காணுயோ : தர்மமான வீரச் செயலைக் காண்.: போகிறாய் அல்லவா.]

சீதையினுடைய மனசில் உண்டான சந்தேகத்தை நிவர்த்தி செய்யும்படியான முறையில் பேசுகிறான் அனுமன். சீதைக்கு உறுதி உண்டாகாமல் இருக்க முடியாது பேச்சைக் கேட்ட பிறகு.

அதன்மேல் சீதையிடம் ஒரு மாசம் கூடக் காத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை என்று சொல்லுகிறான்.

"ஈண்டொரு திங்கள் இவ்
இடரின் வைகுதல்
வேண்டுவ(து) அன்று, நான்
விரைவின் வீரனைக்
காண்டலே குறைவு, பின்
காலம் வேண்டுமோ ;
ஆண்டகை இனியொரு
பொழுதும் ஆற்றுமோ."

[ஈண்டொரு திங்கள் இடரின் வைகுதல் வேண்டுவதன்று: இந்த இடத்தில் ஒரு மாசம் கூடத் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருப்பது அவசியமில்லை; நான் விரைவின் வீரனைக் காண்டலே குறை: நான் இப்படியே போய் ராமனைச் சந்திக்க வேண்டியதுதான் பாக்கி; பின் காலம் வேண்டுமோ: அதற்குப் பிறகு அவன் இங்கே வருவதற்கு நான் நக்ஷத்திரம் என்று குறிப் போடுகிறது உண்டா? ஆண்தகை இனியொரு பொழுதும் ஆற்றுமோ: வீரனுகிய ராமன் ஒரு விநாடி நாமதிப்பானு? — ஒரு விநாடி நாமதத்தைச் சகிப்பானு?

ஒரு மாதத்திற்குள் வந்து உன்னை மீட்கவில்லை என்று வைத்துக்கொள்ளுவோம். அதனுல் என்ன ஏற்படும் தெரியுமா?

"குராவரும் குழலி! அக்
குறித்த நாளினே,
விராவரும் நெடுஞ்சிறை
மீட்டி லான் எனில்,
பராவரும் பழியொடும்
பாவம் பற்றுதற்(கு)
இராவணன் அவன், இவன்
இராமன்" என்றனன்.

[குராவரும் குழலி: குரவ மலர் வைத்துப் பார்க்க வேண்டிய அத்தனை அழகு வாய்ந்த கூந்தலை யுடையவளே; அக் குறித்த நாளினே: நீ குறித்த அந்த கெடுவுக்குள்; விராவரும் நெடுஞ்சிறை: எங்கே போனாலும் சிறைதான் என்று சொல்லக்கூடிய இந்த நிலையை விட்டு; மீட்டிலான் எனில்: உன்னை மீட்காமல் இருந்தால்; பராவரும் பழியொடும்: உலகம் எங்குமே சொல்லும் பழியோடு; பராவரும்: பரவி வரும்; பாவம் பற்றுதற்கு இராவணன் அவன்: பாவத்துக்கு உள்ளாவதற்கான இராவணன் அங்கே இருக்கிற ராமன்; பிறகு என்ன? இவன் இராமன்: இங்கே இருக்கிற பாதகன் ராவணனே ராமன் என்றுகூடச் சொல்லிவிடலாம்.]

மீட்காமல் இருப்பதைவிட கேவலமான காரியம் உலகத்திலேயே இல்லை என்ற பாவம் செய்யுளில் அபூர்வமாய்க் கிடக்கிறது.

"ஓவல்டின் தினந்தோறும் லக்ஷக்கணக்கான குடும்பங்களுக்கு

ஆரோக்கியத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறது.

[illegible]

[illegible]

[illegible]

'ஓவல்டின்'

'OVALTINE பலவிருத்தி ஆகார பானம்'

டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :

ரெலாம்ஸ் டிரேடிங் கம்பெனி (இந்தியா) லிமிடெட்., தபால்பெட்டி நெ. 1205, மதராஸ். மற்றும் பம்பாய், கராச்சி, கல்கத்தாவிலும். தி இங்லிஷ் & ஸ்காட்டிஷ் ஜாயின்ட் கோஆபரேடிவ் ஹோல்சேல் சொஸைட்டி லிமிடெட்., கள்ளிக்கோட்டை (மலபார் கோஸ்டுக்கு)

இந்தியன்

மாதம் இரு முறைப் பத்திரிகை

15-11-48 இதழில் ஸ்ரீமதி அலர்மேலு தேவி எழுதிய

புது யுகம்

என்னும் கவர்ச்சி மிகுந்த தொடர் கதை ஆரம்பமாகிறது

1-1-49 இதழில் ஸ்ரீமதி ராஜம் கிருஷ்ணன் எழுதிய

தியாகி

என்னும் அற்புத நவீனம் ஆரம்பமாகிறது

வருஷ சந்தா : ரூ. 3-0-0 :: ஆறு மாத சந்தா : ரூ. 1-8-0

(ஏஜென்ஸி இல்லாத ஊர்களில் ஏஜெண்டுகள் தேவை)

இந்தியன் : புதுமுறை வெளியீடு : சென்னை-17

①

குழந்தை அழுகிறது

(ஒரு காரணமுமின்றி)

②

அதற்கு

கிரைப் ஸிரப்

கொடுங்கள் (அருசி யில்லாதது)

③

குழந்தை சிரிக்கிறது

ஒரு I.T.L. தயாரிப்பு

தயாரிப்பவர்கள் :
மைசூர் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங்
லாபரடேரி லிட்., மல்லேஸ்வரம்,
பெங்களூர்

ஒரிஸ்ஸா, நிஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாடு, முதலிய இடங்களுக்கு ஏஜெண்டுகள் :

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

பேர்ணாம்பூர் - செகந்திராபாத்

பெஜவாடா - மதுரை

மதராஸ் ஏஜண்டு:
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
பைகிராப்ட்ஸ் ரோடு
திருவல்லிக்கேணி :: மதராஸ்

கோவை, நீலகிரி ஜில்லாக்கள் & பாலக்காடுக்கு ஏஜண்டு.
B. பாலபட்டாபி
(Estd. 1933)
P. B. No. 182, கோயமுத்தூர்

அஜீரணமா?

வயிற்றில் அதிக அமிலம் சேருவதால் எதிர்ச்சல், வாயு உபத்திரவம் இதர உபாதைகளும் ஏற்படலாம். அதை நிவர்த்திக்க "பிஸ்மாக்" போன்ற மாற்று இல்லை. வயிறு சர்வ வேலை செய்கிறது. வயிற்று கோளாறால் அவதிப்படுபவர்களுக்கு "பிஸ்மாக்" சிபார்சு செய்கிறேன். பரிபுக்கள் முன்பே நிமிஷங்களில் குணம் தெரியும்.

உங்களுக்கு வேண்டியது

எல்லா கெமிஸ்டுகளிடமும் ஸ்டோர்களிலும் பவுடராகவும் மாத்திரைகளாகவும் கிடைக்கும்.

BISMAG

சோல் ஏஜண்டுகள்:

ஜியாப்ரே மானர்ஸ் & கோ., லிட்.

பம்பாய்-கல்கத்தா-மதராஸ்-லாகூர்

எந்த வேகத்துக்கும் தகுதியான ஓட்டம்

ஆனால் ஒருபோதும் அதிகமாக மை கொட்டாது

நீங்கள் வெகு வேகமாக எழுதுபவராயினும் சரி, அல்லது மெதுவாக எழுதுபவராயினும் சரி, மெண்ட்மோர் ஆடோ-ஃப்ளோ பேனாவில் புத்தம் புதிதாக வெகு நவீன முறையில், நிப்புக்குக் கீழ் அமைக்கப்பட்ட நாக்கு, எழுதும் சக்திக்கு ஏற்றபடி, சுலபமாகவும், ஒரே சீரானமாகவும் மைக் கசிவு ஏற்படுமாறு செய்யப்பட்டுள்ளது. இந்த நவீன அடிப்படை மாறுதல், நிப்பின் நுனியில் அதிக மை சேமிப்பைத் தடுப்பதோடு அல்லாமல் கடைசி ஒரு துளி மை தீரும் வரை ஒரே சீரானமாயும் ஒழுங்காகவும் மைக் கசிவு ஏற்படும்படி உதவுகிறது. மெண்ட்மோர் பேனாக்களில் மட்டுமே எவ்விதக் கஷ்டமுமில்லாமல், இந்த கைய அமைப்பு பொருத்தப்பட்டுள்ளது.

ஆஸ்மி இரிடியம் தோய்க்கப்பட்ட 14 காரெட் கெட்டித் தங்க நிப்புடன் கூடியது. ரூ. 15/-

மை கசிதல் நவீனமாக நிப்பின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நாக்கு மூலம் நன்கு சப்ளை செய்யப்படுகிறது.

மெண்ட்மோர்
ஆடோ - ஃப்ளோ
பேனாவுடன் பேனாக்கள்

MENTMORE

இங்கிலாந்தில் செய்யப்பட்டது.

ஃபுக்லர் & பீப்ஸ் (இந்தியா) லிமிடெட்.

15, கச்சூராம செட்டித் தெரு, மதராஸ்-1

டயபெப்ஸின்

ஆகாரம் சரிவர ஜீரணமாக டயஸ்டாஸ், பெப்ஸின் என்னும் இருவகைப் பொருள்கள் அத்யாவசியமானவை. இவைகள் இரண்டும் உயர்ந்த ரசாயன முறையில் சேர்ந்தது தான் டயபெப்ஸின். ஆகாரத்துக்குப் பின் ஒரு டீஸ்பூன் டயபெப்ஸின் உட்கொண்டால் ஜீரணச் செயல் நடைமுறையே ஆரம்பித்து, பாக்கி ஜீரண வேலை வயிற்றுக்கு மிக எளிதாகிறது. உங்கள் ஆகாரத்தின் முழுப் போஷணையும் அடைய இதுவே சிறந்த மார்க்கம்.

யூனியன் டிரக், கல்கத்தா

ஏஜண்டுகள்: அப்பா அண்ட் கோ., மதராஸ்
மற்றும் எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

UNION DRUG. CALCUTTA

ரூ. 22/8 பெறுமானமுள்ள கை கெடிகாரம் இனாம்
"பூஜா" விழாவையொட்டி 15 தினங்களுக்கு மாத்திரம் இச்சலுகை!

முதன் முதலாக இப்போதுதான் மேற்கண்ட கெடியாரங்களை பத்து வருடத்திற்கு முன்பிருந்த விலைக்கே விற்பனை செய்கிறோம். எல்லா கெடியாரங்களும் உன்னதமான ஸ்விஸ் வேலைப்பாட்டுடனும், பினாஸ்டிக் பாண்டுடன் வெல்வெட் கேஸில் அளிக்கப்படுகின்றது. மூன்று வருஷ உத்தரவாதம்.

நெ. 122 நீண்ட சதுர வடிவம்

5 ஜூவெல்ஸ்	குரோமியம்	32/-	ரோல்டுகோல்டு	38/-
7 "	" உயர்ந்தது	44/-	"	55/-
16 "	"	68/-	"	72/-

நெ. 121 (டோனு)

5 ஜூவெல்ஸ்	குரோமியம்	37/-	ரோல்டுகோல்டு	44/-
7 "	" உயர்ந்தது	46/-	"	58/-
16 "	"	60/-	"	75/-

நெ. 123 தட்டை வடிவம் 4 ஜூவெல்ஸ் 28/-

7 ஜூவெல்ஸ்	குரோமியம்	35/-	ரோல்டுகோல்டு	48/-
16 "	"	37/-	"	60/-

நெ. 124 (சைஸ் 13)

குரோமியம் கேஸ்	18/8/	ரேடியம்	20/-
ஸெண்டர் ஸெகண்ட்	22/8/	"	24/-

அலாரம் டைம் பீஸ் 16/- சற்று உயர்ந்தது 20/- மிகவும் உயர்ந்தது 25/-
பாக்கிங், தபால் செலவு அணா 12 பிரத்யேகம். சேர்ந்தாற்போல் மூன்று கெடிகாரங்களுக்கு ஆர்டர் செய்தால் 22/8/- பெறுமானமுள்ள கடிகாரம் ஒன்று இலவசமாக அளிக்கப்படும்.

H. DAVID CO, Post Box No. 11424, CALCUTTA

அம்மா, உனக்குச் சகலமும் தெரிந்ததுதான் !

பூரண ஆரோக்கியமும் ஜொலிக்கும் கண்களுடன் கூடிய மலர்ந்த முகமும் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் குடல்கள் சரிவர வேலை செய்வதைப் பொறுத்துள்ளது. மலச்சிக்கல் ஏற்படாமல் குடல்கள் சரிவர வேலை செய்வதற்கு குழந்தைகள் விரும்பும் போனேமின்ட்தான் மிக எளிய சாதனம்.

சுலபமாக
மலமிளக்கும்
உன்னத சஞ்சீவி

போனேமின்ட்
லாக்ஸேடிவ் சூயிங் கம்

ரூ. 1—2—0, ரூ. 0—7—0 ஆகிய இரு சைஸ்களில் எங்கும் கிடைக்கும்

சென்னை மாகாணத்துக்கு விற்பனை ஏஜன்டுகள் :
ஓரியன்டல் மர்க்கன்டைல் ஏஜன்ஸி, 99-A, அரமனைக்காரத் தெரு, மதராஸ்

No. 3.

ரமணி
பேபி கிரைப்
குழந்தைகளுக்கேற்படும் கோளாறுகளுக்கு



குழந்தை சிறிது சிணுங்கினாலும் விஷயம் தெரிந்த தாயார் உடனே ரமணி "பேபி கிரைப்"பைக் குழந்தைக்குக் கொடுப்பாள். உடனே அது குணமளிக்கும். மலபந்தம், கடுப்பு, வயிற்றுப்போக்கு, வயிறு உப்புதல் போன்ற வயிற்றுக் கோளாறுகளுக்கு கைகண்ட ஔஷதம்.

தயாரிப்பவர்கள் :
சௌத் இந்தியன் மான்யுபாக்சரிங் கம்பெனி,
மதுரை

ஏஜன்டுகள் : மெஸர்ஸ். சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ் ஏஜென்ஸீஸ், பெஜவாடா ; ஸ்ரீ கிரிஜா மெடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் ஸிடி ; மெஸர்ஸ். ராஜன் டிரக் ஸ்டோர்ஸ், மதராஸ்



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



KALKI நவம்பர் 7, 1948 4 அணா

(ESTD: 1907)



லோகல் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்டுரோடு, ராயப்பேட்டை
மயிலாப்பூர், தியாகராயநகர், புரசவாக்கம், எழும்பூர் & ராயபுரம்

சென்னை நகரத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும் மபசலிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 53,00,000
ரிசர்வ் நிதி	ரூ. 62,00,000

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்.

என். கோபால அய்யர், செக்ரடரி

தி இந்தியன் பாங்க் லிட்.,

தலைமை ஆபீஸ் : இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்.
நார்த் பீச் ரோடு, மதறாஸ்.

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிட்.

மதுரை - தூத்துக்குடி - அம்பாசமுத்திரம்

5,00,000 நூற்கும் கதிர்கள்   நம்பர் 80 வரை நூல்கள்

எங்களுடைய விசேஷமான நூல்கள்: ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக்கேற்றிய நூல்.

நாங்கள் சப்ளை செய்வது: கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள் கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருது வான சன்ன நூல்கள். எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதி யாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றவை. நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

மானேஜர்கள் : ஏ. & எப். ஹார்வி லிமிடெட்.

"லங்கர் மார்க்"

வாசனை பாக்குத் தூள்

★

அசல்

பாதாம் எண்ணை

★

ரோஜாப்பூ

குல்கந்து

★

ரஷிக்லால் & கோ.,

கோவிந்தப்ப நாயக்கன் தெரு

மதராஸ் - 1

தலையில்

தலை மயிர் தெரிகிறதா, அல்லது அடித் தலை தெரிகிறதா? அடித் தலை புலப்படும் பக்ஷத்தில், உதிர்ந்த கேச ராசிகளுக்குப் பதில் புதுக் கூந்தல் முளைக்க வில்லை என்பது நிசசயம். அச் சமயம் கேசவர்த்தினியைக் கொண்டு பரிஹரிக்காமல், பாதி வழுக்கையைப் பூரண வழுக்கை யாக விடுவானேன்? வழுக்கை யால் ஏற்படும் இழத் தோற்றத் தையும் அனுபவிப்பானேன்?

உதிர்ந்த இலைகள் மறுபடி முளைந்து விடும், ஆனால் சில சமயங்களில் உதிர்ந்த கூந்தல் சிகிச்சை யில்லாமல் முளைப்ப தில்லை. அச்சமயங்களில் கேச வர்த்தினியை உபயோகித்து மயிர் உதிர்வதை நிறுத்தி, இளம் கூந்தலையும் இளமையும் ஒருங்கே பெறுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 14

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்

தென் இந்திய ரஸாயனசாலை

ஆர். எஸ். புரம் - கோயமுத்தூர்

REGD. NO. M. 4392